0834

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

# திருக்குறள் வசனச் சுருக்கம்



ஆக்கியோன்:
வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கம்
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/834

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

# திருக்குறள்
## வசனச்சுருக்கம்

ஆக்கியோன் :
வேலணையூர் **பண்டிதர் மா. மாணிக்கம்**
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

தெய்வப் புலவர் திருவள்ளுவர் உலகுக் களித்த திருக்குறளின் பொழிப்பை, கூடிய அளவு சுருக்கித் தந்து பாமர மக்களும் அதனை அறிந்து தம் வாழ்வை சிறப்புற அமைக்க வேண்டும் என்ற உள் உணர்வு என் மனதில் பல வருடங்களாக ஓடிக் கொண்டிருந்தது. பெருங்குளத்து முத்துமாரி அம்மனின் அருளும், அழகொல்லைப் பிள்ளையாரினது திருவருளும் கைகூடிவர, எனது இந்த உணர்வு செயல் வடிவம் பெற்று இன்று சிறு நூல் வடிவில் வெளிவருவதை எண்ணி நான் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

இங்ஙனம்,
நூலாசிரியர்
**பண்டிதர்-மா. மாணிக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

உலகம் உய்ய உதித்தவர்
வள்ளுவக் கடவுளார்
அவர் தந்த திருக்குறள்
தமிழினத்தை மட்டுமன்றி
மனித குலம் முழுவதையம்
வாழ்விக்க வல்லது.
இயற்கையின் உண்மை உணர்ந்து
இவை செய்க
இவை செயற்க
என வாழ்வின் வெற்றிக்காய்
அறம் வகுத்து நம்மை அ ப்படுத்தினார் வள்ளுவர்
அன்நூலின் பெருமையை
இன்றுவரை நம் இனம் முழுமையாய் உணரவில்லை
வள்ளுவத்தை
வெறும் மொழி நூலாய் கருதி முடக்கி விட்டோம்
அறியாமையின் அவலம்
பெரும் பொக்கிஷத்தை புதையுண்ண விட்டுத் தீராப் பழி கொண்டோம்.
இப்புதிய நூற்றாண்டிலேனும்
அப்பழி துடைக்க முயல்வது
நம் தலைக்கடனாம்
இன்றைய இளைய தலைமுறை
வள்ளுவத்திற்குள் புகும் வலிமையின்றி
மொழியால் நலிந்தது.
உரை செய்து உதவிய
பரிமேழளகர் போன்ற உரையாசிரியர் தம்
உரைத் தமிழும் புரியாத நிலையில்
இன்றைய இளைஞர்கள்
இந்நிலையில் அவ்வுரையாசிரியர்கள் காட்டும்
நுண்மைகளோடு
குறளை விளங்க விரும்புவார்க்கும்
அது ஆகாத காரியமாயிற்று
இப்பேரிடர் நீக்கி
நம் இளைய தலைமுறைக்குத்
துணைபுரிய பெருங்கருணையோடு
முன் வந்துள்ளார்
பெரியார் பண்டிதர் மா. மாணிக்கம் அவர்கள்
இன்றைய இளைஞர்க்கு புரியம்
வசன நடையில்
குறள் காட்டும் பெரும் பொருளை
சுருக்கத் தந்திருக்கும் இச்செயல்
காலத்தாற் செய்த ஓர் உதவி
இக் கைங்கரியத்தை தமிழினம்
நன்றியோடு என்றும் நினைக்கும் என்பதில் ஐயம் இல்லை
அப்பெரியார் திருவடிகளை
வாழ்த்தி வணங்குகிறேன்.

அன்பன்
**இ. ஜெயராஜ்**
கம்பன் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அன்பும், அறமும் வாழ்வின் பண்பும் பயனும் என்று துணிந்தவர்களாய்; நீதிநெறியில் வாழ்பவர்களாய்: "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", எனும் பரந்த கோட்பாடும் செய்ற்பாடும் உடையர்களாய் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனும் தமிழர்கள் என்று சொல்லப்படுபவர்கள்.

அத்தமிழர்கள் கற்று உணர்தற்கும், கற்றுணர்ந்தபடி ஒழுகுதற்கும் அத்தியாவசியமாய் இருக்கும் வாழ்வியல் நூல், திருக்குறள். அந்நூல் தமிழ் மறை எனப் போற்றப்படுகிறது. உண்மையில் அது, உலக மக்கள் அனைவருக்கும் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக் காட்டும் நூலாகவும் விளங்குகிறது. அதனால், திருக்குறள், உலகப் பொது மறையாகவும் உள்ளது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அடைதல் மனித வாழ்க்கைக் குறிக்கோள்களும் பயன்களும் ஆகும். திருக்குறள் இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருள்களையும் உலகத்தவர்க்கு எடுத்துக் கூறுகிறது. அதனால் முப்பால் நூல் எனப்படுகிறது.

வீடு என்பது சிந்தையால் அறியவும், மொழியினால் கூறவும் முடியாதது என்பதால், வீடு பற்றித் திருக்குறள் குறிப்பிடாது விட்டது போலும். எனினும், வீட்டுக்குக் காரணமாயுள்ள துறவால் மாத்திரம் அதனைச் சிறிது விளங்கப்படுத்தலாம் என இந்நூலின் ஆசிரியர் கூறுவது நோக்கற்பாலது.

பொருள், இன்பம் என்பவற்றை அற வழியில் ஈட்டி, அறவழியில் அனுபவிப்பது நல்லொழுக்கத்தின்பாற்பட்டது. ஒருவன் தனக்குரிய நல்லொழுக்கத்தில் நிற்க அறம் வளரும். அறம் வளரப் பாவந்தேயும். பாவந்தேய அறியாமை நீங்கும்; அறிவு ஒளிரும். அப்பொழுது நித்தியம் எது? அநித்தியம் எது என்பதும்; நிலையில்லா இன்பத்தில் வெறுப்பும் ஏற்படும். இது ஏற்பட நிலையான வீட்டின்பத்தில் விருப்புண்டாகும். அதற்குக் காரணமாகவுள்ள யோகமுயற்சி உண்டாகும். இதனால் மெய்யுணர்வு தோன்றும். மெய்யை உணர்ந்ததும், யான் என்ற அகப்பற்றும், எனது என்ற புறப்பற்றும் நீங்கும். இந்தப் பற்று நீங்குதலையே, விடுதல் அல்லது வீடு என்பர்.

ஒரு பண்பட்ட, உயர்ந்த, விழுமிய மனித வாழ்வியலை அமைக்க உதவும் திருக்குறள் நூல், தனி மனிதன், குடும்பம், சமூகம், தேசம், உலகம் ஆகிய தளங்களில் ஒருவர் பேண வேண்டிய மனிதப் பண்புகள், விழுமியங்கள், கடமைகள், பொறுப்புக்கள், ஒழுக்கங்கள், ஆசாரங்கள் என்பவற்றை முன்வைத்துள்ளது. வையத்துள் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்லவண்ணம் வாழவும், அதன் பேறாகத் தெய்வநிலையை எய்தவும் திருக்குறள் உலக மாந்தர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

இந்நூலில் கூறப்பட்டுள்ள அனைத்தும் நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடியனவாய் இருத்தல் அதன் பெருஞ்சிறப்பாகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

என்னும் குறளில் கற்றல், நிற்றல் ஆகிய இரண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கற்றல், நிற்றல் (ஒழுகுதல்) என்பன வாழ்க்கை எனும் நாணயத்தின் இருபக்கங்கள். இவற்றில் ஒன்று தேய்ந்தாலும், வாழ்க்கை அதன் பெறுமானத்தை இழந்து விடும் என்பது திருவள்ளுவரின் ஆணித்தரமான கருத்து. அதனாலேயே, வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக முடியுமானவற்றை கூறியுள்ளார்.

திருக்குறள், கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து, எல்லோருக்கும், எந்நிலையிலும், எக்காலத்திலும் பொருத்தப்பாடுடையதாக திகழ்வது அதன் மற்றொரு சிறப்பாகும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மகாகவி பாரதியாரின், உலக மகாகவி திருவள்ளுவர் பற்றிய மதிப்பீடு திருவள்ளுவர் உலக மகாகவியானது எதனால்? அவர் இயற்றிய திருக்குறளால் அன்றோ!

திருக்குறள் நமது சொத்து என்பதாலோ, என்னவோ, அதன் அருமை பெருமைகள் நமக்குத் தெரியாதுள்ளன.

திருக்குறளைக் கற்றுத், தெளிந்து, அதன்படி ஒழுகி வந்திருந்தால் தமிழ் மக்களுக்கு இன்றைய நிர்க்கதி ஏற்பட்டிருக்குமா?

திருக்குறள் கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான். என்ற கூற்று எத்துணை பொருள் பொதிந்தது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

இத்தகைய பெருஞ்சிறப்பும் அருமை பெருமைகளும் உடைய திருக்குறள் நூல், "பத்திய ரூபமாய்" (செய்யுள் வடிவில்) இருத்தலால், நிகண்டு மற்றும் இலக்கண நூல்களில் தேர்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி உள்ளவர்களுக்கே, அதனைக் கற்று விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருந்தது. ஏனையோருக்கு அது சாத்தியமாகா மலிருந்தது. இதனை உணர்ந்த பரிமேலழகர் முதலிய பழைய உரையாசிரியர்கள் பத்துப்பேர் "கத்தியரூபமாய்" (உரைநடையில்) விளக்கவுரை எழுதினார்கள். அவற்றைக் கற்று அறிவதற்கும் கல்வியறிவு தேவைப்பட்டது. பின்வந்த பலருங் கூட, உரைகளைப் பொருள் விளங்கும் விதத்திலும், எளிய மொழிநடையிலும் எழுதியுள்ளனர். அவை யாவும் குறட்பாக்களுக்குப் பதவுரையாகவும், பொழிப்புரையாகவும், தெளிவுரை யாகவுமே உள்ளன.

திருக்குறட்பாக்களை மேலும் இலகுவாக்கி, எளிமையாக்கி, கற்றோர், குறைந்த கல்வியுடையோர் யாவரும் எக்காலத்தும், எளிதில் வாசித்து உணரும் பொருட்டும்; சாதாரண பாமரமக்களும் தாம் வாசித்தோ, பிறரின் உதவியைப் பெற்றோ உணரும் பொருட்டும் மிக எளிய தமிழ்மொழி நடையில், திருக்குறள் வசனச் சுருக்கம் ஒன்றைச் செய்து யாராவது தர மாட்டார்களோ என்று எண்ணியிருந்த வேளை, இறைவன் திருவருளால், தமிழ் இலக்கிய இலக்கண வித்தகர், பண்டிதர், அளவெட்டியூர் மா. மாணிக்கம் அவர்கள், அப்பெருங் கைங்கரியத்தைச் செய்து, தமிழ் கூறும் நல்லுலகத்தின் அவசியத் தேவையை நிறைவு செய்துள்ளார். காலத்தின் தேவையாகவும் உள்ளது. பண்டிதர் அவர்கள் காலத்தினால் எமக்குச் செய்த இந்த உதவியை, ஞாலத்தின் மாணப் பெரிதாகத் தமிழுலகம் வரவேற்று மதிக்கும் என்பது உறுதி.

திருக்குறள் வசன சுருக்கம் என்னும் இந்நூல், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் மூன்றையுந் தழுவியதாக, பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல்: அரசியல், (குடிமையியில்); களவியல், கற்பியல் என்னும் அதிகாரங்களை உள்ளடக்கி யுள்ளது.

நூலாசிரியரின் புலமை, ஆழ்ந்த சிந்தனை, தெளிவு, அனுபவம், பிறருக்கு ஐயந்திரிபறச் சொல்லுந்திறன், வாசகர் நிலைக்கு இறங்கி வந்து விளக்கம் தரும் எளி வந்த தன்மை, யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் தமிழுணர்ச்சி என்பன நூலில் பளிச்சிடுகின்றன.

நான், முன்னர் கண்டறியாத, கேட்டறியாத சிலவற்றை இந்நூலில் கண்டு அறிந்துள்ளேன் என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

பண்டிதர் மா. மாணிக்கம் அவர்கள் மேலும் பல நூல்களை ஆக்கி, தமிழ் மக்களுக்கு வழங்க, இறைவன் நல்லருள் பாலிக்க வேண்டுமென இறைஞ்சி, இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

29, முதலாம் ஒழுங்கை,
தெஹிவளை,
இலங்கை.
06-08-1999

கு. சோமசுந்தரம்
- குமாரசாமி சோமசுந்தரம்
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 அறத்துப்பால்
# 1 பாயிரவியல்

அதிகாரம் 1

## கடவுள் வாழ்த்து

ஒரு புலவன் தான் எடுத்துக் கொண்ட நூல் இனிது நிறைவேறத் தான் வழிபடு கடவுளையாதல் அல்லது எடுத்துக்கொண்ட நூலின் பொருளுக்கு இயைந்த கடவுளையாதல் வாழ்த்துவது உலக மரபாகும்.

இம்முறைப்படி திருவள்ளுவர் தனது திருக்குறளில் அறம், பொருள், இன்பமென்னும் பொருள்களைச் சொல்ல வந்தபடியால் அறத்திற்கியைந்த குணம் சாதவீகம், பொருளுக்குப் பொருந்திய குணம் இராசதம், இன்பத்திற்கு இணங்கிய குணம் தாமதம். இந்த மூன்று குணங்களின் தன்மையால் முறையே, விஷ்ணு, பிரமா, உருத்திரன் என மூவராகி நிற்கும் முழுமுதற் பொருளை வாழ்த்துகிறார். ஆகவே இவரது கடவுள் வாழ்த்து பொருளுக்கு இயைந்த வாழ்த்தாகும்.

இனி, முழுமுதலாகிய இறைவன், கண்ணுக்குத் தெரியாமல் நிற்கிறார். கண்ணுக்குத் தெரியாத பொருளை கண்ணுக்குத் தெரியாத ஒரு உவமை மூலம் விளங்கப்படுத்துவது நல்லதெனத் தனது இயற்கை அறிவால் உணர்ந்த வள்ளுவர் எடுத்த உவமையைப் பார்ப்போம்.

நாம் நமது வாயைத் திறக்கும் போது 'அ' என்ற ஓசை வருவதை அறிகிறோமா? இல்லை. நன்றாக உற்று அவதானித்தால் 'அ' என்ற சத்தம் வாயைத் திறக்க வருவதை அறியலாம். இந்த 'அ' என்ற சத்தமே நாம் ஆனா என்று சொல்வதற்கும் முதலாக நிற்கின்றது. மற்றத் தமிழ் எழுத்துக்களுக்கும் வடமொழி எழுத்துக்களுக்கும் ஏன்! உலகில் உள்ள பல எழுத்துக்களுக்கும் முதலாக நிற்பதையும், மறைந்து நிற்பதையும் அறியலாம். இப்படி ஆனா என்ற சத்தம் மறைந்தும் முதலாகவும் நிற்பதுபோல இறைவன், இந்த உலகுக்கும் உயிர்கட்கும் முதலாக நிற்கிறான் என்று கடவுளை முதற்கண் வாழ்த்துகிறார். மேலுங் கடவுள் உண்மையான அறிவுடையவர், மக்களின் இதய கமலத்தில் இருப்பவர், விருப்பு வெறுப்பற்றவர், உண்மைப் புகழுடையவர், ஐம்புலன்களையும் வென்றவர், தனக்குவமை இல்லாதவர், சமுத்திரம் போன்ற தருமமுடையவர், எண்குணம் உடையவர் என அவரது இயல்பைக் கூறி வாழ்த்துகின்றார். அத்துடன் மக்களாகிய நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும் பின்வருமாறு விளக்குகின்றார்.

படித்தவன் கடவுளை மறக்கக் கூடாது. அவரது பாதத்தை மறக்கக் கூடாது. நமது தலை முதலாய உறுப்புக்களால் வணங்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். மனக் கவலை நமக்கு வேறு ஒன்றாலும் நீங்காது. கடவுள் வழிபாட்டினால் மாத்திரமே அது நீங்குமென்று அறிவு கூறுகின்றார்.

கடவுளுடைய எண் குணங்கள்:-

தன்வயத்தன், தூய உடம்பினன், பேரருளாளன், இயற்கை அறிவினன், முற்றும் உணர்பவன், முடிவற்ற ஆற்றலுடையவன், இயல்பாகவே பாசமற்றவன், அளவற்ற இன்பமுடையவன் என்பன எண் குணங்களாகு மென்று உரையாசிரியர் பரிமேலழகர் கூறுகிறார்.

இப்படிக் கடவுளை வாழ்த்திய வள்ளுவர், கடவுளதாணையால் உலகத்துயிர்கள் உய்வடைய உதவும், மழையை வாழ்த்துகின்றார். பிறப்பு இடையறாது நடைபெறுவதால், உலகத்தில் உயிர்கள் உடம்பில் தோன்று வதற்கு மழை உதவுகின்றது.

மழையே! நீ உலக உயிர்கட்கு உணவை உண்டாக்க உதவி, அவர்கட்குக் குடிக்கும் நீராகவும் இருக்கின்றாய். கமக்காரரைச் சிலபோது கெடுக்கிறாய். சிலபோது அவர்கட்கு நல்ல விளைச்சலையும் கொடுக் கிறாய். நீ இல்லையென்றால் உழ மாட்டார்கள். மழையே! நீ இல்லை யென்றால் உலகில் ஒரு புல்லைக்கூடக் காண மாட்டோம். கடல்கூட நீ பெய்யவில்லையென்றால் மீன் முதலியன தோற்றமின்றி இருக்கும். நீ பெய்யவில்லை என்றால் தேவர் கடவுளுக்குப் பூசனையுமில்லை. அத்துடன் உலகில் தானமும் தவமும் நடைபெறா, என மழையின் சிறப்பைக் கூறு கிறார்.

இதன்பின் அறமுதலாய நான்கு பிரதான பொருட்களையும், உலகினருக்கு எடுத்துக் கூறும் முற்றுந்துறந்தமுனிவர் பெருமையை எடுத்து வள்ளுவர் கூறுகிறார்.

ஒருவன் தனது வருணத்துக்குரிய ஒழுக்கத்தில் நிற்க - அறம் வளரும். அறம் வளரப் பாவம் தேயும். பாவந் தேய அறியாமை நீங்கும் அறியாமை நீங்க நித்தியம் எது, அநித்தியம் எது என்பதும், நிலையில்லா இன்பத்தில் வெறுப்பும் ஏற்படும். அது ஏற்பட வீட்டின்கண் ஆசையுண்டாகும். இந்த வீட்டுக்குரிய ஆசையுண்டாக அதற்குக் காரணமாகவுள்ள யோக முயற்சி உண்டாகும். இதனால் மெய்யுணர்வு தோன்றும். இது தோன்ற எனது என்ற புறப்பற்றும், யான் என்ற அகப்பற்றும் நீங்கும். இதுவே வீடுபேறாகும். இந்த ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களே நீத்தார் என்னும் முனிவர்களாவர்.

இப்படியான முனிவர்களின் பெருமையை எவரும் அளக்க முடியாது. இவர்கள் ஐம்புலன்களையும் வென்றவர்கள். அதனால் வலிமை யுடையவர்கள். இந்திரனைக் கூடச் சபிக்கக் கூடியவர்கள். யோகப் பயிற்சியில் வல்லவர்கள். இப்படியான தன்மை யுடையவர்களாயிருப்பதுடன் பின்வரும் பிரதான அறிவும் உடையவர்களாயிருப்பர். அது வருமாறு:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் அவரிலிருந்து மான், இதிலிருந்து அகங்காரம், இதிலிருந்து தோன்றியது தன்மாத்திரை ஐந்து. (சத்தம், ஸ்பரிசம் ரூபம், ரசம், கந்தம்) இந்தத் தன்மாத்திரைகளில் இருந்து (புலன்களில் இருந்து) பின்வரும் பதினாறு தத்துவங்கள் தோன்றின. அவை பூதம் ஐந்து, பொறி ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, மனம் ஒன்று என்பன. இவை ஒன்றினின்றும் தோன்றாத உயிர் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களையும் அறிந்த அறிவுடையவர்களாக இந்தத் துறவிகள் இருப்பர் என்கிறார். மேலும் இந்தத் துறவிகள் ஆகுக என்றால் எல்லாம் ஆகும். அழிக என்றால் எல்லாம் அழியும் எனவும். இவர்கட்குக் கோபம் வராது. வந்தால் அது ஒரு கணப்பொழுதுதான் நிற்கும். அப்படி நிற்குங் கோபத்தைக்கூட மற்றவர்கள் தாங்க மாட்டார்கள் எனவும் வள்ளுவர் நீத்தார் பெருமையை எடுத்துக் கூறுகின்றார்.

இனி, இந்த முனிவர்களால் உணர்த்தப்பட்ட பொருளும், இன்பமும் இம்மையே இன்பந் தருவன. ஆனால், அறம் இம்மையிலும் மறுமையிலும் இன்பந் தருவதால் அந்த அறத்தைப் பெருமைப் படுத்தி **அறன் வலியுறுத்தல்** என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறத் தொடங்குகின்றார்.

அறம் என்பது மனம், வாக்கு, செயல் மூன்றும் தூய்மையாக இருத்தலாகும். இவற்றில் மனம் மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். மனம் தூய்மையாக இருந்தால் வாக்கும், செயலும் தானாகவே தூய்மையாகும்.

இல்லறஞ் செய்பவன் தனது பொருளுக்கேற்பவும், துறவறஞ் செய்பவன் தனது உடல்நிலைக்கு ஏற்பவும் செய்ய வேண்டும். அறம் எப்போதும் செய்ய வேண்டும். பின் அதைச் செய்வோம் என்றிருக்கக் கூடாது. அறம் செய்தால் என்ன வரும் என்று யோசியாதே. அறஞ் செய்தவன் சிவிகையிற் போதலையும், அதைச் செய்யாதவன் அதைத் தாங்குவதையும் பார் என்கிறார் வள்ளுவர்.

பாயிரவியல் முற்றிற்று

## 2 இல்லறவியல்

திருவள்ளுவர் உலக மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற கருத்தில் ஒரு நூலை ஆக்க எண்ணித் தனது தாய்மொழியான தமிழில் திருக்குறளை ஆக்கினார்.

மானுடனாகப் பிறந்த ஒருவன் அடைய வேண்டிய பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்பதைத் தனது இயற்கை அறிவினாலும், வடமொழி நூல்களாலும் அறிந்து எதை முற்கூற வேண்டும் என்பதை யோசித்து வீடு என்பது சிந்தையாலும், மொழியாலும், முறையே அறியவும் சொல்லவும் முடியாது. வீட்டுக்குக் காரணமாகவுள்ள துறவால் மாத்திரம் சிறிது விளங்கப்படுத்தலாம் என்றுணர்ந்து அதை முதற் கூற எண்ணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துப் பொருளும் இன்பமும் இவ்வுலகில் மாத்திரம் உயிர் அனுபவிக்குமே ஒழிய மறுமைக்கு அவை உதவா. ஆனபடியால் அவைகளையும் முதற்கூற எண்ணவில்லை. அடுத்து நின்ற அறம் மாத்திரந்தான் உயிருக்கு இம்மையிலும், மறுமையிலும் உதவக்கூடியதென உறுதி கொண்டு அந்த அறத்தையே முதற் கூறத் தீர்மானித்துக் கூறத் தொடங்குகின்றார்.

அந்த அறம் என்பது யாது?

மனு முதலிய நூல்களில் ஒருவன் நன்மை என்று செய்யக் கூடியனவற்றையும், தீமை என்றறிந்து செய்யக் கூடாதவற்றையும் அறிந்து நல்லவற்றைச் செய்வதே அறமாகும் என்கிறார்.

அந்த அறமும் ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். இந்த மூன்றில் வழக்கு என்பது எனது, உனது என்பதில் மாறுபட்டு வழக்காடல். தண்டம் என்பது அந்த வழக்கை விசாரித்து தண்டனை கொடுத்தல். இந்த வழக்குந் தண்டமும் ஊருக்கு ஊர் வித்தியாசப்படும். இவைகளிலும் பார்க்க, ஒழுக்கமே எந்த ஊருக்கும் பொதுவானது. உயிரோடு இம்மையிலும், மறுமையிலும் சேர்ந்து பயனளிப்பது. ஆதலால், அறமென்பது ஒழுக்க மெனவும், அது நல்லொழுக்கமாக இருக்க வேண்டுமெனவும் கூறுகின்றார்.

இந்த நல்லொழுக்கமாகிய அறம், இல்லறம், துறவறம் என இருவகைப்படும் எனப் பிரித்து முதற்கண் இல்லறத்தைக் கூறத் தொடங்குகின்றார்.

## இல்வாழ்க்கை

இல்லாளுடன் கூடி வாழும் சிறப்பைப் பொதுவாக இந்த இல்வாழ்க்கை என்ற அதிகாரத்திற் கூறுகின்றார்.

இல்வாழ்க்கையில் அன்பும், அறமும் இருக்க வேண்டும். நற்கதி அடைய முயல்பவர்களில் இல்லறத்தவனே மேலானவன். இல்லறத்தானே தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தினர் இவர்களுடன் தன்னையும் பாதுகாக்கிறான். அறமென்றால் இல்வாழ்க்கை என்றே கூற வேண்டும். ஏனைத் துறவறமும் உலகம் பழிக்காத முறையில் நடந்தால் நல்லது. இல்லறத்தை நல்ல முறையில் நடத்துபவன் இவ்வுலகில் தேவனாக மதிக்கப்படுகின்றான்.

இவ்வாறு இல்லறத்தைப் பொதுவாகக் கூறிய வள்ளுவர் இனிச் சிறப்பு முறையிற் கூறத் தொடங்கி இல்லறத்துக்கு இன்றியமையாத வாழ்க்கைத் துணையாகிய மனைவியைப் பற்றிக் கூறப் புகுகின்றார்.

ஒரு தலைவனுக்கு ஒரு மனைவி வேண்டும். அவள் நற்குண முடையவளாய்க் கணவனது வருமானத்துக்குத் தகச் செலவு செய்ப வளாய்க் கற்பு நெறியில் தன்னைக் காத்துத் தனது கணவனை உண்டி முதலியவற்றாற் பேணித் தனது குடும்பத்துக்கு அவப் பெயர் வராமல் நடந்து, வீட்டுக் கருமங்களில் சோம்பல் அற்று வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு அதிகமான செல்வம் இருந்தும் அந்த வீட்டுப் பெண் நற்குண மற்றிருந்தால் அப்பொருளாற் பயனில்லை. கெட்ட ஒழுக்கம் ஒரு பெண்ணுக்கு இருந்தால் அவளது கணவன் பெரியவர்கட்கு முன்னே போகும்போது கூச்சப்படுவான். அப்பெண் நல்ல பிள்ளைகளைப் பெற வேண்டும். இப்பிள்ளைகள்தான் அவளது வீட்டுக்குப் பெருஞ் சிறப்பினைக் கொடுப்பவர்கள் ஆவார்.

இனி வள்ளுவர் இல்லறத்துக்குச் சிறப்புத் தரும் பிள்ளைப் பேற்றைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

அறிவுள்ள பிள்ளைகளைப் பெற்றவனே பெரிய செல்வனாவான். பிள்ளை களில் அன்பு கொண்டு அப்பிள்ளைகளை வளர்த்து, நல்லறிவு கொடுத்து ஒரு சபையிலே மேடையில் இருந்து பேசக்கூடியவனாகச் செய்வதே ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்குச் செய்யுங் கடனாகும். இப்பிள்ளையைப் பெற இவனது தந்தை என்ன தவத்தைச் செய்தான் என்று சான்றோர் சொல்லக்கூடியதாக நடப்பதே அப்பிள்ளை தனது தந்தைக்குச் செய்யும் உதவியாகும். அறிவுள்ள பிள்ளையின் நல்லுரைகள் அப்பிள்ளையின் தாய் தந்தையருக்கு இன்பம் அளிக்கும். இவர்களிலும் சான்றோருக்கு மிகவும் இனியதாக இருக்கும் என்று வள்ளுவர் தனது அநுபவத்திற் கண்டு கூறுகிறார்.

ஒரு பிள்ளையை அப்பிள்ளையின் தாய் தந்தையர் அணைக்கும்போது அவர்களது உடம்பு குளிரும். அப்பிள்ளையின் மழலைச் சொல் அவர்களது செவிக்கு இன்பமாகும். பிள்ளைகளைப் பெற்றவன் யாழையுங் குழலையும் இனியன எனக் கூறான். அப்பிள்ளைகளின் குதலை மொழிகளே மிகவும் இனியதென உணர்வான்.

இப்படிப் பிள்ளைகளைப் பெற்ற இல்லறத்தான் அப்பிள்ளைகளிலும் மனைவியிலும் கூடிய அன்பு காட்டுவான். அந்த அன்பைப் பற்றி அன்புடைமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் விளக்குகின்றார்.

பிள்ளைகளுக்கு ஒரு துன்பம் வந்ததும், தாய் தந்தையர் கண்ணீர் விடுவதைக் காண்கிறோம். இந்தக் கண்ணீர் அப்பிள்ளைகள்மீது அவர்கள் கொண்ட அன்பின் வெளிப்பாடாகும். அன்பில்லாது வாழும் வாழ்க்கை செழிப்படையாது. பார் நிலத்தில் பட்ட மரத்தை நட்டு வளர்ப்பதைப்போல அவ்வாழ்க்கை வளராது.

இந்த உயிர் உடம்பை எடுத்தது அன்பை வளர்க்க என்ற எண்ணத்தை இல்லறத்தான் எப்போதும் நினைக்க வேண்டும். பிள்ளைகளின் மீது கொண்ட அன்பு விரிந்து பிறரிடத்திலும் பரவும். அதனால் இல்லறத்தானுக்கு நல்ல நட்பினர் கிடைப்பர். அறத்துக்கு அன்பு வேண்டும். அது போலப் பகைமையை நீக்கவும் அன்பு உதவும். அது எப்படி?

இல்லறத்தானிடம் ஒருவன் தெரியாத்தனமாகக் கோபங்கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இந்த இல்லறத்தான் அவனை வெறுக்காது அவன்மீது அன்பு கொள்ள இவனது வெறுப்பும் அவனது கோபமும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான அன்புள்ளவனே அயற்றேசத்தில் இருந்து வந்த புதியவர்களை ஆதரிப்பான். விருந்தினன் என்றால் புதியவன் என்பது கருத்தாகும். அயல் வீட்டானுக்குக் கொடுக்கும் உணவை விருந்தென்று சொல்ல முடியாது. தங்க இடமின்றி. ஆதரிக்க உறவினரின்றி வருபவர்களே விருந்தினராவார். அவர்களைக் கண்டால் தெரியாதவர் என்று அலட்சியப் படுத்தாது அவர்களை விசாரித்து. அவர்களது நிலையை உணர்ந்து அவர்களைக் கூட்டி வந்து உணவு கொடுத்து. உறங்க இடம் கொடுத்து உபசரிப்பதுதான் உண்மையான விருந்தாகும். அந்த விருந்தினன் வீட்டுக்கு வந்தால் அவனைப் படலையடியிற் கண்டபோதே அன்பாகப் பார்க்க வேண்டும். மோப்ப வாடும் அனிச்சம் பூவிலும் பார்க்க மென்மையான உள்ளத்துடன் விருந்தினர் இருப்பர் என்பதை உணர்ந்து அவர்கள் மனம் மகிழ அன்போடு இல்லறத்தான் பார்க்க வேண்டும். வந்தவரை உபசரித்து விருந்து கொடுக்க வேண்டும். இப்படியான உபசரிப்புகளைப் பெரிய புராணத்திலே அதிகம் காணலாம். இப்படி விருந்து செய்பவனது வீட்டிலே இலக்குமி வீற்றிருப்பாள். அவனது வயலில் நல்ல விளைவு உண்டாகும். நல்ல உள்ளம் உடையோருக்குத் தன்னிடம் இருப்பதைக் கொண்டு அது எத்துணைச் சுவையற்றதாயினுங் கொடுத்து உண்ணச் செய்வது பெரிய தருமமாகும். அஃதாவது கறிவகை கிடைக்காதபோது கஞ்சி காய்ச்சிக் கொடுத்தாலே போதும் என்பதாகும். இப்படி விருந்து கொடுப்பவனுக்குத் தேவர் விருந்து கொடுக்க ஆசையுடன் இருப்பர்.

இப்படி விருந்து கொடுக்கும் இல்லறத்தான் அந்த விருந்தினனுக்கு இனிய சொற் கூற வேண்டும்.

தெய்வபக்தி உள்ளவனது வாயிலே பொய்யில்லாததும் அன்புடன் கூடியதுமான இனிய சொல்லே வரும். இப்படியான இனிய சொற்கள் பெரிய புராணத்திலே சிவனடியார்களது வாயில் இருந்து வந்தமையை அறியலாம். இப்படியான இனிய சொல்லுடையவன் ஒருநாளும் வறியவனாக மாட்டான். இந்த இனிய சொல் ஒருவனுக்குப் பெருமதிப்பைக் கொடுக்கும். இதை உணர்ந்தவன் வன்சொல் பேச மாட்டான். கடிய சொல்லைப் பேசுதல் கனி இருக்கக் காயைத் தின்பது போல நன்மை தராது. உணவு கொடுக்கா விட்டாலுந் தீங்கில்லை. ஒருவன் விருந்தினனுக்கு இனிய சொல்லால் உரையாடினாலே போதும்.

இனி, இனியவை கூறி இல்லறம் நடத்துபவன்செய்நன்றி மறத்தல் ஆகாது என்பதை வள்ளுவர் கூறத் தொடங்குகிறார்.

இல்லறத்தான் தனக்கு ஒருவன் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அதை ஏழுபிறப்பிலும் மறவாதிருக்க வேண்டும். உதவியைப் பெற்றவர் நல்லவனாய் இருந்தால் அதைப் பெரிதாகவும் நினைப்பான். இல்லறத்தான் தான் செய்த உதவிக்காகப் பிறன் உதவி செய்தால் அதைப் பெரிதாக நினைக்காது விடலாம். ஆனால் அவன் ஒரு உதவியும் செய்யாத போது அந்த உதவியைப் பெற்றால் அதைப் பெரிதாக நினைக்க வேண்டும். உதவி செய்தவர் பயன் கருதாமற் செய்தாரென்றால் அந்த உதவியைப் பூமியிலும், வானத்திலும் பெரிதாக நினைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இந்த நன்றியைச் செய்தவருக்கும், பிறன் ஒருவருக்கும் இடையில் உள்ள பிணக்கினைத் தீர்க்க வேண்டிய சந்தர்ப்பத்தில் நன்றி செய்தவர் பக்கம் சாய மனம் வரும். அப்போது நடுவு நிலையில் நிற்க வேண்டும் என்பதை இல்லறத்தானுக்கு வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்:-

துலாக்கோலில் உள்ள தட்டுக்கள் முன்னதாகவே சமமாக நிற்கின்றன. அதன் நடுமுள்ளும் நடுவாக நிற்கின்றது. ஒரு தட்டில் ஒரு பொருளை வைத்ததும் அது தாழ்கின்றது. மறுதட்டில் படிகளை வைக்கச் சமமாக நிற்கின்றது. நடுமுள்ளும் நடுவில் நிற்கின்றது. இரண்டு தட்டும் நேராகின்றது. அப்பொருளின் நிறையை அறிகிறோம். அதுபோலச் சமாதானஞ் செய்யப் போகிறவன் செம்மையான மனதுடன் போக வேண்டும். விசாரணையில் நடுவு நிலையாக நிற்க வேண்டும்.

நடுவுநிலையில் இல்லாது எப்பொருளையும் பெறக் கூடாது. நடுவு நிலையிற் பெற்ற பொருளே ஒருவனது பிள்ளைகளுக்கு உதவும். இப்படியான நடுவுநிலை உள்ளவனுக்குத் தெய்வ அருளால் நல்ல பிள்ளைகள் கிடைப்பர். வறுமை, செல்வம் அவரவர் செய்த நல்வினை தீவினையால் வருவன. இவை எல்லோருக்கும் ஊழின்படி வருவன. ஆனால் நடுவு நிலையில் நிற்பதொன்றே ஒருவனுக்குப் பெரிய செல்வமும் சிறப்புமாகும். நடுவு நிலையில் உள்ளவன் வறியவனாகினால் அவனை வறியவன் என்று உலகத்தவர் இகழ மாட்டார்கள். பெருமைப்படுத்துவர். ஒரு வியாபாரி தன் பொருள் போலப் பிறன் பொருளையும் நினைத்து விற்பதும், வாங்குவதும் செய்ய வேண்டும். நடுவு நிலையுள்ள வணிகன் இப்படித்தான் செய்வான்.

இவ்வாறு மனதிலும் செயலிலும் நடுவுநிலையுடையவன் சொல்லிலும் நீதி தவறாது சொல்ல வேண்டும்.

இப்படி நடுவு நிலையுடையவன் தான் பிறர் குற்றத்தைக் கண்டு நாணுவது போலத் தன் குற்றத்தையுங் கண்டு நாணி அடக்கமுடையவனாவான் என்று இனி அடக்கமுடைமையை வள்ளுவர் கூறத் தொடங்குகின்றார்.

மனம், மொழி, செயல்களில் அடக்கமுடையவனை உலகம் பெரியான் எனப் போற்றும். ஆமை தனக்கு இடர் வராமல் தனத கால் நான்கையும் தலையையும் தனது மேலோட்டினுள் அடக்குவதுபோல இல்லறத்தான் தனக்குப் பாவம் வராமல் தனது ஐம்பொறிகளையும் அடக்க வேண்டும். வறியவனிலும் பார்க்க செல்வன் அகங்காரமின்றி அடக்கமாக இருக்க வேண்டும். இந்த அடக்கமே அவனுக்குப் பெரிய செல்வமாகும்.

இல்லறத்தான் தியவற்றைச் சொன்னால் அதனால் அவன் துக்கமடைவான். கொடிய வசனங்களை அவன் சொன்னால் அச்சொல் பிறருடைய மனதுட் புகுந்து எப்போதும் வேதனை கொடுக்கும். தீயினால் ஏற்பட்ட புண் உள்ளே ஆறும். ஆனால் இந்தத் தீய சொற்களால் ஏற்பட்ட புண் பிறருடைய மனதில் ஆறாதிருக்குமெனவும் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, மனம், மொழி, மெய் அடங்கினவர்களே நல்லொழுக்கம் உடையவர்களாக வாழ முடியும் என்று உணர்ந்த வள்ளுவர் இனி ஒழுக்கம் உடைமை பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

பெரிய புராணத்திற் சொல்லப்பட்டபடி பிராமணன் கடவுள் வடிவ மானவன். அதனால் அவனை உயர்ந்த சாதியினன் என்கிறோம். அவன் பஞ்சமா பாதகங் களை செய்தால் அவன் தாழ்ந்த சாதியினன் ஆவான். அவன் தனது குலத்துக்குச் சொல்லப்பட்ட நல்லொழுக்கத்தில் நிற்க வேண்டும். இப்படி உயர் சாதியில் வைத்துக் கூறினாலும் மற்றக் குலத்தில் உள்ளவர்களும் தத்தம் வர்ணத்துக்குச் சொல்லப்பட்ட ஒழுக்கத்தில் நின்றாற்றான் நல்லொழுக்க டையவராவார். இல்லறத்தான் உலகமென்று கூறப்படும் உயர்ந்தவர்கள் எப்படி நடக்கின்றார் களோ, அப்படி நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். படிக்க வேண்டும். அதனால் அறிவும், அந்த அறிவின்படி நடத்தலும் ஒருவர்க்கு வேண்டும் என்கிறார்.

இவ்வாறு நல்லொழுக்கம் உடையவர்களே பிறனுடைய மனைவியை விரும்பாது வாழ்வார்கள். ஆதலால் சிறந்த நல்லொழுக்கமாகிய பிறனில் விழையாமையை இனிக் கூறத் தொடங்குகிறார்.

எவ்வளவு புகழுடையவனாக ஒருவன் இருந்தாலும் அவன் பிறன் மனைவியை விரும்பினால் அவனது புகழெல்லாம் பறந்து போய் விடும். அறத்தின்படி நின்று கடவுட்பக்தி உள்ளவனே பிறன் மனைவியை விரும்பாது வாழ்வான் என்கிறார்.

ஒருவனுடைய மனைவி விரும்பாதிருக்கவும், பிறன் ஒருவன் அவளை விரும்பினால் அவளுடைய கணவன் அதைப் பொறுக்க வேண்டும். இது கருதியே பிறனில் விழையாமை என்ற அதிகாரத்தின் பின் பொறுமை என்ற அதிகாரத்தைக் கூறத் தொடங்குகின்றார். இந்த விடயத்தில் மாத்திரமல்ல எக்காரணம் பற்றியாதல் அல்லது அறியாமை பற்றியாதல் ஒருவன் தீமை செய்தால் அதைப் பொறுக்க வேண்டும் எனச் சொல்கிறார்.

ஒருவன் பூமியைத் தோண்டும்போது பூமி அவனைப் பொறுப்பதோடு அவனைத் தாங்கிக் கொள்வதுபோல ஒருவன் நம்மைத் தகாத வார்த்தைகளால் ஏசும் போது பொறுத்து அவனுக்கு நன்மை செய்ய வேண்டும். தீமை செய்பவன் அன்று மாத்திரந்தான் இன்பம் அடைகின்றான். அத்தீமையைப் பொறுத்தவன் அப்பொறுமையை நினைந்து இறக்கும் வரையும் இன்பம் அடைகின்றான். இவனை உயர்ந்தோர் பெருமைப் படுத்துவர். இத்தகைய பொறுமை உடையவன் தவத்தினரிலும் பெருமை அடைவான்.

இனி இப்பொறுமைக்கு எதிர்மறையானது பொறாமை என்றும், இப்பொறாமை மற்றவனுடைய உயர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாமை என்றும் இதுவும் இல்லறத்தானுக்கு இருக்கக் கூடாதெனவுங் கூற எண்ணிப் பொறாமையைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

அழுக்காறாகிய இப்பொறாமை உடையவன் செல்வனாக இருக் கிறான் என்றால் அது அவனுடைய பழைய வினையின் நன்மையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கக் கூடுமென்று நினைத்து ஆராயவேண்டுமே ஒழிய ஒரு நாளும் அவன் அது காரணத்தாற் செல்வனாக முடியாதென்கிறார். அறவழியில் நிற்பவன் பொறாமை கொள்ளலாகாது. பொறாமை உடையவன் வறியவனாகவே இருப்பான். அவனது சுற்றத்தவரும் வறியவராவர். இந்தப் பொறாமை உடையவர்க்குப்பகைவர் வேண்டியதில்லை. அப்பொறாமையே அவர்களைக் கெடுக்கும். அவனிடம் மூதேவி நட்பாக இருப்பாள். பெருஞ் சீருடன் வாழ விரும்புவோன் பொறாமையற்று இருக்க வேண்டும் என்கிறார்.

இனி. இந்தப் பொறாமை உடையவன் பிறன் பொருளை அபகரிக்க எண்ணுவான். அப்படி அபகரித்தல் வெ∴குதலாகும். இந்த வெ∴குதல் கூடாது என்பதை வெ∴காமை என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்கு கின்றார்.

பிறருடைய பொருள் நம்முடையதல்ல என்ற நடுநிலை உள்ளவன் பிறன் பொருளில் ஆசை கொள்ளான். நல்லறிவுள்ளவன் பிறன் பொருளை விரும்பான். நமது செல்வம் அழியாதிருக்க வேண்டுமென்றால் நாம் பிறன் பொருளை அபகரிக்க எண்ணாதிருக்க வேண்டும். நடுவுநிலையில்லாது தேடிய பொருள் விரைவில் அழிந்து விடும். பிறன் பொருளை விரும்பாமை ஒருவனுக்குப் பயமின்றி வீரமாக வாழும் வாழ்க்கையைக் கொடுக்கும்.

இத்துணையும் மனம் தூய்மையாக இருப்பதற்கு வேண்டிய அறத்தைச் சொன்ன வள்ளுவர் இனிச் சொல் தூய்மையாக இருப்பதற்குரிய அறத்தைச் சொல்ல முற்படுகின்றார்.

சொல் மனதிலிருந்து வருவதால் மனம் பற்றிக் கூறிய பின் சொல் லைப் பற்றிக் கூறுகிறார்.

முதற்கண் புறங்கூறக் கூடாதென்கிறார். புறங்கூறுதல் என்பது ஒருவர் இல்லாதவிடத்து இன்னொருவருக்கு அவரைப் பற்றி குறைகளைக் கூறுவதாகும். பிறர் குறையைக் கூற விரும்புவோர் முதற்கண் தன் குறையை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி நினைத்தால் அவரைப் பற்றிக் கூற எண்ண மாட்டார். அப்படிக் கூறினால் அதை அறிந்த அவன் இவனது பெருங்குறைகளை எல்லாம் துருவி ஆராய்ந்து சொல்ல இவன் தீராத மனவேதனை அடைய நேரிடும்.

ஒருவனுடைய குறையைச் சொல்ல விரும்பினால் அவனுக்கு நேரே சொல்லுக. அவனைப் போகவிட்டுச் சொல்லாதே. புறங்கூறுவோன் தனது சினேகிதனுடைய குறையையும் பிறருக்குச் சொல்ல வேண்டாம் என்று சொல்லி அதனால் அவனது நட்பையும் இழப்பான் என்றும் இப்படி நெருங்கிய அன்பர்களது குறையைக் கூறும் இயல்புள்ளவர் பிறருடைய குறையைக் கூறாமல் இருப்பார்களா என்றும் கூறுகிறார்.

ஒருவனுக்கு முன்னே நின்று நாம் அவனது மனம் நோவச் சொல்லினும் சொல்லலாம். ஆனால் அவன் எதிரில் இல்லாதபோது அவனைப் பழித்தல் ஆகாது என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப் பயனில சொல்லாமையைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். பயனில சொல்லாமை என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுந் தராத வீணான சொற்களைச் சொல்லாமையாகும். வாக்கினால் நிகழும் பாவம் நான்கு. அவை:- பொய், குறளை, கடுஞ்சொல், பயனிலசொல் ஆகும். இவைகளில் பொய் பிறருக்குத் தீங்கு வராதென்றால் இல்லறத்தான் விரும்பினால் சொல்லலாம் என அதை நீக்கிக் குறளையைப் புறங்கூறாமையில் விளக்கிக் கடுஞ்சொல்லை எதிர்மறை முகத்தால் இன்சொல் பற்றிய அதிகாரத்தில் எடுத்துச் சொல்லி, மிகுதியாக நின்ற பயனில சொல்லாமையை இங்கே விளக்குகின்றார். ஆதலாற்றான், புறங்கூறாமை என்ற அதிகாரத்தின் பின் இந்தப் பயனில சொல்லாமையைச் சொல்லத் தொடங்குகிறார்.

ஒருவன் அறிஞர்கள் உள்ள அவையிலே ஒன்றைச் சொல்லும்போது அவன் பேசும் விடயம் அறம், பொருள், இன்பம்' உடையதாக இருக்க வேண்டும். இவைகளிலே அறம் என்பது வள்ளுவர் கூறிய, வாழ்க்கைத் துணைநலம், நற்புதல்வர், அன்பு, விருந்தினர் பேணல், செய்நன்றி மறவாமை முதலாய அறங்களாகும். பொருள் என்பது அவன் கூறும் சொற்களின் பொருள் மேற்கூறியனவாக இருக்க வேண்டும் என்பதாகும். இன்பம் என்பது அவனது சொல்லைக் கேட்கும்போது மேற்கூறிய அறங்களைக் கேட்டோம் என்று இன்பம் அடைதலாகும். இப்படியான கருத்தில்லாத சொற்களைப் பேசுதலே பயனில் சொல் பேசுதலாகும். நாம் பெரியார் என்று கருதிய ஒருவர் சபையிலே பேசும்போது அவர் பயனில்லாத பேச்சு நிகழ்த்தினால் அவர் அறிஞர் என்று சொல்ல முடியாதவராகி விடுவார். அவரது புகழும் போய்விடும். பயனில்லாது சொல்பவன் நெல்லிற் பதர் போலக் கருதப் படுவான். அறிஞர்கள் அவனது சொல்லைக் கேட்டு அவன்மீது வெறுப்புக் கொள்வர்.

ஆதலால் ஒருவன் நீதியற்ற சொல்லை விரும்பிச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் அவன் பயனில் சொல்லை ஒருபோதும் சொல்லற்க என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறு மனத்தாலும் மொழியாலும் செய்யும் அறத்தினைக் கூறி வந்த வள்ளுவப் பெருமான் இனி உடம்பாற் செய்யும் அறத்தினைத்தீவினை அச்சம் என்ற ஒரு அதிகாரத்தினால் விளக்க முற்படுகிறார்.

தீவினை அச்சம் என்பது பாவமான செயலைச் செய்ய அஞ்சுவதாகும். உனது நிழல் உன்னைத் தொடர்ந்து வருவதுபோல நீ ஒரு உயிருக்குச் செய்த பாவம் உன்னைத் தொடரும். நீ உன்னைப் பாதுகாக்க விரும்பினால் பிறனுக்குக் கேடு செய்யாதே. பகைவனுக்குங் கூடத் தீங்கு செய்யாதே. பாவம் வருமென்பதை மறந்து பிறனுக்குச் செய்வினை செய்ய நினைந்தால் தருமம் உனக்குச் செய்வினை செய்ய யோசிக்கும் என்பதை நன்றாக உணர்ந்து கொள். நான் வறியவனாக இருக்கிறேன். இவன் செல்வனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவோ என்று எண்ணி அவனது பொருள் வருவாயைக் குறைக்கக் கேடு நினைக்காதே. நினைத்துக் கேடு செய்யாதே. செய்தால் நீ வறிய வனாவாய் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இனி, வேதம் முதலிய புத்தகப் படிப்பால் அறிய முடியாதவற்றை அறிந்து செய்யும் செயலைக் கூறத் தொடங்கிய வள்ளுவப் பெருமான் நாட்டில் உயர்ந்த பெரியோர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறிந்து செய்ய வேண்டும் என்கிறார். இந்தப் பெரியார்களின் வாழ்க்கை முறையை அறிவதையே ஒப்புரவறிதல் என்கிறார்.

உலகில் பெரியார்கள் மாரிபோலக் கொடுப்பார்கள். மாரி ஒரு கைம் மாறுங் கருதாமல் மழையைக் கொடுப்பது போல ஒரு உபகாரத்தையும் கருதாது வறியவர்கட்குக் கொடுக்க வேண்டும். நடுவூருள் ஒரு நல்ல மாமரம் பழுத்திருக்க அப்பழத்தனைப் பிடுங்கி அனைவரும் உண்பது போலவும், பொதுக்கிணற்றில் நீரை அனைவரும் அள்ளிப் பருகுவது போலவும், மருந் துக்குதவும் மரம் அனைவருக்கும் உபயோகப்படுவது போலவும், இல்ல றத்தான் ஊர்மக்களுக்கு உதவ வேண்டும். இவைகள் உபயோகப்படுவது போல ஊரில் உள்ள பெரியோர்களின் வாழ்க்கைமுறை இருப்பதை அறிந்து செய்வதே ஒப்புரவறிந்து செய்வதாகும்.

இந்த ஒப்புரவினை அறிந்தவன் பொருள் தன்னிடம் இல்லையே என்பதற்கு வருந்த மாட்டான். வறியவர்கட்குக் கொடுக்க இல்லையே என்றுதான் வருந்துவான் என்கிறார்.

இதுவரையும் ஒப்புரவைப் பற்றி வள்ளுவர் கூறினார். இந்த ஒப்புரவு இவ்வுலகம் இனிதாக நடைபெற இல்லறத்தான் செய்வதாகும்.

இனி இல்லறத்தான் மறுமையில் இன்பம் அனுபவிக்கச் செய்ய வேண்டிய ஈகையைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

வறியவர்கட்குக் கொடுப்பதுதான் ஈகையாகும். ஒருவன் இவ்வுலகில் விட்டுப்போவது, புகழ் மாத்திரமே. இந்தப் புகழ் வறியவர்க்குக் கொடுப்பதனால் மாத்திரமே வரும். நற்குலத்திற் பிறந்த ஒருவன் வறியவன் வந்தால் இல்லையென்று சொல்லாது தன்னால் இயன்றதைக் கொடுப்பான். ஒரு வறியவன் நல்லவன் ஒருவனது வீட்டுக்கு வந்து பசிக்கிறது, ஏதும் தாருங்க என்று கேட்கும்போது அந்த நல்லவன் துக்கப்படுவான். எது வரையும் துக்கப்படுவான்? உணவைக் கொடுக்க அந்த வறியவன் உண்டு அவனது முகத்தில் இன்பங் காணும் வரையும் துக்கப்படுவான். அவனது இன்முகங் கண்டதும் அளவற்ற மகிழ்வடைவான். ஒரு வறியவனது பசியைப் போக்க அவனது வயிறு நிறைய நாம் கொடுக்கும் உணவு நாம் வங்கியில் பணத்தை இட்டு வைப்பதற்குச் சமம் என நினைக்க வேண்டும். வறியவர்க்கு உணவு கொடுப்பவன் ஒரு நாளும் பசியுடன் வாழான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இல்வாழ்க்கை முதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தில் வழுவாது வாழ்ந்தால் எது கிடைக்கும்? புகழ் கிடைக்கும். இந்தப் புகழே ஒருவன் பூமியில் பிறந்து வாழ்ந்தான் என்பதைக் காட்டுவதாகும். இவ்வுலகில் எத்தனையோ மக்கள் பிறந்துஇறந்துள்ளனர். அவர்களுக்குப்பின் பிறந்த நாம் அவர்களைப்பற்றி அறிகிறோமா? இல்லை. ஏன்? அவர்கள் எல்லோரும் புகழுடன் வாழவில்லை. ஒரு சிலர் புகழுடன் வாழ்ந்தபடியால் அவர்களை நாம் அறிகிறோம். நமக்குப் பின் பிறப்பவர் களும் அறிவர். ஆகவே புகழ் உடம்புடையவர்களே இவ்வுலகில் நிலைத்து நிற்பவராவார். இத்தகைய புகழ் உடையவர்களை மக்கள் போற்றுவர். சமய அடியவர்கள், மகாத்மா காந்தி போன்றவர்கள் இந்த மக்கள் போற்றும் புகழுடையவர்க்கு உதாரணமாவர்.

இல்லறவியல் முற்றிற்று.

## 3 துறவறவியல்

இல்லறத்தைப் பற்றிக் கூறிய திருவள்ளுவர் இனித் துறவறம் பற்றிக் கூற முற்படுகின்றார்.

ஒருவன் துறவியாக விரும்பினால் அவன் அருளுடையவனாக வேண்டும். அருள் என்றால் என்ன? எல்லாச் சீவபிராணிகளிடமும் ஒரே தன்மையான அன்புடன் இருத்தலே அருள் எனப்படும். இது ஒருவன் தனது மனைவி, பிள்ளைகளிடம் கொண்ட அன்பின் விரிவாகும்.

இந்த அருளுடையவன் ஒரு பிராணியையுங் கொல்லக்கூடாது. கொல்லாமை கொல்லாமை ஆற்றின் அறம் பிற செய்யத் தேவையே இல்லை என்கிறார் வள்ளுவர்.

கொல்லாதிருப்பது மாத்திரம் துறவிக்குப் போதாது. பிறர் கொன்று தரத் தின்பதில் குற்றமில்லைத்தானே என்று புலாலை உண்ணக் கூடாது. கொல்லா தவனையும், புலால் உண்ணாதவனையும் எல்லா உயிரும் தொழும் என்கிறார் வள்ளுவர்.

கொலை செய்பவர் தாம் செய்வது இழிவான தொழில் என்பதை அறியாது செய்கின்றனர். ஆனால் அறிஞர்கள் அவர்களை இழிவான தொழிலைச் செய்கிறார்கள் என எண்ணுகிறார்கள். இதனை அவர்களால் அறிய முடியா திருக்கிறது. ஒருவன் கால் கை முதலிய உறுப்புக்கள் முடமாகப் பிறந்திருக்கிறான் என்றால் அவன் கொலை செய்த பாவத்தால் அப்படிப் பிறந்திருக்கிறான் என்பதை அறிந்து கொள் என்கிறார் வள்ளுவர்.

இப்படிக் கொல்லாதும் புலால் உண்ணாதும் இருப்பவனே தவம் செய்யத் தகுதியுடையவன்.

இந்தத் தவத்தை எல்லோருஞ் செய்ய முடியாது. முற்பிறப்பில் தவம் மேற் கொண்டவர்கள்தான் அதன் தொடர்பால் விடாது செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் என்றால் என்ன?

தனக்கு வரும் துன்பத்தைத் தாங்குதலுடன் பிற உயிர்கட்கு உடற்றுன்பமும், மனத்துன்பமும் செய்யாதிருத்தலே தவத்தின் வடிவம் என்கிறார்.

இந்தத் தவக்கோலம் பூண்டவன் கூடா ஒழுக்கங் கொள்ளலாகாது. பசு புலித்தோலைப் போர்த்துப் பிறனுடைய வளவில் உள்ள புல்லை மேய்வது போலத் தவக்கோலம் பூண்டு கூடா ஒழுக்கம் புரியக்கூடாது. பயம் மிகுதியாலும், புலிதானே அது புல்லை மேயாது. நின்றால் நின்றுவிட்டுப் போகட்டும் என்று அந்தப் புல்லுடையவன் நினைக்கிறான். ஆனால் புல் மேயப்படுகிறது. அதுபோல ஒரு போலித் துறவியை நாம் வீட்டில் ஆதரித்து அவர்மீது பக்தி செலுத்த அவன் நமது வீட்டில் உள்ள பெண்களில் ஆசைப்படுகிறான்.

தலைமயிரை வழித்து மொட்டை ஆக்குவதும் தாடியை நீளமாக வளர்ப்பதும் தவத்தினர் செய்யத் தேவையில்லை. அவர்கள் உலகம் பழிக்கும் செயல்களைச் செய்யாதிருத்தலே போதும் என்கிறார் வள்ளுவர்.

ஒரு துறவி தனது ஆசையைத் துறக்க எண்ணித் துறவிக்கோலம் பூணுகின்றான். எல்லாவற்றிலும் மேலாக அவன் காம இன்பத்தை முதல் விட வேண்டும் என்பதை கூடா ஒழுக்கத்தில் கூறி அதன்பின் பொருள் பற்றி வரும் ஆசையை நீக்க வேண்டும் என்பதை விளக்கக் கள்ளாமையைக் கூறுகின்றார்.

துறவி, பிறனுடைய பொருளைக் களவெடுக்க நினைக்கவுங் கூடாது. நினைத்தலும் செய்கையோடு சமமாகும். ஆனால் இல்லறத்தான் விளையாட்டுக் காகப் பிறன் பொருளைக் களவெடுக்கலாம். பின் அதைக் கொடுத்து விட வேண்டும்.

உயிர்களை அதன் பக்குவநிலை எப்படி இருக்கிறதென்பதை அறியும் நிலை ஒரு துறவிக்கு இருக்க வேண்டும். களவெடுக்க நினைக்கும் துறவியால் உயிர்களை அளக்க முடியாது. களவெடுத்த பொருள் வளர்வதுபோல வளர்ந்து பின் அழிந்து போகும். களவெடுப்பவன் ஒருநாள் வெட்டுப்படுவான்.

இவ்வாறு துறவிக்குக் களவு கூடாதெனக் கூறி வந்த வள்ளுவர், பெரும்பான்மையும் காமம், பொருள் இவைகள் பற்றி வரும் பொய் பேசுதல் கூடா தென்பதை விளக்க வாய்மையைக் கூறுகின்றார்.

பிறருக்குத் தீங்கு வராத சொல் எல்லாம் உண்மையாகும். விளையாட்டுக் காகப் பிறருக்குத் தீங்கு வராத பொய்யைத் துறவி சொல்லலாம். அது அவனது துறவைக் கெடுக்காது. பொய் சொல்லாது உண்மை பேசுவோன் ஒருவருக்கும் அஞ்சான். அவனது நெஞ்சு எப்போதும் உறுதியில் இருக்கும். பொய் பேசினால் அவனது மனம் எப்போதும் வருந்தும். இந்த வருத்தம் இருந்தால் அவன் ஒரு தொழிலையும் தெளிந்த அறிவுடன் செய்ய மாட்டான். உண்மை பேசுவோனை எல்லோரும் போற்றுவர். மனந் தூய்மையடைய உண்மை பேச வேண்டும். உண்மை பேசினால் போதும். அவன் வேறு தவம் செய்ய வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி ஒரு துறவி கோபங் கொள்ளக் கூடாதென்பதைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

உண்மைக்கு மாறான பொய் சொன்னால் கோபம் வரும். அந்தக் கோபம் துறவிக்கக் கூடாது என்பதைக் காட்ட வாய்மை என்ற அதிகாரத் தின் பின் வெகுளாமையை விளக்குகின்றார்.

துறவி, தன்னிலும் பெரிய துறவியுடன் கோபிக்கக் கூடாது. வலிய துறவியுடன் கோபித்தால் என்ன. கோபம் கொள்ளாதிருந்தாலென்ன. அதன் கருத்து யாது? வலிய துறவியுடன் கோபித்தால் அவர் இவரைச் சபித்து விடுவார் என்பதாகும். மிகக் கொடிய துன்பம் செய்தாலும் நட்பை வளர்க்க விரும்புபவன் கோபங் கொள்ளக் கூடாது. கோபத்தைப் பொருளாக உள்ள துறவி ஒரு துறவியுடனும் நட்பாக இருக்காது தனிமையாக இருக்க நேரிடும். கோபங் கொண்ட துறவியின் முகத்தில் சிரிப்பு ஒரு நாளும் இருக்காது. அவனுக்கு மகிழ்ச்சியும் இல்லை.

இனி, இத்துறவி ஒரு உயிருக்கும் துன்பம் செய்யக் கூடாதென்பதை இன்னா செய்யாமை என்ற அதிகாரத்தில் விளக்குகிறார். கோபம் இல்லாமலும் பிறரைக் கெடுக்க வேண்டும் என்ற நினைவில் ஒருவன் துன்பம் செய்யக் கூடாது. ஆதலால், வெகுளாமை என்ற அதிகாரத்தின் பின்இன்னா செய்யாமையை விளக்குகின்றார்.

பிறருக்குத் துன்பம் செய்தவனே இவ்வுலகில் துன்பம் அடைகின்றான் என்று எண்ணுந் துறவி துன்பஞ் செய்ய எண்ணான். பிறருக்கு ஒருநாளின் முற்பகுதியில் துன்பம் செய்தால் அன்று பின்னேரம் செய்த அவனுக்கு துன்பம் வருவதை நாம் அறிய முடியும். துன்பம் செய்தவருக்குத் துறவி இன்பம் செய்ய வேண்டும்.

ஒரு கெட்டவனை அழிப்பதால் மோட்சம் அடையலாம் என்ற நம்பிக்கை இருந்தாலும் துறவி அவனுக்குத் துன்பம் செய்யக் கூடாது. துன்பம் செய்து ஒருவரைத் திருத்த முடியாது. அன்பு செய்வதனாற்றான் அவரைத் திருத்தலாம். துன்பம் செய்தவனுக்குத் துன்பம் செய்யாது அன்பு செய்ய அவன் நாணமடைவான். எந்த சந்தர்ப்பத்திலும் பிறனுக்குச் சிறிய துன்பந்தானும் செய்யாது துறவி வாழ வேண்டும்.

இவ்வாறு ஒழுகிவரத் துறவிக்கு ஞானம் உண்டாகும். இந்த ஞானத்தைப் பற்றி இனிக் கூறத் தொடங்குகின்றார்.

## ஞானம்

ஞானம் என்பது பற்று நீக்குதலுக்குரிய அறிவாகும். இந்தப் பற்று நீங்குதலையே விடுதல் அல்லது வீடு என்பர். இந்த வீடு பயக்கும் உணர்வை நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் ஆகிய நான்கு அதிகாரத்தில் விளக்குகின்றார். முதற்கண் நிலையாமையைப் பற்றிய அறிவைக் காட்டுகின்றார்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு கூறியபடி நடந்து வருந் துறவி எப்பொருளையும் பார்த்து அவை நிலையில்லாதிருப்பதை உணர்வான். நிலையற்ற பொருள்களில் பற்று வைத்திருக்கும் நம்மைப் போன்றவர்களைப் பார்த்துச் சிரிப்பான். கூத்து நடைபெறும் இடத்தில் கூடிய மக்கள் அக்கூத்து முடிந்ததும் அவ்விடத்தை விட்டு நீங்குவது போல மக்களைக் கூத்தாட வைக்கும் செல்வமும் நீங்கிப் போதலை உணரவேண்டும். ஆனமையால் செல்வத்தைப்பெற்றவன் அதனால் உயிருக்கு உதவக் கூடிய நிலையான தருமத்தைச் செய்ய வேண்டும். செல்வம் மாத்திரமல்லக் காலமும் நிலையற்றது. ஒவ்வொன்றாக நாள் வருவதைக் கண்டு மகிழ்கிறோம். ஆனால் அந்த நாள் நமது உடம்பினை வாள் போலச் சிறிது சிறிதாக அரிந்து நமது உயிரை உடம்பினின்றும் பிரிய வழி செய்கின்றதை நாம் உணர்வதில்லை. உணர்ந்தவன் வீண்கருமம் ஒருநாளிலாவது செய்வானா? இல்லை.

நான் மாத்திரமல்ல நமது உடம்பும் நிலையற்றது. நேற்றிருந்தவர் இன்று இல்லாது போதலைக் காண்கின்றோம். அப்படி இருக்க நாம் பல திட்டங்களை எல்லாம் இட்டு இப்படி வாழ்வோம். அப்படி வாழ்வோம் என்று இறுமாப்படைகிறோம்.

முட்டையில் இருந்து குஞ்சு வெளிப்பட்டுப் போக முட்டைக்கோது இருப்பது போல உள்ளது நமது உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு என்பதை உணர்ந்து இவ்வுடம்பில் பற்றற்றிருக்க வேண்டும். உறங்குவதும், விளிப்பதும் போல இறப்பும் பிறப்பும் விரைவில் வருமென்று உணர வேண்டும். இப்படியான உணர்வைத் துறவி உணர்வான்.

இவ்வாறு துறவி பொருளின் நிலையாமையையும், உடம்பின் நிலையாமை யையும் உணர்ந்ததும் ஆசையற்றிருப்பான். அப்படி ஆசையற்றிருத்தலே துறவாகும் என்று அதனைத் துறவறவியலில் பின்வருமாறு விளக்குகின்றார்:-

எந்தப் பொருளில் விருப்பில்லாமல் இருக்கிறோமோ அப்பொருளால் நமக்குக் கவலை வராது. பொருட்களில் உண்டாகும் ஐம்புல ஆசைகளை நீக்க வேண்டும். தவஞ் செய்பவன் எல்லாப் பொருள்களையும் வெறுத்து ஒரு பொருளில் மாத்திரம் விருப்புடன் இருந்தாலுங் கூட அது காரணமாக அவனுக்கு எல்லா விருப்பும் வந்து விடும். ஆதலால் துறவி எல்லாப் பொருள்களிலும் உள்ள விருப்பத்தினை ஒரு காலத்திலேயே நீக்க வேண்டும். பிறப்பினை அறுக்க விரும்பித் துறந்தவனுக்கு அவனது உடம்பிலுங் கூடப் பற்றிருக்கக் கூடாது.

இந்த உடம்பு இரண்டு வகைப்படும். ஒன்று நமது கண்ணுக்குத் தெரியும் உருவ உடம்பு. மற்றது அருவ உடம்பாகும். இந்த அருவ உடம்பே மனம் எனப்படும். இந்த அருவ உடம்பாகிய மனதிலே புலன் ஐந்து, பூதம் ஐந்து ஆகிய பத்தினது உணர்வும், ஐவகை வாயுக்கள், ஆசை, கர்மங்களினால் வந்த பலாபலன் ஆகியவையும் பொருந்தி இருக்கும். ஆகவே துறவி உருவ உடம்பிலும் அருவ உடம்பிலும் பற்றின்றி இருக்க வேண்டும். இந்தப் பற்று அறுந்ததும் பிறவியும் அறும். அப்படியான பற்று அறாவிட்டால் முன்கூறிய நிலையாமையை நன்கு உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பற்றை அறுப்பதற்கு நிலையாமையை உணர்ந்தால் மாத்திரம் போதாது. பற்றற்றவராகிய இறைவனை நாளும் தியானிக்க வேண்டும்.

இப்படிக் கடவுளைத் தியானிப்பவனுக்கே, பிறப்பு, வீடு என்பவற்றின் உண்மைப் பொருள் விளங்கும் என்று அந்த மெய்யுணர்தலை இனி விளக்குகின்றார்:-

நிலையற்ற பொருளை நிலையானது என்று உணர்ந்து அதில் அவாக் கொள்வதனாலேயே பிறப்பு ஏற்படுகின்றது. பிறப்பை அறுக்க, முற்பட்ட துறவி பொருட்களில் ஆசையற்று இருக்க வேண்டும். கடவுள் நம்பிக்கை இல்லாதவன் ஐம்புலன்களை அடக்கி யோகநிலையில் நிற்பதில் பயனில்லை. எப்பொருளிலும் கலந்துள்ள இறைவனை உணர்ந்தவனே பிறவியை அறுப்பான். ஆசை, கோபம், அறியாமை இம்மூன்றையும் நீங்கினவன் எத்துன்பமும் அடையான். உண்மைப் பொருளாகிய இறைவனை இலகுவில் அடைவான்.

அடுத்த பிறவி ஒருவனுக்கு எப்படி அமைகின்றது?

ஒருவன் இறக்கும்போது எந்த நினைவில் நின்றானோ அந்த நினைவுக்குரிய பிறவியை அவன் எடுக்கிறானாம். ஆதலால் ஒரு நினைவில் நின்று பழக வேண்டும். அந்தப் பழக்கம் ஏற்படுத்துவதே யோகமாகும். யோகத்தில் கடவுளையே நினைத்துப் பழகியவன் இறக்கும் போதும் கடவுள் நினைவில் இருப்பான். இதனால் பிறவி அற்று கடவுள் மயமாவான்.

இப்படி மெய்யை (நிலையான பொருளை) உணர்ந்த துறவிக்குப் பிறவி இல்லை என்பதை ஏற்றுக் கொண்ட வள்ளுவப் பெருமான் நுட்பமாக ஆராய்ந்து ஒரு உண்மையைக் கூறுகின்றார். அது வருமாறு:- யோக நெறியில் நின்று கடவுளை உணர்ந்தவனுக்கு மேலுள்ள வினைப்பயன் இல்லை. அவனுக்குப் பிறவி இல்லையாதலால் வரக்கடவ வினையும் இல்லை. ஆனால் அவன் எடுத்திருக்கும் பிறவியில் உள்ள உடம்பு நிற்கிறது. அந்த உடம்பில் உள்ள ஐம்புல ஆசைகள் அடங்கி நின்றாலும் பழக்கத்தில் இடையிடையே வெளிப்படும். அப்படி வெளிப்படும் ஆசை சிறுபொழுதுதான் நின்றாலும் அது எல்லாப் புலன் அடக்கத்தையுங் கெடுத்துப் பிறவியை உண்டாக்கும் என்றுணர்ந்து இறுதியாகத் துறவி அவாவினை அறுக்க வேண்டுமென்று கூறப் புகுகின்றார்.

ஒரு துறவி ஒன்றை மாத்திரம் விரும்ப வேண்டும். அதுதான் பிறவாமையாகும். மற்றொன்றையும் விரும்பக் கூடாது. மற்ற ஆசைகளுக்கு அஞ்ச வேண்டும். மற்ற ஆசைகளை நீக்குவதற்கு இலகுவான வழி, கடவுள் வடிவமான உண்மையை விரும்பிக் கடைப்பிடித்தலாகும். ஆசைக்கு அளவில்லை. இந்த ஆசையை நீக்க வேண்டும் என்று எப்போதும் இறைவனை ஏத்த வேண்டும்.

துறவறவியல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஊழியல்

## ஊழ்

இதுவரையும் இம்மை, மறுமை, வீடு அகிய மூன்றினையுங் கொடுக்கும் அறத்தைப் பற்றிக் கூறிய வள்ளுவர் இனிப் பொருளையும், இன்பத்தையும் கூற வேண்டும். இதற்கிடையில் ஊழைப் பற்றிக் கூறத் தொடங்குவதேன்?

ஊழ் என்பது ஒருவன் செய்த நல்வினை தீவினையாகிய இரண்டும் செய்தவனைச் சென்றடையும் என்பது நியதி. இந்த ஊழுக்குப் பல பெயர்கள் உள. ஊழ், பால், நியதி, தெய்வம், முறை, உண்மை, விதி என்பன அப்பெயர்களாகும்.

இந்த ஊழ் பொருளும், இன்பமுங் கிடைப்பதற்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் அது பொருளுமல்ல: இன்பமும் அல்ல: இரண்டுக்கும் பொது. அத்துடன் அது அறத்தினால் வருவது ஆன காரணத்தினாலேயே அறத்தைப் பற்றிக் கூறி முடித்துப், பொருளின்பங்களைப் பற்றிக் கூறுவதற்குமுன் ஊழைப்பற்றிக் கூறுகின்றார்.

ஒருவன் நல்வினையைச் செய்து பின் தீவினையைச் செய்தால் முதல் நன்மையும், பின் தீமையும் அடைவான் என்று எதிர்பார்க்க முடியாதாம். தீமையை முன்னும் நன்மையைப் பின்னும் அனுபவிக்கக் கூடும். இதை ஊழ் செய்யும். சில வேளைகளில் முறைப்படி அனுபவிக்கவும் செய்யும். பொருளைச் சேர்ப்பதற்கு அறிவு வேண்டும் என்று நம்புகின்றோம். ஆனால் இநத ஊழ் அதிகாரத்திலே பொருளைச் சேர்ப்பதற்கு அறிவு அவசியம் தேவையில்லை எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

பொருளைச் சேர்க்கும் ஊழ் பொருளைக் கொடுக்கும். அறிவைச் சேர்க்கும் ஊழ் அறிவைக் கொடுக்கும். இதனாற்றான் கை எழுத்துப் போடத் தெரியாதவர்கள் கூடப் பெரும் பணக்காரராகக் காணப்படுகின்றார்கள்.

பொருளைச் சேர்க்கும் ஊழ் உள்ளவன் பொருளைச் சேர்க்கிறான். அவனுக்கு அதை அனுபவிக்க ஊழ் இல்லையென்றபல் அனுபவிக்க மாட்டான்.

பொருளையும் அறிவையும் சேர்க்கும் ஊழ் உள்ளவன் சோம்பல் இல்லாதிருப்பான். நன்றாகப் படித்த ஒருவன் பரீட்சையில் சித்தி அடையாமல் போதல் அவனது கெட்ட ஊழால் என்க. ஒருவனுக்கு நல்ல ஊழ் இருந்தால் கெட்டவன் கூட நன்மை செய்வான்.

அவனுக்குக் கெட்ட ஊழிருந்தால் நல்லவன்கூடக் கெடுதலைச் செய்வான். எல்லாம் நன்மையாக நடந்துவரும் போது ஒருவனுடைய காரியம் கேடடைகிறது. காரணம்?- அவனுடைய கெட்ட ஊழ் அப்படி முடித்து வைக்கிறது. ஆனமையால் ஊழ் பெரும் வலிமையுடையது. இதைத் தெய்வ வழிபாட்டாற் சிலர் வென்றுள்ளனர். உதாரணம் : - மார்க்கண்டேயர் சிவனருளால், இறக்கும் வயதில் உய்வடைந்தார்.

ஊழியல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பொருட்பால்

## 1 அரசியல்

இனித் திருவள்ளுவர் இல்லறத்துக்கு இன்றியமையாத பொருளைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார். பொருளைப் பற்றிக் கூற வந்தவர் பொருளைக் கூறாது அரசனைப் பற்றிக் கூறுகின்றார். காரணம்? பொருள் நிலைப்பது அரசனாலேயே. அரசு இல்லையேல் ஒருவரும் பொருளைச் சேர்க்கவும் முடியாது. வைத்திருக்கவும் இயலாது. இதன் உண்மையை நாம் 1983ல் இருந்து நடைபெறுகின்ற அரசாங்கத்தால் அறிகிறோம்.

ஒரு நாட்டில் உள்ள அரசனுக்கு அல்லது, அரசுக்கு ஆறு அங்கம் வேண்டும். அமைச்சு, குடி அல்லது நாடு, அரண், உணவு, படை, நட்பு என்பனவே அந்த ஆறுமாகும். திருவள்ளுவர் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் என முறை மாறிக் கூறியிருப்பதேன் என்றால், பாட்டு அமைக்கும்போது எதுகை, மோனை நோக்கி அவ்வாறு கூறினாரேயொழிய முதன்மை நோக்கியன்று என உரையாசிரியர் கூறுகின்றார்.

இந்த அரசன் அஞ்சாது, அறிவு, ஈகை, ஊக்கம் உடையவனாக இருக்க வேண்டும். காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும் இருக்க வேண்டும். தான் அரசன் தனது எண்ணப்படியே எல்லாரும் நடக்க வேண்டும் என்று எண்ணாது அறிஞர்களின் ஆலோசனையுடன் தனது அறிவையும் சேர்த்து ஆராய்ந்து நீதியின்படி நாட்டை நடத்த வேண்டும். குடிமக்களின் எண்ணத்தையும் அறிந்து அதற்குத் தக அரசாள வேண்டும். இப்படியான அரசன் தெய்வத்துக்குச் சமமாக மதிக்கப்படுவான்.

இப்படியான அரசன் படிப்பறிவுடையவனாக இருக்க வேண்டும் என்பதைக் கல்வி என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்.

அரசன் நீதிநூல்களை எந்நாளும் படிக்க வேண்டும். அவன் படித்தபடி நடக்க வேண்டும். அவனுக்கு சோதிட அறிவும் வேண்டும். எண் என்பது சோதிடமா? படித்த கல்விதான் அவனது கண்ணாகும். படித்தவன் கூடிப் பிரியும்போது மற்றவன் இவனை எப்போது காண்போம் என்று ஆவல் பெறுவான். அத்தகைய தன்மை கல்விக்குண்டு. இறைத்த கிணறு ஊறுவதுபோலப் படிக்கப் படிக்க அறிவு ஊறும். படித்தவனை எல்லோரும் விரும்புவர். எல்லா நாடும் அவனை வரவேற்கும். தான் படித்து இன்புறுவதுபோல இவனது படிப்பைக் கேட்டு உலகினர் இன்புறுவர்.

இப்படிப் படித்தறிய முடியாத அரசன் அறிஞர்களின் அறிவுரையைக் கேட்க வேண்டும். இந்த அறிவுரை வழுக்குமிடத்தில் ஊன்றுகோல் உதவுதல்போலக் கஷ்டமான பிரச்சினை வரும்போது உதவும். படிப்பும் கேள்வியறிவும் உடையவனே பணிந்த மொழியுடையவனாவான்.

படியாத அரசன் சபையில் பேச முற்படுதல், அரங்கில்லாமல் சூதாடு கருவிகளை வைத்துக்கொண்டு ஆட முற்படுவது போல இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாதவன் அறிஞர்கள் சபையில் பேசத் தகுதியற்றவன். படியாத அரசன் முடியுடனும், அரசர்க்குரிய உடையுடனும் இருத்தல் மண்ணாற் செய்த பாவைக்கு அணிகலன்களைச் சூட்டியதுபோல இருக்கும். அரசனாக இருந்தாலும் படியாதவன் கீழானவனாவான். தாழ்ந்த சாதியினன் படித்தால் அவன் உயர்ந்தவனாவான்.

இவ்வாறு கல்வியின் அவசியத்தைக் கூறிய வள்ளுவர் இந்தப் படிப்பறிவுடன் இயற்கை அறிவும் அரசனுக்கு வேண்டும் என்பதை அறிவுடைமை என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

அரசன் கல்வி, கேள்வி அறிவுடன் விவேகமும் உடையவனாக இருக்க வேண்டும். இந்த விவேகம் அவனது உயிருடன் முன்னமே சேர்ந்த அறிவாகும்.

இந்த அறிவுடையவன் தனக்கு வரக்கூடிய நன்மை தீமைகளை முன்னதாகவே அறிவான். இந்த இயற்கை அறிவுடையவனே உலகினருடன் ஒத்து நடப்பான். அவன் கொண்ட நட்பினை நழுவவிடான். இந்த அறிவுடையவனே எல்லாம் உடையவனாவான். மற்றவர் சொல்லும் பொருளில் உள்ள உண்மையை இலகுவில் அறிவான். தான் சொல்லும் விடயத்தை எளிதாக விளங்கப்படுத்துவான். மற்றவர் சொல்லும் விடயத்தில் உள்ள நுட்பமான பொருளை அறிவான்.

இனி, இந்த அறிவுடையவனே குற்றங்களை அறிந்து நீக்கி நடப்பான் என்பதைக் குற்றங் கடிதல் என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

காமம், கோபம், கடும் பற்றுள்ளம், மாண் பிறந்தமானம், மாண்பில்லாத உவகை, செருக்கு என்ற ஆறும் குற்றங்களாகும். இக்குற்றங்களை அறிந்து நீக்கி அரசன் வாழ வேண்டும். இதிலே கடும் பற்றுள்ளம் என்பது பொருளில் அளவு கடந்த ஆசை கொள்ளுதலாகும். இத்தகையவன் வைத்திருக்கும் பொருள் உபயோகப்படாமல் அழிந்துவிடும்.

மாண் பிறந்த மானம் என்பது:- தான், அரசன், தான் தாய் தந்தையர், ஆசிரியரை வணங்குவதா? தனக்கு மரியாதையில்லை என்று வணங்காதிருப்பது மாண்பில்லாத மானக் குணமாகும். மாண் பிறந்த உவகை என்பது அளவு கடந்த அன்பு காட்டுவதாகும். அரசன் ஒருநாளும் செருக்கும் கோபமும் அடைதல் கூடாது தான் ஒன்றில் காதல் கொண்டிருந்தால் அதை மற்றவர்க்குத் தெரியாது வைத்திருத்தல் வேண்டும். தெரிந்தால் காதல் கொண்ட பொருளை எடுப்பதற்காகப் பிறர் இவனைக் கொல்லவுங் கூடும்.

இவ்வாறுள்ள குற்றங்களை நீக்கி அரசு செய்யும் அரசன் நன்னெறியை உபதேசிக்கும் அறிஞர்களைப் பேணி நடக்க வேண்டிய அவசியத்தைப் பெரியோரைத் துணைக் கோடல் என்ற அதிகாரத்தில் விளக்க முற்படுகின்றார்.

அரசனுக்குப் பல பகைவர்கள் இருந்தால் அதற்குப் பயப்படத் தேவையில்லை. அவன் நல்லஅறிஞர்களைப் பகைப்பதற்கே அஞ்ச வேண்டும். தம்மிலும் அறிவுடையவர்களை அணைத்து வாழ்வது பெரும் வலிமையைக் கொடுக்கும் என்பதை உணர வேண்டும். இந்த அறிஞர்கள்தான் அரசனுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கண் போன்றவர்கள். இடித்திடித்து நல்ல அறிவுரைகள் கூறுவோரை அணைத்து அன்பு காட்டும் அரசனை ஒரு பகைவனுங் கெடுக்க முடியாது.

இத்தகைய பெரியாரைத் துணை கொள்ளும் அரசன் அறிவற்ற கெட்டவர் ஒருவரோடுதானும் நட்பாக இருத்தல் கூடாதென்பதைச் சிற்றினஞ் சேராமை என்ற அதிகாரத்தில் விளங்கப்படுத்துகின்றார்.

சிறந்த அறிவுள்ள அரசன் கெட்டவர்களுடன் சிநேகம் கொள்ள மாட்டான். அதற்கு அவன் அஞ்சுவான். ஒருவன் யாருடன் நட்பாக இருக்கிறான் என்பதன் மூலம் அவன் நல்லவனோ, கெட்டவனோ என்பதை உலகினர் அறிவர். மனம் நல்லவனாக அரசன் இருந்தாலும் மேலும் நல்லவர்களோடு நட்பாக இருத்தல் வேண்டும். உப்பு நிலத்தில் வீழ்ந்த மழைநீர் உப்பாதல்போலக் கெட்டவர்களுடன் சேர்ந்தால் நல்ல அரசனுடைய நல்லமனமும் கெட்டுவிடும். கெட்டவர்களுடன் சேராது மனம் தூய்மையுடையவனுக்கு நல்ல பிள்ளைகள் பிறப்பர். அவன் மறுமையிலும் நன்மையடைவான்.

இவ்வாறு கெட்டவர்களை நீக்கி நல்லவர்களுடன் நட்புக் கொண்ட அரசன் ஒரு கருமத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து செயல்வகை என்ற அதிகாரத்தில் விளக்க முற்படுகிறார்:-

அரசன் ஒரு கருமத்தைச் செய்யத் தொடங்கும் போது நல்லறிஞர்களோடு யோசிக்க வேண்டும். அக்கருமத்தினைச் செய்வதற்கு ஏற்படும் செலவையும் அதனால் வரும் வருமானத்தையும் அறிந்து வருமானம் கூட வருமென்றால் தொடங்க வேண்டும். யோசியாது தொடங்கி அதனால் நட்டம் வருமென்று இடையில் அதை விடக்கூடாது. செய்ய வேண்டியதை உடனே செய்ய வேண்டும். செய்யக் கூடாதவற்றைச் செய்யக் கூடாது. நல்லதைச் செய்ய முற்படும்போதும், மக்கள் விரும்பாது விட்டாற் செய்யக்கூடாது.

அரசன் ஒரு கருமத்தைச் செய்ய உபாயஞ் செய்ய வேண்டும் என்று மேற்கூறிய வள்ளுவர் அவன் யுத்தம் செய்யப் போகும்போது என்ன உபாயஞ் செய்ய வேண்டும் என்பதை வலியறிதல் என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்.

யுத்தம் புரியப் புறப்படும் அரசன் தனது வலியையும், மாற்றான் வலியையும், தனக்குத் துணையானவர் வலியையும் அறிந்து போக வேண்டும். குறைந்த தன் வலிமையைப் பெரிதாக வியக்கக் கூடாது. மாமரத்தில் பழம் பிடுங்க அதன் கிளையில் ஏறியவன் இன்னும் சிறிது உயரத்துக்கு ஏறுவோம் என்று ஏறிக் கிளை முறிய விழுந்தான். ஏன், தான் வீரன் இன்னும் மேலே போவேன் என்று எண்ணியமையால் என்க. அதுபோல் தன் ஆற்றலுக்கேற்ற வெற்றி பெற்றவன் மேலுஞ் சென்றால் தோல்வியடைவான். மயிற்பீலி மென்மையானது தானே, அதை எவ்வளவும் ஏற்றலாம் என்று எண்ணி வண்டியில் ஏற்ற அவ்வண்டியின் அச்சு முறிந்தது. இதுபோல, வலி குறைந்த அரசர்கள்தானே என்றுபல அரசர்களுடன் யுத்தஞ் செய்யச் சென்றால் அவர்கள் அனைவரும் ஒன்றுகூட இவன் தோல்வியடைவான். படைவலி மாத்திரமல்ல பொருள்வலியையும் அரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர வேண்டும். அப்படி அறியாது படையைத் திரட்டிய அரசன் படையினருக்கு வேதனம். உணவு கொடுக்க முடியாமையால் அந்தப் படையினரால் வெறுக்கப்படுவான். வருமானங் குறைந்தாலும் செலவு அதிகம் இருக்க நடக்கக் கூடாது. தனது வருவாய்க்கு மிஞ்சிய உதவியும் அரசன் செய்யக்கூடாது

இப்படித் தனது படைவலி, பொருள்வலியை அறிந்த அரசன் போரிடப் போகும்போது அது செய்தற்குரிய காலத்தை அறியவேண்டுமென்பதைக் காலம் அறிதல் என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்:- பகலில் ஆந்தைக்குக் கண் தெரியாமையினால் காக்கை அதை வெல்லும். இரவில் காகம் அதனை வெல்லமாட்டாது. அதுபோல மிக்க வலியுள்ள அரசனும் மெலிய அரசனுடன் யுத்தம் செய்யப் போகும் காலத்தை அறிய வேண்டும். இங்கே காலம் என்பது. வெப்பமும் குளிருமற்று படையினருக்கு உணவு கிடைக்கக் கூடிய காலமென்க. சமருக்குப் போகும் ஆட்டுக்கடா சிறிது பின்னுக்குப் போதல் ஓடி நன்றாக இடிப்பதற்காகவே. அதுபோல ஊக்கமுள்ள அரசன் காலம் பார்த்துப்பின்னிடுவது பகைவனை ஓங்கி அடிக்க என்றறிக. குளக்கரையில் கொக்கு ஆடாமல் அசையாமல் ஒரு காலைத் தூக்கி நிற்பது தனக்கு அண்மையில் மீனை வரவிட்டுத் தப்பாமற் குத்த என்பதை நாம் அறிவோம். அதுபோல ஆற்றலும் அறிவும் உள்ள அரசன் போரிடப் பின் நிற்பது தகுந்த காலத்தில் பகைவனை வெல்வதற்கே என்பது அறிக என்கிறார் வள்ளுவர். மாரிகாலம் வந்தபடியால் அது நீங்கும் வரையில் பொறுத்திரு என்று சுக்கிரீவனுக்கு இராமர் கூறியதும் இக்காலம் கருதி என்க.

இவ்வாறு வலியம். காலமும் அறிந்து போரிடப் போக வேண்டிய அரசன் யுத்தம் செய்வதற்குரிய இடத்தையும் அறிய வேண்டும் என்பதைஇடனறிதல் என்ற அதிகாரத்தில் பினவருமாறு விளக்குகின்றார்.

சிறுபடையுடையவன் அரணான இடத்தில் நின்று தாக்கினால் பெரும் வலியுடைய அரசன் தோல்வியடைவான். பெரும் வலிமையுடைய அரசனும் பாதுகாப்பான இடத்தில் நின்று தாக்கினாற்றான் வெற்றி பெறுவான். யானை சேற்றுக்குள் காலை மாட்டிக்கொண்டு நிற்கும்போது அதனைச் சிறுநரி வென்று விடும். தேர் கடலில் ஓடாது. நாவாய் நிலத்தில் ஓடாது. இவைகள் போல ஏற்ற இடத்தில் நின்று எதிர்த்தால் எவரும் போரில் வெல்ல முடியும். சிறிய படையினராயும். அரணற்றவராயும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உயிர் விடும் துணிவுள்ள வர்கள். அவர்கள் சொந்த ஊரிலும் நிற்கிறார்கள். இவர்களைப் பெரும்படை யுடையவர் வந்து தாக்கினால் இப்பெரும் படையினர் தோல்வியடைவர்.

இப்படிக் காலமும். இடமும் அறிந்து போர் புரிய ஆயத்தம் செய்யும் அரசன் தனக்கு ஆலோசனை கூறும் மந்திரியையும் மற்றும் அதிகாரி களையும் தெரிந்து நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில் விளக்க முற்படுகிறார்.

மந்திரிமாரையும் மற்றும் அதிகாரிகளையும் அவர்களது நற்குடிப் பிறப்பு. அறிவு, நற்குணம், அவர்களது செயல் ஆகியவைகளைக் காட்சி, கருத்து. ஆகமம் ஆகிய அளவைகளால் அறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சனை நான்கு விதமாக ஆராய்ந்து தெரிய வேண்டும்.

1) முதலாவது அறம் பற்றி:-

அரசன் புரோகிதரை அனுப்பி இந்த அரசன் அறத்தினபடி நடக்கவில்லை. உமது கருத்தென்ன என வினவி அறிதல்.

2) பொருள் பற்றி:-

இந்த அரசன் உலோபி. இவனை நீக்க எண்ணுகிறோம். உமது கருத்தென்ன?

3) மூன்றாவது இன்பம் பற்றி:-

ஒரு கிழவியை அனுப்பி ஒரு பெண் உன்மீது காதல் உடையவள். நீ விரும்பினால் உன்னை அவள் அடையச் செய்வேன். உமது கருத்தென்ன?

4) நான்காவது உயிரச்சம்:-

அரச உத்தியோகத்தரைக் கூட்டி இவரையும் அழைத்து இந்த அரசனைக் கொல்வோம். உமது சம்மதம் என்ன?

அரசன் இப்படி ஆராய்ந்து நல்லவனாகக் கண்டால் அவனை மந்திரியாக ஆக்கலாம். இவ்வாறே மற்ற அதிகாரிகளையும் ஆராய்ந்து நியமிக்க வேண்டும். இப்படித் தெரிவதையே

**அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**
**திறம் தெரிந்து தேறப்படும்**

என வள்ளுவர் குறிப்பிட்டதாகும். இந்த அதிகாரிகள் சுற்றமுடைய வர்களாக இருக்கிறார்களா என்பதை அறிய வேண்டும். சுற்றம் உடையவரே பழிக்கு நாணுவர். ஒரு குற்றமும் இல்லாதவரைக் காணுதல் இயலாது. ஆதலால் குற்றத்தையும் குணத்தையும் ஆராய்ந்து குணம் அதிக மானவர்களை நியமிக்க வேண்டும். நன்றாகப் படித்தவனும் பிழை விடுவான். ஆதலால் எல்லாம் தெரிந்தவனையே தெரிய வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கக் கூடாது. அன்பு மிகுதியால் தகுதியில்லாதவனை உயர்ந்த பதவிக்கு நியமிக்கக் கூடாது. ஆராயாது தெரியக் கூடாது. ஆராய்ந்து தெரிந்தபின் அவனில் ஐயங் கொள்ளலாகாது.

இனி, இவ்வாறு ஆராய்ந்து தெரியப் பட்டவர்களை என்ன என்ன பதவிகளில் நியமிக்கலாம் என்று நியமித்து அவர்களை அப்பதவிக்குரிய தகுதியை மேலும் பெறப் பயிற்ற வேண்டும் என்பதை தெரிந்து வினையாடல் என்ற அதிகாரத்தில் விளக்க முற்படுகின்றார்:-

ஒரு அரசன் பொதுவான ஒரு விடயத்தைச் செய்விக்கும்படி ஒரு மந்திரியிடம் ஒப்புவிக்க அவன் அரசனுக்கு நன்மையாக முடிந்தால் அதையறிந்து அந்த அரசன் அம்மந்திரியிடம் பிரதான விடயங்களைச் செய்விக்கக் கொடுக்கலாம். அரசனிடம் அன்புடன், நல்லறிவும், தெளிவும், ஆசையற்றவனுமாகியவனை அரசன் மந்திரி முதலாய தொழில்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்த வேண்டும். இவன் இக்கருமத்தை இதனாற் செய்து முடிப்பான் என்று அறிந்து அவ்வேலையைச் செய்ய அவனிடம் கொடுக்க வேண்டும். ஒரு பதவியைக் கொடுத்தால் அப்பதவியைப் பெற்றதும் சிலர் அகங்காரங் கொண்டிருக்கின்றனர். சீவக சிந்தாமணியில் சீவகன் தனது அரசைத் தற்காலிகமாக ஆளக் கட்டியங்காரனிடம் கொடுத்து தன் மனைவியிடம் இன்பமார்ந்து பொழுது போக்க அக் கட்டியங்காரன் அவ் வரசனைக் கெடுக்க நினைத்தமை இதற்கு நல்ல உதாரணமாகும். ஒரு தொழிலுக்கு ஒருவனை நியமித்தபின் அவனை அது சம்பந்தமான பயிற்சி பெற அனுப்ப வேண்டும்.

அரசன் தனது அதிகாரிகள் நாட்டு மக்களுக்கு ஏற்ற முறையில் நடக்கிறார்களா என்பதை நாடோறும் ஆராய வேண்டும்.

அரசனது வினை செய்வாரைப்பற்றிக் கூறிய வள்ளுவர் இனி, அரசனது சுற்றத்தவரை அரசன் எப்படி நடத்த வேண்டும் என்பதைச் சுற்றத்தழால் என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்.

ஒரு அரசன் வளத்துடன் இருக்கும்போது தனது தாய், தந்தை, சுற்றத் தவர்களுக்கு கொடுத்து அன்போடு உரையாடி, அவர்களது இன்ப துன்பங்களில் பங்குபற்றி நடக்க வேண்டும். அரசன் இப்படி நடந்தால் அவனது சுற்றத்தவர்கள் இந்த அரசனிடம் பெரும் அன்பு காட்டுவர். இந்த அன்பு அவனது சேனைப் பலத்திலும் கூடின பலமாகும். இந்த அரசன் போர் செய்து தோல்வியுற்றால் அப்போது இச்சுற்றத்தவர் ஓடோடியும் வந்து எங்கள் தெய்வமே! உங்களுக்கு இந்நிலை வந்து விட்டதே. நீங்கள் செய்த பேருதவியை நினைக்கவும் இப்போது உங்கள் நிலையைப் பார்க்கவும் மனம் உருகுகின்றதே என்பார்கள். ஆனால் இந்த அரசன் நன்றாய் இருந்த காலத்தில் உதவி பெற்ற சுற்றமல்லாதவர்கள் இப்படி வந்து ஆறுதல் கூற மாட்டார்கள்.

அரசனிடம் வெறுப்புக் கொண்டு பிரிந்த சுற்றத்தவர் அரசன் நல்லவனாக நடக்கக் கண்டு அவனை அணைவர். அந்த அரசன் முன்பிருந்த நிலையில் நிற்க அவனை விட்டு முன்னம் பிரிந்த சுற்றத்தினர் அவனைச் சேர வரும்போது அரசன் அவர்களைச் சேர்ப்பதில் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். அவனைக் கெடுக்கவும் அவர்கள் வரக்கூடும். ஆதலால் இப்படியான நேரத்தில் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும்.

அரசன் தாய் தந்தை சகோதரர்களையும், ஒன்று விட்ட சகோதரர், சித்தப்பா, மாமன், மாமி முதலானவர்களையும் தனது சபையில் ஒரேமாதிரி நடத்தாது, உரிமைக்குத் தக்க விதத்தில் மரியாதை கொடுக்க வேண்டும். இப்படி நடந்தால் தான் உரிமை கூடிய சுற்றத்தவர் மனம் புழுங்காது அரசனுடன் அன்பு காட்டுவர்.

இப்படி அன்பான சுற்றம் வாய்க்கப் பெற்று வலியுடன் திகழும் அரசன் தனது கடமையை மறந்து வாழ்ந்தால் அந்தச் சுற்றப் பலத்தால் யாதும் பயனில்லை என்று உணர்ந்த வள்ளுவர் மறவாமை ஆகியபொச்சு ஆவாமை யை விளக்கப் புகுகின்றார்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்குடியிலும், சூதாட்டத்திலும், காம இன்பத்திலும் நாட்டங் கொள்ளும் அரசன், அரச கடமையை மறந்து முற்கூறியவற்றில் ஈடுபட்டு அழிவடைந்த அரசர்களின் சரிதைகளை நினைந்து திருந்த வேண்டும். தனது கடமையை மறந்த அரசன் பொருளையும் பெறான், புகழையும் அடையான். தனது கடமையை எந்நாளும் நினைப்பவனே அக்கடமையைச் செய்து முடிப்பான்.

இனி, இவ்வாறு மறதியற்ற அரசனே தனது அரசியலை முறைப்படி நடத்துவான். அந்த முறைமையைச் செங்கோன்மை என்ற அதிகாரத்தில் சொல்ல முற்படுகின்றார். நேரான செங்கோல் போல ஒரு பக்கம் சாயாது அரசனது நீதி இருக்க வேண்டும் என்பதினாலேயே செங்கோன்மை என்று கூறப்படுகின்றது.

தன்கீழ் வாழுங் குடிமக்கள் குற்றஞ் செய்தால், அக்குற்றத்தை அறிந்து இரக்கங் காட்டாது உயிரினும் மேலானவராயிருந்தாலும் நடுவு நிலை நின்று மந்திரிமாருடன் யோசித்து அக்குற்றத்திற்கேற்ற தண்டனை கொடுப்பதே அரசனது முறையாகும்.

அநாதியானவை அறமும், அறிஞர்களின் நூலுமாகும். அங்ஙனம் அவை இருந்தாலும் அரசனது நீதி இல்லை என்றால் அவை நிலைபெறா. அதனால் அந்த அறத்துக்கும் நூலுக்கும் அரசன் நீதி ஆதியாகவுள்ளது. மழையை உயிர்கள் நோக்கி நிற்பதுபோல மன்னவனின் நீதியை அவனது குடிமக்கள் எதிர்பார்க் கிறார்கள். குடிகளைத் தழுவி அரசு நடத்தும் அரசனை அவனது குடிமக்கள் போற்றுவர். இப்படியான அரசனது நாட்டில் மழை பெய்யும், விளைவும் நன்றாகும். அரசனது வேல் அவனுக்கு வெற்றி தராது. அவனது முறையே (நீதி) அவனுக்கு வெற்றியைக் கொடுக்கும். அத்துடன் அவனையும் காக்கும். எல்லோருக்கும் இலகுவில் தரிசனங் கொடுத்து குறை கேட்டு நீதியை மன்னன் வழங்க வேண்டும். கொலை செய்யுங் கொடியவர்களை வேந்தன் அழித்தல் பாவமல்ல, அது களை பிடுங்குவதற்கு நிகர் என்கிறார்.

இவ்வாறு மன்னனது செங்கோன்மையைக் கூறிய வள்ளுவர் இன்னும் அதைப் பற்றிக் கூற விரும்பி கொடுங்கோன்மை என்னும் அதிகாரத்தில் மேலும் விளக்க முற்படுகின்றார்.

வேலோடு நிற்பவன் வழியில் பொருள் கொண்டு போவோனிடம் நீ வைத்திருக்கும் பொருளைத் தா என்று கேட்பது போல இருக்கும் கொடுங் கோலுள்ள அரசன் தனது குடிமக்களிடம் அதிக வரியைக் கேட்பது என்று அந்த அரசனைத் திருவள்ளுவர் வெறுக்கின்றார். கொடுங்கோலுள்ள நாட்டில் வானம் மழை பெய்யாது. அரசன் கூடிய வரி வாங்கியதால் மனம் நொந்த குடிமக்கள் விடும் கண்ணீர் அந்த அரசனது செல்வத்தை அழிக்கும். கொடிய அரசனது நாட்டில் பொருளை வைத்திருப்பதிலும் பார்க்க வறுமையாக இருப்பது மன ஆறுதலாக இருக்கும்.

இனி, இந்தக் கொடுங்கோன்மையோடு தொடர்புடையது அஞ்சு வதைச் செய்தலாகும். ஆதலால் அஞ்சுதலைச் செய்யாமையாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருவந்து செய்யாமையை விளக்க முற்படுகின்றார். இந்த அஞ்சுதலைச் செய்யாமை மூன்று பிரிவுடையது. அவை பின்வருமாறு:-

1. அரசன் தனது குடிமக்கள் அஞ்சுவதைச் செய்யாமை:-

அரசன் கடுமொழி கூறக்கூடாது. கோபமுகத்துடன் பார்க்கக் கூடாது. கடின தண்டனைகளைக் கொடுக்கக் கூடாது. அன்பில்லாதவனாக இருக்கக் கூடாது. தண்டனை கொடுக்கும்போது தடியை உயர ஓங்கி மெல்ல அடித்து பயப்படுத்த வேண்டும்.

2. அரசன் தனது மந்திரிமாரைப் பயப்படுத்தக் கூடாது.

ஒரு அரசன் தனது மந்திரிமாருடன் யோசியாது தனது எண்ணப்படி நடந்து தோல்வியடைந்தால் அந்தத் தோல்வியைத் தாங்க முடியாது தனது மந்திரிமாரைத் திட்டக்கூடாது.

3. தான் அஞ்சுவதை அரசன் செய்யாமை

தனது நாட்டுக்குத் தேவையான அரணையும், படையையும் வைத்திருக்காது இருந்தபடியால் பகையரசரால் தோல்வியடைதல். இவ்வாறில்லாது படையையும் அரணையும் பலப்படுத்த வேண்டும்.

மேலும் பேய் காவல் இருக்கும் செல்வம் பேய்க்கு உதவுதலில்லை. பிறருக்கும் உதவுதலில்லை. அதுபோலக் கொடிய அரசனுடைய செல்வம் அவனுக்கும் நல்வழி தேட உதவாது. அவனை ஒருவருஞ் சேராதபடியால் பிறருக்கம் உதவாது.

அரசன் தனது நாட்டு மக்களை வெருட்டுவதற்குக் கொடிய கொள்ளைக் கூட்டத்தினரை உபயோகப்படுத்தக் கூடாது.

இந்த வெருவந்த செய்யாமை அன்புடைமையாகும். இதனை இன்னும் விரித்துச் சொல்கிறார் ஆதலால் இதன்பின் கண்ணோட்டம் பற்றிச் கூறுகின்றார்.

கண்ணோட்டம் என்பது தன்னோடு பழகினவரைக் கண்டால் அவரைப் பார்க்கக் கண் ஓடுவதுடன் அவர் சொன்னது மறக்க மாட்டாமையுமாகும். இந்தக் கண்ணோட்டமுள்ள அரசனது உயிர் அழ்கானது. இவனின் கீழுள்ள மக்கள் பயப்படாது மகிழ்வுடன் வாழ்வர். அவர்கள் வாழ்வு வளம் பெறும். தன்னோடு பழகியவர் குற்றம் செய்தால் அளவாகக் கண்ணோடி அவர் குற்றத்தை விசாரித்துத் தண்டிக்க வேண்டும். மனிதன் கண்ணோடு இருக்கும்போது இந்த அன்புப் பார்வை செய்ய வேண்டும். இல்லையேல் அவன் மரம் போலாகி விடுவான். ஒரு அரசன் தனது பகைவனிடமும் இந்தக் கண்ணோட்டம் காட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நண்பினன் தனக்குத் தரும் பாலில் நஞ்சைப் போடுவதைக் கண்ட பின்னும் அதைக் கொடுத்தால் மறுக்காது வாங்கிக் குடிப்பான். அவனைத் தண்டிக்க எண்ணான். இப்படித் திருவள்ளுவர் கூறியதற்கு அறிஞர்கள் பின்வருமாறு கருத்துக் கூறுகின்றனர். ஒருவன் தனக்குக் கொடுமை செய்வதைக் கண்ட இடத்தும் அவனை வெறுக்காது அவனுக்கு நன்மை செய்ய வேண்டும். அதுவே நாகரிகம் எனப்படும் என்கிறார். இதுதான் கண்ணோட்டம் உள்ள அரசனது இயல்புமாகும்.

இவ்வாறுள்ள அரசன் நாட்டை ஆளும்போது நாட்டில் உள்ள நட்பினர், பகைவர், இவ்விரண்டும் அற்றவர்களாகிய நொதுமலர் என்ற முத்திறத்தினரையும் தான் தன் அரண்மனையில் இருந்து கொண்டே ஆட் போக்கி அறியவேண்டும். இப்படி அறியப் போகிறவர்களே ஏற்றவராவர். இவர்களை நாம் தற்போது இரகசியப் பொலீசார் என்கிறோம். இவர்கள் போக முடியாத இடங்கள் எல்லாம் மாறு வேடத்திற் சென்று அறியக் கூடியவர்கள். தமக்கு என்ன இடர் வந்தபோதும் தாம் யார் என்பதைக் கூறார்கள். அரசன் ஒரு தூதுவனுடன் மற்றத் தூதுவனைச் சேரவிடாது அனுப்பி மூன்று தூதுவர் சொல்வது ஒத்து இருப்பின் அதை உண்மையென அறிவான். அறிந்து ஊர் மக்களில் நன்மை சொன்னவர்கட்கு நன்மை செய்வான். அல்லாதவர்களைத் தண்டிப்பான். இப்படியான உதவி செய்த தூதுவர்களுக்குப் பரிசு கொடுப்பான். அப்படிக் கொடுப்பதை இரகசியமாக அரசன் செய்ய வேண்டும். பரகசியப்படுத்தினால் யாருக்கு உபகாரங் கொடுத்தது? ஏன் கொடுத்தது என ஊர்மக்கள் அறிந்து ஒற்றனுக்குத் தெரிந்துவிடும் என்று அரசனைப் பற்றிய செய்தியை மறைத்துவிடுவார்கள். இதனால் அரசன் உண்மை நிலை அறியாது பகைவரால் தாக்கப்படுவான்.

இவ்வாறு ஒற்றரால் விடயங்களை அறிந்த அரசன் அதற்கேற்ற வினையைச் செய்வதில் ஊக்கமுடையவனாக இருக்க வேண்டும் என்பதை ஊக்கமுடைமை என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

ஊக்கந்தான் ஒரு அரசனுக்கு வெற்றியைத் தரவல்லது. அவன் உயர்ந்த விடயத்தைச் செய்வதில் ஊக்கங் கொள்ள வேண்டும். அது தோல்வியில் முடிந்தாலும் அதனால் அவன் புகழடைவான். ஊக்கமுடையவனே பொருள் சேர்த்து ஈதலைச் செய்து புகழடைவான். ஊக்குமடையவன் தோல்வியடைந்தாலும் மனம் தளரான். மேலும் அம் முயற்சியில் ஈடுபட்டு வெல்வான். ஊக்கம் குறைந்தால் ஊக்கம் குறைந்த பெரிய யானையை அது கூடிய சிறிய புலி வெல்ல யானை தோற்பதுபோல அவன் தோல்வியுறுவான்.

இனி, இந்த ஊக்கமுடைய அரசனுக்கும் ஒரு காலத்தில் தமோகுணத்தால் சோம்பல் வரும். அந்தச் சோர்வை நீக்கி வாழ வேண்டும் என்பதை மடியின்மை என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார். மடியுள்ளவனது குடி கெடுதல்போல மடியுள்ள அரசனது நாடும் கெட்டு விடும். ஒரு கருமத்தைச் செய்வது, பின் விடுவது, சோர்வு, நித்தமும் நித்திரை கொள்ளல், மறதியடைதல் ஆகியவை கெட்டுப்போவோன் விரும்பும் செயல்களாகும். இந்தச் சோர்வுள்ள அரசன் நாட்டு மக்களால் இகழப் படுவான். சோர்வில்லாதவன் அநேக நாடுகளை ஆள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பல் இல்லாத அரசன் ஒரு முயற்சியும் செய்யாது உற்சாகமாக இருக்கலாம். அப்படி இருக்காது நித்தமும் முயன்று கொண்டிருக்க வேண்டும் என்பதை **ஆள்வினையுடைமை** என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்:-

இந்தப் பெரிய காரியத்தை நான் எப்படிச் செய்து முடிப்பது என்ற பயப்படாது அதனைச் செய்வதற்குரிய அறிவுடன் தொடங்கிச் செய்ய அது முடியாமற் போகாது. அப்படி முடியாதிருந்தாலும் அப்பெரிய காரியத்தைச் செய்ய முற்பட்ட ஒன்றே பெருமையைக் கொடுக்கும். இடைவிடாது எந்த முயற்சியையுஞ் செய்ய வேண்டும். முயற்சி இல்லாதவன் கொடையாளியாக இருக்க முடியாது. அவனது செயல் பேடி தனது கையில் வாள் வைத்திருப்பதற்கு நிகராகும். விதி நற்பலனைத் தராதென்று வாளாவிருக்காது. முயன்றால் அந்த உடலுழைப்புக்கேற்ற பலனாவது கிடைக்கும். செய்வது தெரிந்து வைத்தும் அக்கருமத்தை செய்யாதிருந்தால் உலகினர் பழிப்பர். முயற்சி உடையவனது பாதத்தில் இலக்குமி பணிந்து நிற்பாள்

இவ்வாறு முயற்சியுடைய அரசன் முயலும்போது இடையில் முயற்சிக்கு இடையூறு வந்தால் மனந் தளராது இருக்க வேண்டும் என்பதை **இடுக்கணழியாமை** என்ற அதிகாரத்தில் இறுதியாகக் கூறப் புகுகின்றார்.

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃது ஒப்பதில்**

என்ற குறளை நாம் நன்கு கேட்டிருக்கிறோம். இதன் கருத்து:- துன்பம் வரும்போது சிரி. அப்படிச் சிரித்தால் அத்துன்பம் நீங்கும் என்பதாகும். இஃது எப்படி ஆகும் என்பது கேள்வி? அரசன் ஒரு நல்ல காரியத்தைச் செய்து கொண்டு போகும்போது ஏதும் இடையூறு வந்தால் அதற்காக வருந்தாது, அக்காரியம் நிறைவு பெற்றபோது அடையும் இன்பத்தை நினைத்து, ஏ! இடையில் வந்த துன்பமே! நான் எனது காரியம் நிறைவடைந்ததும் அடைய இருக்கம் மகிழ்ச்சியை நினைக்க உன்னை ஒரு துக்கமாகக் கருத முடியுமா என்று சிரிக்க வேண்டும். அப்படி நினைத்துச் சிரிக்கத் துக்கம் ஏற்படாது. வினையில் தீவிரமாக ஈடுபட்டு அதனை நிறைவாக்கி இன்பமடைவான்.

இந்த அதிகாரத்தில் மூன்று விதத் துன்பத்தை விபரிக்கின்றார் திருவள்ளுவர் என உரையாசிரியர் கூறுகிறார்.

முதலாவது:- ஊழால் வருவது. ஊழால் வருந் துன்பத்தை அறிஞன் ஏற்று மகிழ்வான்.

இரண்டாவது:- பொருளால் வருவது. பொருள் உள்ளபோது அதில் இன்பம் அனுபவிக்காதவன் பொருளில்லாதபோது துன்பம் அடையான்.

மூன்றாவது:- உடல் வருத்தத்தால் வருவது. தனது குடியை உயர்த்தப் பாடு படும் ஒருவன் உடம்புக்கு நோ வருதல் இயற்கை தானே. இதற்காக வருந்துவதா என வருந்தான் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 அங்கவியல்

## அதிகாரம் 2

### 1. அமைச்சு

அரசனைப் பற்றிக் கூறிய வள்ளுவர் அரசனுக்குதவியான ஆறு அங்கங் களையும் கூறத் தொடங்கி முதற்கண் அரசனுக்கு இணையான அமைச்சனது இயல்பைக் கூறுகின்றார்.

அரசனது கருமங்களைச் செய்யும் அமைச்சன் ஒரு செயலைச் செய்வதற்குத் தேவையான கருவிகளையும். அக்கருமத்தைச் செய்யும் முறையையும். அதைச் செய்வதற்கு ஏற்ற காலத்தையும். இடையூறு வந்தால் அதை நீக்குமாற்றையும் அறிய வேண்டும்.

அவன் விவேகமும். நூல் அறிவும் உடையவனாய் இருக்க வேண்டும். நல்லதைச் சொல்லக் கேட்காத அரசனைக் கைவிடாது எப்படியும் அவன் கேட்டு நடக்கச் செய்ய வேண்டும். தனது அரசனுக்குப் பகையான அரசன் வலி யுடையவனாக இருந்தால் அவனைத் தன் அரசனுடன் நட்பாக்க வேண்டும். மாற்றரசன். வலிகூடிய அரசனுடன் நட்பாக இருந்தால் அந்த நட்பை நீக்க முயல வேண்டும். தனது அரசனுக்குக் கேடு செய்யக்கூடாது.

இனி. இப்படியான மந்திரி நல்ல சொல்லாற்றலுடையவனாய் இருப்பது மிகவும் முக்கியமென்று அந்த மந்திரியின் சொல்வன்மையை வள்ளுவர் விளக்குகின்றார்.

அமைச்சர் மற்றவர் விரும்பிக் கேட்கக் கூடியதாகவும். பகைவர் கூடக் கேட்க விரும்பக் கூடியதாகவும் பேசக்கூடியவனாக இருக்க வேண்டும். அவன் பிழைவிடாமற் சொல்ல வேண்டும். ஒழுங்குபடுத்திப் பேசப் பழகவேண்டும். இப்படி பேசாதவன் பெரிய அறிவுடையவனாக இருந்தாலும் அதனால் யாதும் பயனில்லை. சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

இப்படிச் சொல் மாத்திரமல்ல அவனது செயலும் நன்றாக வேண்டும் என்பதை வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் பின்வருமாறு விளக்குகிறார்.

மந்திரி அரசனுக்காகச் செய்யுங் கருமம் உலகினராற் பழிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. கெட்ட வழியாற் பொருளைத் தேடினால் அது விரைவில் அழிந்து விடும். குடிகள் அழுந்தத் தான் வரியை வாங்க நடவடிக்கை எடுக்கலாகாது. நல்லவழியில் தேடிய பொருள் பகைவர் அபகரித்தாலும் அது ஏதோ ஒரு வழியால் வந்து சேரும். இப்படியான நல்ல கருமங்களைச் செய்ய வேண்டுமென்ற வள்ளுவர் இனி இந்த மந்திரி இந்தத் தூய வினைகளைச் செய்யும் போது கலங்காது உறுதியாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய அவசியத்தை வினைத்திட்பம் என்ற அதிகாரத்தில் விளக்க முற்படுகின்றார்.

அரசனுக்கு நல்லதெனச் செய்யத் தொடங்கிய கருமத்தைச் சோர்வின்றி உடனே செய்து முடிக்க வேண்டும். தொடங்கி இடையில் நிறுத்தக்கூடாது. இடையில் ஏதும் இடர் வந்தால் அது கருதி மனம் சோராது செய்ய வேண்டும். பெரிய கருமத்தைச் செய்யத் தொடங்கிய ஒருவன் மெல்லிய உடம்புடையவனாக இருப்பதைக் கண்டு, இவர் இதைச் செய்து முடிப்பாரோ? என்று உலகினர் ஐயப்படக் கூடாது. அவர் உடம்பில் மென்மையுடையவராக இருந்தாலும், செயலில் வலியராக இருப்பார். எதுபோல? உருளும் பெரிய தேருக்கு அச்சாணி எவ்வளவு சிறியது. அது இல்லை என்றால் அந்தப் பெரிய தேர் ஓடுமா? ஓடாது. அதுபோல என்க.

இவ்வாறு மன உறுதியுடன் மந்திரி இருக்க வேண்டும் என்று கூறிய வள்ளுவர் இனி அந்த மந்திரி ஒரு கருமத்தை எப்படி அரசனுக்குச் செய்ய வேண்டும் என்பதைவினைசெயல்வகை என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

மந்திரி ஒரு தொழிலைச் செய்யத் தொடங்கும் போது, அதற்குரிய பொருள், கருவி, காலம், செயல்முறை, இடம் ஆகிய ஐந்தையும் தேடிக் கொண்டு விரைவாகச் செய்ய வேண்டும். இடையில் விடக்கூடாது. அப்படியான கருமத்தைச் செய்து வெற்றி பெற்ற மந்திரிமாரின் செயல்முறைகளை அறிந்து செயற்பட வேண்டும். இடையூறு வந்தால், அதை எப்படி நீக்கலாம் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். பகைவரை வெல்ல முடியாவிடில், நித்தமும் போர்புரிய எண்ணாது சமாதானஞ் செய்ய வேண்டும். தனது சேனை பயப்படும் என்றால் வலிய அரசனின் படையை உதவிக்குப் பெற வேண்டும்.

இப்படி அமைச்சனைப் பற்றிக் கூறி வருகையில் தூதுவனைப் பற்றி இடையில் கூறத் தொடங்குகிறார். ஏன்?

மந்திரி பகை அரசரைச் சிநேகம் செய்ய வேண்டின் செய்விப்பதற்கும், பகை அரசரின் நட்பானவரைப் பிரிக்க வேண்டின் பிரிக்கவும் தான் போகாது ஒருவரைத் தூதுவிட வேண்டும். இக்காரணத்தால் தூதுவனைப்பற்றிக் கூறுகிறார். அத்தூதுவன் மந்திரி சொல்லியதை அப்படியே சொல்பவனாயும் இருப்பான், அல்லது தானே யோசித்துச் சொல்ல வல்லவனாயும் இருப்பான். இதில் முன்னவன் மந்திரியிலுங் காற்கூறு குறைந்தவன்.

பின்னவன் மந்திரிக்குச் சமமானவன். இதனால் அமைச்சியலில் தூதுவன் இடம்பெறுகிறான்.

இத்தூதுவன் அரசனிடம் அன்புடையவனாய், நல்ல நீதிநூல்களைக் கற்றவனாய், பகை அரசரின் மனநிலை அறிந்து, அவன் இருக்கும் இடமறிந்து, காலமறிந்து சொல்ல வல்லவனாய், என்ன இடர்வரினும் இரகசியத்தை வெளிப்படுத்தாதவனாய்ச் சிரித்துச் சிரிக்கப் பண்ணிச் சொல்பவனாய் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, மந்திரி அரசனிடம் அன்புடன் இருக்க வேண்டும் என்பதற் கிணங்க, அந்த மந்திரி அரசனிடம் அன்புடனும், பண்புடனும் இருக்க வேண்டிய தன்மையை மன்னரைச் சேர்ந்தொழுகல் என்ற அதிகாரத்தில் கூற முற்படுகின்றார்.

அமைச்சன் அரசனுடன் பழகும் போது குளிருக்குத் தீக்காய்பவர் நெருப்புக்குக் கிட்டப் போகாதும், அகலாதும் இருப்பதுபோல, அரசனுடன் பழக வேண்டும். அரசனுக்கு முன் பிறருடன் இரகசியம் பேசாதும், சேர்ந்து சிரிக்காதும் இருக்க வேண்டும். அரசனுக்கு நல்லதைச் சொல்ல வேண்டும். பிழை சொல்லக் கூடாது. வயதிற் சிறியவன் அரசன் என்று தான் நினைத்தபடி நடக்கக் கூடாது. அவன் தன் சொல்லைக் கேட்பான் என்று அவனது உத்தரவில்லாது எதையுஞ் செய்யக்கூடாது.

இப்படி அரசனிடம் அன்புள்ள மந்திரி எல்லாவற்றையும் அரசனிடங் கேட்டறியாமல் அவனது மனக் கருத்தைக் குறிப்பினால் அறியக் கூடியவனாக இருக்க வேண்டும், என்ற கருத்தைக் குறிப்பறிதல் என்ற அதிகாரத்தில் கூறத் தொடங்குகின்றார்.

அரசனது மனக்குறிப்பினை அவனது முகமும் கண்ணுங் காட்டும். அதனை அமைச்சன் தனது கண்ணாலே அளந்து அறிய வேண்டும். இப்படி அறிந்தால் பல வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரசனுக்குச் சிரமங் குறையும். அரசன் இப்படியான மந்திரிமாரில் மிக விருப்பங் கொள்வான். பளிங்குக் கண்ணாடி தனக்கு அண்மையில் உள்ள பொருளைத் தன்னுள் காட்டுவதுபோல அரசனுடைய மனதில் கோபம், இருப்பதை அவனுடைய முகத்தில் இருந்து மந்திரி அறிய வேண்டும்.

ஒரு கருமத்தைச் செய்விக்கப் புகும் மந்திரி அரசனது குறிப்பினை அறிவதோடு அந்த அரசனது அவையில் உள்ளவர்களின் தன்மையையும் அறிந்து சொல்லவேண்டும் என்பதை அவையறிதல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் விளக்குகின்றார்.

அரசனது அவையில் இருப்பவர் அறிஞர்களாயிருந்தால் அதில் மந்திரி தன் கருத்தைச் சொல்லலாம். அதனால் அந்த அவையினரும் நல்லறிவுரைகளைக் கூற இவன் அறியலாம். இது வளருஞ் செடியுள்ள பாத்தியுள் நீர் சொரிவது போல இருக்கும். அறிவற்ற சபையாயிருந்தால் அதில் சொல்லக் கூடாது. சிறந்த அறிஞர்களுக்கு விளங்கப்படுத்தும் அமைச்சன் மேலான அறிஞனாகக் கருதப்படுவான். அறிவற்ற சபை யாயிருந்தால் சாதாரண விடயத்தைச் சொல்லிப் பேச்சை நிறுத்தி விடவேண்டும். நல்ல விஷயங்களை அறிவற்ற சபையில் பேசுதல் முற்றத்தில் அமிர்தத்தை ஊற்றுதல் போல இருக்கும்.

இனி நல்லறிஞர் உள்ள சபையிலே பேசும் போது அமைச்சன் பயப்படாமற் பேசவேண்டும் என்பதை அவையஞ்சாமை என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்.

சிறந்த அறிஞர் சபையிலே பேச விரும்பும் மந்திரி நல்ல நூல்களைக் கற்றிருக்க வேண்டும். கற்ற விடயத்தைச் சொல்வதற்கு முன் அதை எப்படிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல வேண்டுமென்று ஒழுங்குபடுத்த வேண்டும். முன்னமே சொல்லிப் பழக வேண்டும். எந்த இடத்தில் தொடர்பில்லாது போகிறதென்பதை உணர்ந்து திருத்த வேண்டும். இப்படித் தயாரித்து அறிஞர் சபையில் பேசும் போது அந்த அறிஞர் கூறும் நல்ல விடயங்களை ஏற்க வேண்டும். இப்படியான அமைச்சன் அஞ்ச மாட்டான். அவன் அஞ்சுகிறான் என்றால் அவன் திட மற்றவனாகக் கருதப்படுவான். யுத்த களத்தில் பேடி ஒருவன் தனது கையில் வாளினை வீணாக வைத்து வீசுதல் போலவிருக்கும். அவையஞ்சும் மந்திரியின் அறிவு என்கிறார் வள்ளுவர்.

சபைக்கு அஞ்சுபவன் தான் சொல்லவந்த விடயத்தை அச்சத்தால் பிழையாகக் கூற நேரிடும். ஆனமையால் அமைச்சன் சபையில் அஞ்சாது பேசக் கூடியவனாக இருக்க வேண்டும்.

அமைச்சியல் முற்றிற்று

## 1. நாடு

இனி, அரசனது இரண்டாவது அங்கமாக இருப்பதும், அரசன், அமைச்சன் இவர்களால் நடத்தப்படுவதுமாகிய நாட்டைப்பற்றி வள்ளுவர் கூறுகின்றார்.

நல்ல விளைவினைச் செய்யும் உழவர்களும், நல்லவர்களும், நல்ல செல்வமும் ஒரு நாட்டில் இருக்க வேண்டும். அகதிகளைத் தாங்கும் பொருள் வளமும் வேண்டும். நீர் வயதியும் அரணும் வேண்டும். பல கட்சிகள் நாட்டில் இருக்கக்கூடாது. உட்பகைவர்களாகிய, கள்வர், கோள் சொல்வோர், வழிப் பறி செய்வோர் அங்கு வாழாதிருக்க வேண்டும். வேந்தனுக்குத் தொல்லை தரும் கொள்ளைக் கூட்டமும் இல்லாதிருக்க வேண்டும். நாட்டி ஒருபக்கமாக மலை இருக்க வேண்டும். அரசன் மக்கள் மீதும், மக்கள் அரசன் மீதும் அன்புடன் இருக்கும் இடமாகவும் நாடு அமைய வேண்டும்.

## 2. அரண்

நாடு என்பதில் அரணும் வேண்டும் என்று கூறப்பட்டதாயினும் சிறப்புப் பற்றி அரண் எனப் புறம்பாகக் கூறுகின்றார்.

உயரம், பருமை உடைத்தாய், எல்லா உணவும் உள் உடைத்தாய், நல்ல போர் வீரரை உடையதாய் அரண் இருக்க வேண்டும்.

## 3. கூழ் (உணவு)

அன்பு, அருள் என்பன பொருளைப் பெறும் வழிகளில் இருக்க வேண்டும். அரசனுக்கு காட்டில் விளைவனவும், வரிப்பொருளும், பகைவரை வென்றதால் வரும் பொருளும் பொருளாகும். அருளை வளர்க்கவும் பொருள் உதவும் நாட்டு மக்களைக் காக்கவும் பொருள் உதவும். பொருள் மதிக்கப்படாதவரையும் மதிக்கச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 படைமாட்சி

அரசனது பொருளால் உண்டாக்கப்படுவதுதான் படையாகும். அந்தப் படைஞர் அரசனுக்காக உயிர் கொடுக்க அஞ்சாதிருக்க வேண்டும். அரசன் கண்ணீர் மல்கச் சாகவேண்டும். பகைவனை எதிர்த்து அவன் செயலற்று நிற்கும் போது அவனை மன்னிக்கும் பண்பு படையினருக்கு இருப்பது நல்லது. தனது கையில் உள்ள வேலை யானைக்கு எறிந்துவிட்டு, வேறு பகைவர் எதிர்க்கும் போது தனது உடம்பில் உள்ள வேலைப்பிடுங்கி அப்பகைவர்க்கு எறிந்து சிரிக்கும் அஞ்சாமை படை வீரனுக்கு வேண்டும்.

## 5 நட்பு

இனி அப்படை போல அரசனுக்குதவும் நட்பினைக் கூறத் தொடங்குகின்றார். இவருக்கு யான் நட்பு என்று கூறினால் அது குறைந்த நட்பாக முடியும். நண்பனுக்கு உதவிஅவன் அல்லற்படும் போது தானும் வருந்த வேண்டும். இந்த நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

நல்ல குலம், நற்குணம், நல்ல சகவாசம் உடையவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். ஆராய்ந்து நாம் கொண்ட நட்பினன் சிறு பிழைகள் விடக்கூடும். அப்போது அதைப் பொறுக்க வேண்டும். பிழை செய்த நட்பினரைப் பொறுத்தவரை அவர்களது பகைவரும் விரும்புவர். கூடிச் சிரிப்பதற்கு நட்புக் கொள்ளாது, நட்பினன் பிழையாக நடந்தால் அவனை இடித்துத் திருத்த வேண்டும். கூடிப்பழகுவதிலும் பார்க்க நட்பினர் ஒருவரை ஒருவர் சிந்தித்த வண்ணம் இருப்பது மேலான நட்பாகும். உடை கழன்றதும் கை விரைந்து அவ்வுடையைப் பிடிப்பது போல் விரைவாக நட்பினனக்கு உதவவேண்டும். பழிக்கு நாணுபவனுடன் நட்பாக இருக்க வேண்டும். நமக்கு ஒரு துன்பம் வந்தால் அந்த நேரம் உதவ வருபவனே உண்மை நண்பினனாவான். கெட்டவர் சிநேகத்தை விடுதல் ஒருவனுக்குப் பெரிய இலாபமாகும். நட்பின் மிகுதியால் கேளாது ஏதும் செய்தால் அதைப் பொறுக்க வேண்டும்.

ஆனால் பொறுக்க முடியாத குற்றம் நட்பினன் செய்தால் என்ன செய்யலாம்? அதைத்தான் தீய நட்பில் வைத்து வள்ளுவர் கூறுகிறார். இந்தத் தீய நட்பை விட வேண்டும். நட்பாக இருப்பவன் பொதுச் சபையில் தன்னைப் பழிப்பவனாக இருந்தால் அவனது நட்பை நீக்க வேண்டும். பகைவர் நட்புக் கொள்ள வந்தால் முகத்தால் நட்படையவனாகக் காட்டி அகத்தால் நட்புக் கொள்ளாதே என்கிறார்.

இனி இந்த நட்பைப் பகை முகத்தால் எதிர்மறுத்துக் கூறத் தொடங்கும் வள்ளுவர் காமம் வெகுளி ஆகிய இரண்டினாலுமே இந்த நட்புக் கெடுகிறது என்று இந்த இரண்டாலும் கெடுவதைச் சொல்வதற்கு முன் அறியாமையாலே காமம், வெகுளி வருகின்றன என்று முதற்கண் அறியாமையாகிய பேதைமையைப் பற்றிக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதை. தனக்கு ஆகாதவற்றில் காதல் கொள்வான். அவன் தனது உறவினர் பசியிருக்கத் தனது பொருளைப் பிறருக்குக் கொடுத்து மகிழ்வான். அவன் பொய் சொல்வான். எடுத்த கருமத்தில் பிழைவிடுவான். இதனால் கைவிலங்கு பூணவுங் கூடும்.

இனி, இந்தப் பேதை தன்னை அறிவுடையன் என எண்ணித் தான் செய்வதே சரி என்பான். பிற அறிஞர் சொல்வதைக் கேளான். இந்த அறியாமையைக் கூறிய வள்ளுவர் அறியாமையால் வரும் காமம் வெகுளி இரண்டில், அரசனுக்குப் பகையான அரசரிடம் வெகுளி வருதல் அதிகம் உண்டாவதால் அந்த வெகுளியைப் பற்றி முதற் கூறுகின்றார்.

எப்போதும் இந்த வெகுளியை அரசன் நீக்க வேண்டும். வெகுளில் ஒருநாளும் நல்ல பலன் காண முடியாது. வெகுளியால் வரும் வெற்றி சில காலமே நிற்கும். ஆக்கம் அடைய நினைப்பவன் பேச்சுவார்த்தை மூலம் பேசி மாறுபாட்டை நீக்குவதே மேலான வழி.

இவ்வாறு பொதுவகையால் வெளியானது அரசருக்குக் கூட என்றாலும், அவனுக்குச் சிறப்பு வகையால் வெகுளி வேண்டியதொன்று எனவும், வள்ளுவர் கூறுகின்றார்.

அடுத்துக் கெடுப்பவனுடன் அரசன் பகைக்க வேண்டும். கடுங் கோபமுள்ளவனையும் கெட்ட ஒழுக்கமுள்ளவனையும் அரசன் பகைக்க வேண்டும்.

பகை ஆரம்பிக்கும் போதே அப்பகையை நீக்க வழி செய்ய வேண்டும். முற்றிய பகையை நீக்குவது கஷ்டமாகும். பகிடிக்கும் பகை கூடாது. அத்துடன் அரசனுக்கு உட்பகையும் இருக்கலாகாது. உட்பகை என்பது சுற்றத்தினரின் பகையை என்க. செம்புடன் சேர்ந்த மூடி புறம்பாகத் தெரியாதிருந்தாலும், அது பிரியும். அதுபோலக் கூட்டி இருந்தாலும் உட்பகை ஒரு காலத்தில் பிரியும். கெடுதலையுஞ் செய்யும். ஒரு அரசன் தன்னிலும் வலியவனுடனும், தவஞானிகளுடனும் பகைக்கக் கூடாது. இவர்களுட எதிர்தால் அரசனது செல்வம், அரசு எல்லாம் அழிந்து போம்.

இவ்வளவும் கோபத்தால் வரும் பகையைக் கூறிய வள்ளுவர் இனிக் காமத்தால் வரும் பகையைக் கூறத் தொடங்குகின்றார்.

காமம் அறிவையும், ஆக்கத்தையுங் கெடுப்பதால் அதுவும் பகையின் பாற்படும். (பெண்மை என்பது அமைதி ஆண்மை என்பது ஆளுந்தன்மை என நச்சினார்க்கினியர் கூறுகிறார்)

பெண்ணை விரும்பி அப்பெண்ணின் ஏவல் செய்யும் ஆடவன் நல்ல கருமங்களைச் செய்வான். நல்ல கருமங்களை ஆராய்ந்து செய்யும் அரசன் ஒருநாளும் பெண் ஏவல் செய்யான். தனது மனைவி (அறிவற்ற மனைவி) மீது கொண்ட ஆசையால் அவளது சொற்கேட்டு நடப்பது குற்றம் என்று வள்ளுவர் விலைமாதர் சொற்கேட்டு நடப்பது மிகப்பழியை உண்டாக்குமென்கிறார். இந்த மாதர் இருமனம் உடையவர் என்கிறார். ஒரு காலத்திலேயே ஆடவனைச் சேர்தலும், சேராமையும் உடைய இரு மனம் உடையவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். அவர்கள் பொருளை விரும்புகின்றனரே ஒழிய ஆடவனை விரும்பவில்லை. ஆனால் முழுமனதுடன் ஆடவனை விரும்பவில்லை. இதனால் இருமனம் உடையர்.

இனி, உணர்வையும், ஒழுக்கத்தையும் கெடுப்பதால் கள்ளும் பகைப் பொருளாகும் என்கிறார் வள்ளுவர்.

ஒருவன் பழைய தீவினையின் பயனாலேயே உடம்பையும் மனத்தையுங் கெடுக்கும் கள்ளை விலை கொடுத்து வாங்கி உண்கிறான். பெற்ற தாய் கூடக் கட்குடியனை வெறுப்பாள். கள்ளுண்டு களிப்பவனைத் திருத்தப் போகாதே. அப்படிப் போவது நீருள் மூழ்கியவனைத் தேட நெருப்பைக் கொண்டு போவதைப் போல இருக்கும் என்கிறார். இந்தக் கள்ளுண்டல் போல அறம், பொருள், இன்பங்கட்கு இடையூறாக உள்ள சூதும் ஒருவனுக்குப் பகையாம்.

தூண்டிலில் இட்ட இரையை மீன் விழுங்குகிறது. தூண்டில் அதன் வாயைக் கொழுவி நிற்கிறது. இதனால் தூண்டிலைக் கழற்ற முடிவதில்லை மீனால். அது போலச் சூதால் வென்ற பொருள் அவனைச் சூதினின்றும் பிரியவிடாது தடுக்கிறது. மேலும் நேரமும் போகிறது. பொருளும் தோல்வியிற் போகிறது. வெல்வது நம்பிக்கையில்லை. பாண்டவர் போலக் காட்டுக்குப் போக நேரிடும்.

இப்படி இடர் செய்யுந் தன்மை பிணிக்கும் உண்டு. இந்தப் பிணி பலவினையாலும் வரும். காரணங்களாலும் வரும். பழவினையால் வரும் பிணி வினை தீரவின் போதே நீங்கும். காரணத்தால் வரும் பிணி அக் காரணங்களை நீக்கத் தீரும். அக்காரணங்கள் உணவு, செயல் ஒவ்வாமையாகும்.

வாத, பித்த, சிலேற்பனங்களைக் கூட்டும் உணவை அளவாக உண்ண வேண்டும். நன்றாகப் பசித்தவன் மனம் போல உண்ணாது அளவாக உண்ண வேண்டும். அப்படி உண்டால் பிணிவராது.

இந்தப் பிணிக்கு மருந்து நான்கு பிரிவுடைத்து, நோயாளி, வைத்தியன், மருந்து, தாதி ஆகிய நான்கும் பிரிவுகளை உடையன.

1. நோயாளியின் வகை நான்காவன:-
    1. பொருளுடைமையனா?
    2. வைத்தியன் சொற்கேட்பானா?
    3. தனது நோயை உணர்கிறானா?
    4. மருந்தைத் தாங்குவானா?

2. வைத்தியன் வகை நான்காவன:-
    1. நோய்க்கு அஞ்சாமை
    2. ஆசிரியனை வழிபடுதலும் நுண்ணறிவும் உடைமை
    3. பல நோயை மாற்றிய அனுபவம்
    4. மனந்தூய்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மருந்தின் வகை நான்காவன:-

1. ஒரு மருந்து பலநோய்களுக்குப் பொருந்தல்.
2. சுவையுடையதாய், வீரியம் உள்ளதாய், விரைவிற் சுகந்தருவதாய் இருத்தல்.
3. இலகுவிற் கிடைத்தல்.
4. நோயாளியின் உடல் நிலைக்கு ஏற்றதாயிருத்தல்.

4. தாதியின் நிலை நான்காவன:-

1. நோயாளியிடம் அன்புடைமை.
2. மனம் தூயதாயிருத்தல்.
3. வைத்தியன் சொன்னபடி செய்தல்.
4. அறிவுடைமை.

அங்கவியல் முற்றிற்று

## 3 ஒழிபியல்

அரசியல் அங்க இயல்களில் அடங்காத பகுதிகளைக் கூறத் தொடங்கிய வள்ளுவர் முதற்கண் குடிமை பற்றிக் கூறுகின்றார்.

### குடிமை

உயர்ந்த குடி என்பது உயர்ந்த சாதியன்று. எந்தச் சாதியிற் பிறந்தாலும் நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும் உடைய ஒருவன் உயர்ந்த குடியினனாவான்.

இவன் பழிபாவங்களைச் செய்ய அஞ்சுவான். இவ்வாறு உயர்ந்த குடியில் உள்ளவனுக்கு ஒருவரும் தருமம் உபதேசிக்கத் தேவையின்று. அவனுக்கு அது இயல்பாகவே வரும். இந்த உயர் குடியிற் பிறந்தவன்மானம் உடையவனாக இருப்பான். புகழ் வருவதாயினும் இழிவான முறையிற் பொருள் தேடி உயர் குடி மகன் புகழடைய விரும்பான். பொருள் அதிகம் உள்ள போது பணிவான். வறுமையுற்றபோது பணியான். இந்த மானம் உடையவனையே பெருமை உடையன் எனக் கூறுவர். இந்தப் பெருமை உடைய பெரியர் செயற்கரிய செயல்களைச் செய்வர். தருக்கின்றி வாழ்வர். பிறர் குற்றம் கூறமாட்டார்கள். மேல் வீட்டில் உள்ள ஒருவன் பெருங்குணம் அற்றவனாய் இருப்பின் அவன் கீழானவன் ஆவான். சிறியகொட்டிலில் உள்ளவன் பெருங்குணம் உடையவனாயின் அவன் மேலானவனாவான். குடிமை, செல்வம், கல்வி இவைகளை உடையவர் தாமாகத்தருக்காது இவைகளை உடையவர் தருக்கின்றி வாழ்வதைப்பார்த்து அவர்கள் போல வாழப் பழக வேண்டும். இது அவர்கட்குப் பெருமை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பெருமையிலும் சான்றாண்மை மேலானது. பெருமையுள் அடங்காத பலகுணங்களையும் சான்றாண்மை கொண்டிருக்கிறது. இந்தச் சான்றோனிடம் நல்ல குணங்கள் எல்லாம் இயல்பாகவே அமைந்திருக்கும். அன்பு. நாண். ஒப்புரவு. கண்ணோட்டம். வாய்மை ஆகிய ஐந்து தூண்களால் ஆகிய விடாகச் சான்றோன் இருப்பான். சான்றோன் பிற உயிரை நீக்கான். பணிவுடன் இருப்பான். தனக்குத் தகுதியில்லாதவனிடம் தான் தோற்றால் அத்தோல்வியை ஏற்பான். துன்பஞ் செய்தவர்க்கும் இன்பஞ் செய்வான். உலகம் அழிந்தாலும் சொன்ன சொல் தவறான்.

இந்தப் பெருமை சான்றாண்மைகளிலும். மிகவும் மேலான பண்புடைமையாகும். பண்பெனப்படுவது எல்லார் இயல்புகளையும் அறிந்து அவர்களுடன் ஒத்து நடப்பதாகும். பண்புடையவன் நீதியுடையன். தருமம் உடையன். பகைவனுடனும் நல்லவிதமாக நடப்பான். இந்தப் பண்புள்ளவன் விளையாட்டின் கண்ணும் பிறனுக்குத் துன்பம் வரும் என்று பிறனை இகழமாட்டான.

இனி இப்படியான பண்பில்லாதவன் வைத்திருக்குஞ் செல்வம் எத் தன்மைத்து என்பதை வள்ளுவர் கூறுகின்றார். பண்பில்லாதவன் வைத்திருக்குஞ் செல்வம் ஒரு உபயோகமும் இல்லாதிருக்கும். நல்ல அழகான பெண் மணஞ்செய்யாது மூத்துத் தனித்து இருப்பது போல் அச்செல்வம் வீணாக இருந்து அழியும். நச்சுமரம் நடுவூருள் பழுத்திருப்பது போன்றும், அச்செல்வம் இருக்கும். அன்பும். அறனும் இல்லாத முறையில் தேடிய பண்பில்லாதவன் செல்வத்தைப் பிறர் அபகரிப்பர்.

மேற்கூறிய பெருமை, சாய்பு, பண்புடையவர்கள் பழியான கருமங்களைச் செய்ய நாணுவர் என்பதை நாணுடைமை என்ற அதிகாரத தில் வள்ளுவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

இந்தப் பண்பாளர் பிறர்பழி கூறமாட்டார்கள். அவர்கள் பிறரது பழியைத் தனக்கு வந்த பழிபோல அப்பழிக்கும் நாணுவர். பெண்களது நாணம் அவர்களது உடம்பு நிலையால் அவர்கள் அடையும் நாணமாகும். ஆனால் சான்றோரின் நாணம் தியகருமங்களைச் செய்ய அவர் நாணும் நாணமாகும். கொள்கை பிழைத்தால் குலங்கெட்ட தென்பதை அறியலாம். ஆனால் நாணம் இல்லை என்றால் அவன் சான்றோன் இல்லை என்பதை அறியலாம்.

ஒருவன் தனது குடி தாழ்ந்து போகிறதை உணர்ந்தால் நாணமுற்று அதை உயர்த்தப்பாடுபடுவான். என்பதை வள்ளுவர் குடிசெயல்வகை என்ற அதிகாரத்தில் கூறத் தொடங்குகின்றார்.

குடியை உயர்த்த எண்ணும் ஒருவன் முயற்சியையும் அறிவும் உடையவனாய் இருக்க வேண்டும். தன் குடியை உயர்த்த முயலும் ஒருவனுக்கு விதி (தெய்வம்) ஆடையை இறுகக் கட்டி அவன் முன்னே அவனுக்குத் துணை நிற்கும். இப்படிக் குடியை. நாட்டை உயர்த்த முயல் பவனை நல்லறிஞர்களாகிய உலகு தனது சுற்றத்தவனாக ஏத்தும் குடியை உயர்த்த எண்ணுவோன் அதற்குரிய காலம் வரட்டும் என்று வாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காது உடனடியாகவே முயல வேண்டும். இதை விடுத்துச் சோம்பல் கொண்டிருக்கக் கூடாது. அத்துடன் அந்தக் கருமத்தை இப்போது செய்தால் தனது மானம் போய்விடும் என்று பிழையாக எண்ணக் கூடாது. இப்படி இருந்தால் அவன் குடி மிகவுங் கீழ் நிலை அடைந்துவிடும்.

இவ்வாறு குடியை உயர்த்த எண்ணுபவன் எத்தொழிலைச் செய்யலாம்?

அவன் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்ற வள்ளுவர் கூற்றின்படி உழவு தொழிலையே செய்ய வேண்டும். இந்த உழவு தொழில் சிறுபான்மையாக வணிகர்க்கும் பெரும்பான்மையாக வேளாளர்க்கும் உரியது. செய்வித்தால் எல்லாருக்கும் உரியது. உலகத்தவராகிய தேருக்கு அச்சாணி போன்றது உழவு தொழிலாகும். இந்த உழவர் ஒருவரிடமும் இரக்கமாட்டார்கள். ஆனால் இரப்பவர்க்கு அவர்கள்தான் கொடுப்பார்கள். உழவர் வருமானங் குறைந்தால் துறவிகள் கூடத் தமது துறவை ஆற்ற முடியாது.

உழவன் தனது வயலை நன்றாக உழுது காயவிட்டால் அவன் ஒருபிடி எடுத்தாலும் போடாமலே வயல் செழிக்கும் உழுதலினும் எருப்பெய்தல் நல்லது. உழுதலையும் எருப்பெயதலையுஞ் செய்தவன் நாற்று நட்டபின் களை பிடுங்க வேண்டும். இப்படிக் களைபிடுங்கியபின் நீர் விடுதல் குறைந்தாலும் காவல் மிக அவசியம் செய்ய வேண்டும். இல்லானைக் காணாத இல்லத்தரசி அவனில் ஊடுதல் போல உழவன் வயலுக்கு ஒவ்வொரு நாளும் போகாதிருந்தால் அந்த வயல் அவனை வெறுக்கும். அந்த வயல் நல்ல விளைவு தராது.

எனக்கு உண்ண ஒன்றுமில்லை. ஏதுந் தாருங்கள் என்று இரப்பவரைக் கண்டால் நிலம் என்னும் நல்லாள் சிரிப்பாள் என்கிறார் வள்ளுவர்.

முந்திய அதிகாரத்தின் கடைசியில் இரப்பாரைப் பற்றிக் கூறியபடியால் வள்ளுவர் இனி இரத்தலைப் பற்றிக் கூற முற்படுகின்றார்.

இந்த நல்குரவென்ற வறுமையிலும் துன்பந் தருவது வேறு ஒன்றுமில்லை. வறுமை உள்ளவனுக்கு மறு உலக இன்பமும் இல்லை. வறியவன் நல்லதைச் சொன்னாலும் அதை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள். அறமல்லாத மறவழியில் பொருள் இழந்து வறுமையானவனை அவனது தாய் கூடப் பிறன் போல நினைப்பார். வறியவனை அவனது சுற்றத்தினர் வெறுப்பர். அவர்களாற் கைவிடப்பட்டவன் சாகாதிருந்தால் பிறருடைய உப்புக்கும் காடிக்கும் கூற்றுவனாக இருத்தற்கே என்கிறார் வள்ளுவர்.

இந்த வறுமையுடையவன் மானத்துடன் இரக்கலாம். அப்படி இருந்தால் அதை இரத்தல் என்று கூறக்கூடாது என்கிறார். அப்படி மானத்துடன் இரத்தல் என்றால் எப்படி?

இரக்கத்தக்கவரிடத்தில் இரத்தல் மானமுள்ள இரத்தலாகும். அவர் தரா விட்டால் அப்பழி அவரையே சேரும். ஒழிக்காமல் உள்ளதைக் கொடுக்கத் தக்கவரிடம் ஒரு ஏழை இரத்தல் சிறப்புள்ள இரத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஈதலுக்குச் சமம். என்று வள்ளுவர் கூறுகிறார். இந்த மானத்துடன் இரப்பவர் இருப்பதாற்றான் பொருள் உள்ள நல்லவன் புகழ் பெறுகின்றான்.

ஒரு நல்லவன் இரப்பவர்கட்குக் கொடுப்பதற்காக மெய்வருந்தி உழைக்கிறான். அவனுக்குப் போதிய பொருள் கிடைக்காது வருந்துகிறான். அப்போது ஒரு ஏழை மானத்துடன் அவனிடம் வந்து இரக்கிறான். அப்போது அந்த நல்லவன் ஒன்றுந் தர வழியில்லை என்று வருந்துகிறான். இந்த நேரத்தில் ஏழை கோபிக்கலாமா? இல்லை. தான் இல்லாது வருந்துவது போல அவனும் வருந்துகிறான் என்று அவன் வருத்தத்தைத் தன் வருத்தமாக நினைக்க வேண்டும்.

மானந்தீர இரத்தல் நல்லதென்று கூறிய வள்ளுவர் திரும்ப யோசித்து மானந்தீர இருப்பதும் நல்லதல்ல என்று முடிவு கட்டி இரவாமை என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

எவனும் இரக்க வேண்டியதில்லை. அவன் முயற்சி செய்யக் கூடிய வலிமையுடன் இருக்கும் வரையும் ஏதேனும் ஒரு முயற்சி செய்து குறைந்த வேதனமாதல் பெறலாம். அப்படிப் பெற்ற பணத்தால் ஒரு கொத்தரிசி வாங்க முடியாவிட்டால் காற்கொத்தரிசியாதல் வாங்கி எங்குங் கிடைக்கும் நீர் சேர்த்து நெருப்புமூட்டி எரித்துக் கஞ்சி காய்ச்சிக் குடித்து உயிர் வாழலாம் இக்கஞ்சி தன் முயற்சியாற் கிடைத்ததாகையால் அது அமிழ்தமாக இருக்கும்.

உலகைப் படைத்த இறைவன் ஒவ்வொரு உயிருக்கும் அது செய்த நல்வினை தீவினைக் கேற்ப வாழ்வதற்கு ஒவ்வொரு தொழிலையும் அதன் கருவிலே சேர்த்துவிடுகிறான். ஆனால் அவன் ஒருநாளும் இரக்கும் முயற்சியை எந்த உயிருக்கும் விதிக்க மாட்டான். அப்படி அவன் விதிப்பான் என்றால் அந்தக் கடவுள் தேவையில்லை. அவன் செத்துப் போகட்டும் என்கின்றார். வள்ளுவர் இதன் கருத்துதென்ன?

இறைவன் எந்த உயிருக்கும் இரத்தலை ஒரு தொழிலாக நியமிப் பதில்லை என்பதே இதன் கருத்தாகும்.

இவ்வாறு பொருட்பாலில் அரசனே பொருளுக்கு உதவியானவன் எனவும் அவனது இயல்பைக் கூறினால் பொருளைப் பற்றிக் கூறியதற்குச் சரி எனவும் கூறியதோடு அரசனைப் பற்றியும் அவனது அங்கத்தைப் பற்றியும் சிறப்புறக் கூறி எல்லா மக்களுக்கும் பொருளைத் தேடும் உபாயத்தைக் குறிப்பினாற் கூறிய வள்ளுவர்ஒழிபியலில் பொருளைத் தேடும் முறையை எல்லா மக்களுக்கும் வெளிப்படக் கூறி முடித்தார். இவ்வாறு கூறி முடித்தபின் பெரிதும் யோசித்தார். நல்ல வழியிற் பொருளைத் தேடும்படி இவ்வளவு புத்தமதிகளையும் கூறினேன். இந்தப் புத்திமதிகளைக் கேளாத ஒரு மக்கட் கூட்டமும் இவ்வுலகில் இருக்கிறதெனக் கண்டு அவர்களை அந்தத்திற் கூறுகிறார். அவர்கள் தான் கயவர்.

இந்தக் கயவர் அரசனுக்குப் பயந்து அவனுக்கு நல்லவன் போல நடிப்பார்கள். அவனிடம் யாதும் பொருள் பெற வேண்டும் என்றாலும் சிறிது நல்லவர்கள் போல உபசாரஞ் செய்வார்கள். இவர்கள் எந்த நேரமும் கோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அதன் மூலம் பொருள் பெற்று வாழ்வர். தாம் கேட்ட இரகசியத்தைப் பொருள் பெறுவதற்காக ஓடோடியுஞ் சென்று அந்த உடனேயே பிறருக்குச் சொல்வார்கள். சாப்பிட்ட ஈரக்கையைக் கூட உதற மாட்டார்கள். அதில் உள்ள சோறு பிற உயிர்கட்குப் போய்விடும் என்று எண்ணி உதறார்கள். ஆனால் அவர்களுடைய வாயில் அடித்துக் கேட்பவர்கட்கு மாத்திரம் பயந்து கொடுப்பார்கள். அவர்களுடைய நெஞ்சில் தரும சிந்தனை இருக்காது. எப்பாவத்தையும் துணிந்து செய்து மகிழ்வுடன் திரிவர். எந்த வழியாலும் தாம் விரும்பியதைப் பெற்று மகிழ்வர். இதனால் விரும்பியதைப் பெற்று வாழும் தேவர் போல இவர்களது வாழ்க்கை பார்வைக்குத் தெரியும். பிறர் உடுப்பது, உண்பதைக் கண்டால் பொறுக்காது அவர்களிடம் இல்லாத பழியையும் இருப்பதாகச் சொல்லிப் பழிப்பார்கள். தங்களுக்கு ஒரு துன்பம் வந்தால் அந்தத் துன்பத்தைச் சொல்லிப் பிறரிடும் பொருள் பெற்று மகிழ்வர்.

ஒழிபியல் முற்றிற்று

**பொருட்பால் முற்றிற்று**

# 3. காமத்துப்பால்

## 1. களவியல்

**அ**றத்தையும் பொருளையுங் கூறிவந்த திருவள்ளுவர் இனி இன்பத்தைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றார். வடநூல் வழக்குப்படி அறம் பொருள் இன்பம் எனக் கூறிய வள்ளுவர் இன்பத்தைப் புணர்ச்சி, பிரிவு என இருபிரிவாகப் பிரித்துத் தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட முறை பற்றிப் புணர்ச்சியைக் களவு என்றும் பிரிவைக் கற்பென்றுங் கூறுகின்றார். ஏனைய இருத்தல் ஊடல், இரங்கல் ஆகிய மூன்று பிரிவில் அடங்குமெனவுங் கூறுகின்றார்.

இந்தக் களவென்பது வடிவம், அழகு, குணம், குலம், அன்பு ஆகிய இவை ஒத்து நின்ற தலைவனும், தலைவியும் ஒரு தனியிடத்தில் ஊழ் வகையால் சந்தித்துக் காதல் கொள்வதாகும் என்கிறார்.

இப்படிக் கண்ட தலைவன், அத்தலைவியின் அழகு தன்னை வருத்துகிறதென்கிறான். இதைத் தகையணங்குறுத்தல் என்ற அதிகாரத்தில் எடுத்து விளக்குகிறார். இவர் இப்படி இன்பத்தைக் கூறுதலில் இரு முறை அடங்கியுள்ளது.

ஒன்று உலகநடைக்கு ஒத்துப் போகிறது. மற்றது உலகத்தவர் செயலுக்கு ஒப்பில்லாது உயர்ந்து நிற்கிறது என்பதை மனதில் வைத்துக் கொண்டு இவரது காமத்துப் பாலைப் படிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டை குறித்துப் பாகனுடன் சென்ற தலைவன் விதிவயத்தால் அவனைப்பிரிந்து ஒரு சோலையை அடைகின்றான். அங்கே பூக்கொய்யச் சென்ற தலைவி தோழியரைப் பிரிந்து தனித்து நிற்கக் காண்கிறான். கண்டதும் அவளை ஒரு தெய்வப் பெண்ணோ என்று ஐயுறுகின்றான். அவளுடைய மயில் போன்ற சாயல் அவனது மனதை மயக்குகிறது. இவனும் பார்க்க. விதி வயத்தால் அவளும் இவனைப் பார்க்கிறாள். அவளது ஒரு கண்பார்வை பொதுப்பார்வையாக இருக்கிறது. மற்றக் கண்பார்வை இவனை விரும்புவதாக இருக்கிறது. விரும்புகிற பார்வையைக் கண்டதும் தலைவன் தன்னை இவள் விரும்புகின்றான் என எண்ணுகிறான்.

இந்த இரண்டு பார்வைகளில் பொதுப்பார்வை தலைவனை நன்றாக வருத்தி விட்டது. இப்பார்வை அவனுக்கு யமன் போல அச்சத்தைக் கொடுத்தது. அத்துடன் அவள் கண் மான்கண்போன்று அங்கும் இங்கும் ஓடியபடியால் அவள் தன்னைக் கண்டு பயப்படுகிறாள் என்பதையுங் கண்டான். மற்றக் காதற் பார்வை அவனது அச்சத்தைப் போக்கி அவனுக்குக் காதலைக் கூட்டுகிறது. இதனால் அவளது மனக்குறிப்பை அறிய முற்படுகின்றான். இதைத்தான் வள்ளுவர் குறிப்பறிதல் என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

இவள் ஒரு நோக்குப் பொதுநோக்காக நோக்குகிறாள். மற்றக் கண்ணால் அன்பாகப் பார்க்கிறாள். நான் நோக்கும்போது வேறு எங்கோ பார்க்கிறாள். நான் தன்னைப் பார்க்காதபோது என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்கின்றாள். என்னைத் தனது ஒரு கண்ணைச் சிறிது சுருக்கிப் பார்த்துச் சிரிக்கிறாள். ஆதலால் இவள் என்னை விரும்புகிறாள். ஆதலால் நான் இவளை அடையலாம் என்று தலைவன் துணிகிறான். துணிந்து அவளை அணைத்து மகிழ்கிறான். பின் அந்த மகிழ்ச்சியை நினைந்து பின்வருமாறு புகழ்கிறான்.

இப்பெண் எனக்கு ஐம்புல இன்பங்களையுந் தந்தாள். எனக்கு நோயாக முன் இருந்தவள் இப்போது அந்த நோய் தீரும் மருந்தாக இருக் கிறாள். இவளை நீங்கினால் எனக்கு வெப்பமாக இருக்கிறது. இவளுக்குக் கிட்ட யான் போனால் தண்மையாக இருக்கிறேன்.

இந்த மகிழ்ச்சி தலைமகளுக்கும் இருக்கும். அவளது மகிழ்ச்சியை அவள் வாயால் சொல்ல மாட்டாள். குறிப்பினால் பிறர் அறியலாம். இப்படிப் புணர்ச்சி இன்பம் அடைந்த தலைவன் இனி. அவளது உடல் அழகைப் புகழ்ந்து கூறுகிறான்.

அனிச்சப் பூப்போல் மென்மையள். இவள் கண் குவளை மலரை வென்றது. இவளது முகம் மதியை வென்றது. இவளது பாதம் மிகவும் மென்மையானது என்கிறான்.

இனித் தலைவனும், தலைவியும் தங்கள் காதலைக் கூறுகிறார்கள். தலைவன் சொல்கிறான்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பும் உயிரும் எப்படி நட்பாக இருக்கின்றனவோ அதுபோல யானும் இவளும் காதலாக இருக்கிறோம். இவள் எனது கண்ணுள் எப்போதும் இருக்கிறாள். இவளைப் பிரிந்தால் யான் செத்து விடுவேன் போலத் தெரிகிறதே. இவளது நற்குணங்கள் எப்போதும் எனது மனதில் இருக்கின்றன.

தலைவி காதற் சிறப்புக் கூறுகிறாள்:-

எனது காதலர் எனது கண்ணுள் இருக்கிறார். நான் கண்ணுக்கு மை தீட்டேன். ஏனென்றால் நான் மை தீட்டும் போது எனது கண்மூடும். அப்படி மூடினால் எனது தலைவன் சென்று விடுவார். எனது நெஞ்சத்துள் எனது காதலர் இருக்கிறார். சூடான நீரையோ, அன்றேல் சூடான உணவையோ நான் சாப்பிடேன். ஏனென்றால் அந்தச் சூடு அவருக்குப் பிடித்து விடுமென்று உண்ணேன் என்கிறார்.

இவ்வாறு காதல் மொழி பேசும் தலைவனும் தலைவியும் சில நாட்கள் சந்தித்துக் கொள்கின்றனர்.

தலைவியின் உடல் மாறுபாடு கண்ட தோழி தலைவன் வரு போதெல்லாம் தலைவிக்கு வேறு சாட்டுச் சொல்லிப் பிரிந்து சென்று பின் வந்து சேர்கிறாள். இவ்வாறு மறைவாக விந்து திரிந்த தலைவன் காதல் மிகுதி கொண்டு யாருங் காண வந்து திரிகிறான். அவன் காம மிகுதியால் நாணைத் துறக்கிறான். தோழியைப் பார்த்துச் சொல்கிறான். 'நீ இவளை எனக்கு விவாகஞ் செய்து தர வழி செய்யாய் என்றால் யான் மடலேறுவேன் என்கிறான்.

மடலேறுவதென்றால் என்ன?

பனை மட்டையினால் குதிரை மாதிரிச் செய்து அதிலே தலைவன் ஏறிக் கையில் தலைவியின் உருவம் எழுதிய சேலையைக் கொடியாகப் பிடித்துக் கொண்டு வீதி வழியே திரிதலாகும். இதனால் ஊரவர்கள் விஷயத்தை விளங்கிக் கதைப்பர். இந்த அலரைக் கேட்டுத் தோழியும், தலைவியது பெற்றாரும் தலைவியை அவனுக்கு விவாகம் செய்து கொடுப்பர். இதற்காகவே தலைவன் மடலேற நினைக்கிறான். மேலும் தலைவன் கூறுகிறான், முன்பு நான் நாணமுடையவனாய் இருந்தேன். இப்போது அந்த நாணம் எனக்கில்லை. எனது ஆண்மையும் எங்கோ போய்விட்டது. யாமத்திலுங் கூட நித்திரை இல்லாது மடலேறுவதையே நினைக்கிறேன். ஆனால் இந்தப் பெண், கடல் போலக் காமத்தை உடையவளாயிருந்தும் மடல் ஏறாது வாளா இருக்கிறாள். பெண்மை இந்த விடயத்தில் வலிமையும் அடக்கமுங் கூடியதுதான் என்கிறான்.

இந்த நேரத்திலே தலைவிதானும் பெரிதும் வருந்துகிறேன் என்பதைப் பின்வருமாறு தோழியைப் பார்த்துச் சொல்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பெண்கள் என்னைக் கண்டு சிரிக்கிறார்கள். யான் அடையும் வேதனையைத் தாமும் படாமையினாலே என்கிறாள். இதைத் தோழி கேட்கிறாள்.

இவ்வாறு இவனுடன் களவு ஒழுக்கத்தில் நிற்க இவளும் விரும்புகிறாள். ஆனால் ஊரவர்கள் இவளும் இவனும் தொடர்புடையர் என்று கதைப்பதை இவள் கேள்விப்படுகிறாள். அவனும் கேள்விப்படுகிறான். அவன் அந்த அலரை வாழ்த்துகிறான். ஏனென்றால், இப்படி ஊரவர் கதைப்பதைக் கேள்விப்படும் போதெல்லாம் தன் தலைவியைக் கூடினது போன்று இன்பம் அடைகிறான். இன்னும் பலர் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதைப் பின்வருமாறு தலைவன் கூறுகிறான்:-

எனது தலைவியின் அருமை பெருமையை அறியாத ஊர். அவளுக்கும் எனக்கும் தொடர்பு என்று கூறுமுகத்தால் அவளைச் சாதாரண பெண்ணாகக் கருதுகிறதே என்கிறான். கள்ளுக் குடிப்பவன் வெறி ஏறியதும் மேலுங் கள்ளில் விருப்பங் கொள்ளுவது போல இந்த அலரைக் கேட்கக் கேட்க எனது தலைவிமீது ஆசை கூடுகிறதெனத் தலைவன் கூறுகிறான்.

தலைவி இந்த அலரைக் கேள்விப்பட்டுத் தலைவன் வீட்டுவளவின் வேலியின் மறைவில் நிற்பதறிந்து அவன் கேட்கத் தக்கதாகத் தனது தோழிக்குப் பின்வருமாறு கூறுகிறாள்.

நான் அவரை ஒரு நாள் கண்டேன். ஆனால் இந்த விஷயம் திங்களைப் பாம்பு கௌவ அந்தக் கிரகணம் எல்லாருக்குந் தெரிவது போலத் தெரிந்து விட்டதே என்கிறாள். இதைத் தலைவனும் கேட்கிறான். அந்த நேரத்தில் இதுதான் தக்க சமயம் என்று எண்ணித் தோழி தலைவன் கேட்கத் தக்கதாகப் பின்வருமாறு கூறுகிறாள்.

ஊரவர் அலர் எருவாக எனது தலைவியது தாயின் வெறுப்புரை நீராக என் தலைவியது காமநோயாகிய பயிர் நீழ்கிறது என்கிறாள்.

இவ்வாறு தலைவியும் தோழியும் தலைவன் கேட்கச் சொன்னது யாது கருதி?

தலைவியின் தந்தை தாய் விவாகஞ் செய்து கொடுக்க விரும்பிவில்லை. தலைவனே! நீ என் தலைவியைக் கூட்டிச் செல் என்பதற்காகவே இவ்வாறு கூறினர் என்க.

இன்னும், அத்தலைவியும், தோழியும் அவன் கேட்கத் தக்கதாக இப்படி உரையாடுகின்றனர்.

தலைவி சொல்கிறாள்:-

ஊரவர் அலருக்கு நலம் ஏன் நாண வேண்டும். என்னைக் கூடிப் பிரிந்த போது என்னைப் பார்த்துப் பெண்ணே! யான் உன்னைப் பிரியேன். நீ அஞ்சாதே என்றவர் நம்மைக் கைவிட்டபோது நாம் ஏன் நாண வேண்டும்? நாண வேண்டியதேயில்லை என்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட தோழி பின்வருமாறு அவன் கேட்கத்தக்கதாகக் கூறுகிறாள்:-

அவர் உன்னைக் கூட்டிப் போவதற்கு ஊரவர் அலரை எழுப்ப வேண்டுமென்று ஆசைப்பட்டோம். அது இப்போது நடை பெறுவதால் நமது தலைவர் நாம் கேட்டால் உன்னைக் கூட்டிப் போவார் அம்மா! பயப்படாதே என்கிறாள்.

களவியல் முற்றிற்று

## 2. கற்பியல்

வடநூல் வழக்குப்படி காமத்துப் பாலைப் புணர்ச்சி, பிரிவு வகுத்துத் தமிழ் நூல்களில் உள்ள முறைப்படிப் புணர்ச்சியைக் களவு என்றும், பிரிவைக் கற்பென்றும் குறித்துக் களவியலைக் கூறிமுடித்த பின் கற்பியலைக் கூறத் தொடங்குகின்றார் வள்ளுவர்.

களவியலின் அந்தத்தில் தலைவி காதல் மிகுதியால் தலைவனுடன் உடன்போக்குப் போதலையே சிறந்த அன்பெனக் கூறினார். இப்போது தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துகிறார்கள். தலைவன் வாளா இருந்து கொண்டு தன் தந்தை தேடிய பொருளைக் கொண்ட இல்லறஞ் செய்வது ஆண்மை அன்று. அதனால் அவன் சிற்றின்பத்திலேயே மூழ்கி இருக்காது பொருள்தேடப் பிரிய வேண்டும். இப்படிப் பிரியக் கருதிய தலைவன் தன் தலைவியைச் சில நாட்களாகப் பரிவுடன் பார்க்கின்றான். அப்பார்வை அவளுக்கு அவன் பிரிய நினைக்கிறான் என்பதை உணர்த்துகிறது. இந்தப் பிரிவை நினைக்க அவள் வருந்துகிறாள். இதனையே வள்ளுவர்பிரிவாற்றாமை என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

அந்தப் பிரிவை நேராகத் தலைவியிடம் தலைவன் சொன்னால் அவள் மயங்கி விடுவாள் என்பதை உணர்ந்த தலைவன் அவளது தோழியிடம் சொல்லத் தோழி கூறுகிறாள்:-

தலைவா! நீ பிரியவில்லை என்றால் எனக்குச் சொல். பிரிவதாயின் அதைக் கேட்டும் உயிர் வாழ்கின்றவர்கட்குச் சொல் என்கின்றாள். இதிலே தோழி தன்னைத் தலைவியின் வேறாகக் கருதாமல் கூறியமையை நாம் உணர வேண்டும். தலைவன் கூறிய பிரிவுச் செய்தியைத் தோழி தலைவியிடம் கூறக் கேட்ட தலைவி பின்வருமாறு தோழிக்குக் கூறுகிறாள்:-

தோழி! எனது தலைவன் முன்பு என்னைப் பார்த்த பார்வை நல்ல பார்வையாக இருந்ததால் புணர்ச்சியும் இன்பமாக இருந்தது. சென்ற சில நாட்களாக அவரது பார்வை ஏதோ ஒரு விதமாக இருப்பதால் முந்திய இன்பம் யான் அடையவில்லை. அது மாத்திரமல்ல. அவர் பிரியப் போகிறார் என்ற எண்ணத்தால் எனது உடம்பு மெலிந்து விட்டதற்குச் சாட்சியாக எனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் உள்ள வளையல் இதோ கழல்கிறதைப் பார். அறிவுடையர் கூடச் சொன்னசொல் மாறுவர் என்பதை இப்போது எனது தலைவன் பிரிந்ததில் இருந்து அறிகிறேன்.

இவ்வாறு சொல்லத் தோழி. தலைவியே! இப்படித் தலைவர்மார் பிரிய எத்தனையோ தலைவிமார் ஆற்றியிருப்பதை அறியாயோ எனத் தலைவி கூறுகிறார்.

பிரிவுக்கு உடன்பட்டு. அதனால் ஏற்படும் பல துன்பங்களையும் பொறுத்து உயிர் வாழ்கின்ற பெண்கள் பலர் என்கிறாய். ஆனால் என்னாலே நம்ப முடியவில்லை என்கிறாள்.

எப்படி இருந்தாலும் காம நோயைப் பிறர் அறியாமல் மறைக்க வேண்டும் அல்லவா என்று தோழி சொல்லத் தலைவி. மறைக்கிறேன். ஆனால் இறைக்கப் பட்ட கிணற்றில் ஊற்றுப் போல இந்நோய் ஊறிப் பெருகுகிறதே. யான் என் செய்ய என்கின்றாள்.

அப்படி என்றால் அவருக்குத் தூதுவிடுவோம் என்று தோழி கூற அதற்கு அவள் நாணுகின்றாள்.

யாமத்தில் நான் காம நோயால் விழித்து வருந்த நீ நன்றாகத் தூங்குகின்றாய் எனத் தோழிக்குக் கூறிய தலைவி மேலுங் கூறுகிறாள். இந்த இரவு எல்லாரையுந் துயிற்றி என்னை விழிக்கச் செய்து தனக்குத் துணையாக வைத்திருக்கிறது என்கிறாள். எனது மனம் அவர் சென்ற இடத்துக்குப் போகிறது. ஆனால் எனது கண்ணோ அப்படிப் போக முடியாமல் அழுது கொண்டிருக்கிறது. என்று தோழிக்குத் தலைவி கூறுகிறாள்.

இதைக் கேட்ட தோழி அம்மா! நீ அழுவதைக் கண்டால் ஊரவர் பகடி பண்ணுவார்கள். அழாதே என்னக் கேட்ட தலைவி கூறுகிறாள்.

பிரியமாட்டேன் என்று கூறி இப்போது பிரிந்துபோன எனது தலைவனை எனக்குக் காட்டின எனது கண் நன்றாக அழட்டும். முன்பு ஆராயாது விரைவாக நோக்கி எனக்கு ஆசையைத் தந்த கண் இப்போது அவர் பிரிந்து விட்டார் என்று அழலாமா? இது சிரிப்புக்கிடம் என்கிறாள். எனது கண் நித்திரையுஞ் செய்வதில்லை. சிறிது சிந்தித்தால் எனது கண்கள் இப்படி அழுவதும் நீர் வற்றி இருப்பதும் ஓ! ஓ!! மிகவும் நல்லதென்றுதான் நான் சொல்வேன். எனக்கு இவ்வளவு வேதனை வரக்காரணமாக இருந்த எனது கண்கள் நான் படும் வேதனை போலத் தானும் படத்தானே வேண்டும்.

இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போது தலைவன் வந்து விட்டான் என்று தோழி சொல்லக் கேட்ட தலைவி சொல்கிறாள்:- அவர் வராவிட்டால் அவரை நினைந்து நித்திரையில்லாது எனது கண்களிருக்கும். வந்து விட்டாலோ அவர் போய்விடுவாரே என நினைந்து நித்திரை செய்யாது விழித்திருக்கும் என்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தலைவன் வராதிருந்தால் தலைவி நித்திரையில்லாது வருந்துவதாலும், ஆசை மிகுதியினாலும் அவளுடைய உடலின் மேற்புறத்தில் வட்ட வட்டமான மஞ்சள் நிற தேமல் பரக்கிறது. இதனைப் பசப்பு என வள்ளுவர் கூறுகின்றார்.

இனிக் காதல் நோய் மிகுதியால் ஏற்படும் பசப்பினால் அவள் வருந்துவதைக் கூறத் தொடங்குகின்றார்.

தலைவி தனது தலைவன் பிரிய உடன்பட்டாள். சில நாட்களின் பின் அவனைப் பிரிந்த வேதனையால் தனதுடலின் நிறம் மாறுபட்டதைப் பார்த்து வேதனைப்படுவதிற் பயனில்லை எனத் தனக்குள்ளே நினைக்கிறாள்.

தோழி, தலைவியது உடல் நிறம் மாறுபட்டதைப் பார்த்து இப்படியாக வேதனைப்படுகிறாயே! என்று வருந்தத் தலைவி அவர் தந்தார் என்ற துணிவால் பசலை இப்படி ஊர்கிறது என்கிறாள். மேலும் சொல்கிறாள். அவரை நினைக்கிறேன். அவரது பெருமைகளை எல்லாம் பேசுகிறேன். அப்படியிருக்கவும் இந்தப் பசலை மாயமாக வளருகிறதே. இதற்கு யான் யாது செய்வேன் என்கின்றாள்.

அப்போது தோழி சொல்கிறாள்:-

உனது தலைவன் சில மைல் தொலைவில் தானே இருக்கிறான். அப்படி இருக்கவும் வேதனைப்படுகிறாயே என்றாள். இதைக் கேட்ட தலைவி சொல்கிறாள்:-

நீ அறிந்தும் அறியாதுரைக்கிறாய் முன்பு அவர் அங்கே போக இங்கே பசப்பு வந்ததன்றோ. மேலும் அவரும் நானும் தழுவிக் கிடந்தோம். அவர் சிறிது விலகவே என்மேனி பசப்படைந்ததே. அப்படி இருக்க நீ இப்படிக் கூறலாமா? என்றதைக் கேட்ட தோழி எப்படி இருந்தாலும் நீ பசப்படையக் கூடியதாக வருந்தினால் உலகோர் பழிப்பார்கள் என்று கூறக் கேட்ட தலைவி என்னைப் பசக்க வேண்டாம் என்று கூறுகிறாயே தவிர, அவர் பிரிந்தது பிழை என்று சொல்கிறாயில்லையே என்றாள்.

இதைக் கேட்ட தோழி தலைவியைச் சாந்தப்படுத்த "இத்தலைவன் இப்படிப் பிரிந்தானே என்று தூற்றக் கேட்ட தலைவி, "நான் பசந்தாலுங் காரியமில்லை. அவரைத் தூற்றாதிருந்தால் போதும் என்கிறாள்".

இவ்வாறு வருந்திய தலைவி சிறிது சிந்தித்து அச்சிந்தனையால் ஒன்றைக் கண்டுபிடித்தாள். "நான்தான் வருந்துகிறேன். அவர் வருந்தவில்லை" என்பது தான் அது.

ஏன்? அவன் வருந்தவில்லை. அவன் அறமும் பொருளுங் கருதிப் பிரிந்தவன். பெண்ணை நினைந்து வருந்துவது ஆண்மையன்று

இனித் திருவள்ளுவர் இவள் தனிய வருந்துவதைத் தனிப்படர் மிகுதி என்ற அதிகாரத்தில் கூற முற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி சொல்கிறாள்:- "நான் முயற்சியிற் சென்ற தலைவனை விரும்புகிறேன். அவர் இப்போது என்னை விரும்பவில்லை. அப்படி முயற்சியிற் சென்று அம்முயற்சி முடியுமுன்னே விரும்பும் தலைவர்மாரை உடைய தலைவியரே வாழ்ந்தவர் ஆவர். தலைவி வருந்துவாள் என்று அளவறிந்து வந்து தலையளி செய்யும் தலைவர் செயல் வானத்தையே நம்பி வாழும் உயிர்கட்கு அளவறிந்து அவ்வானம் பெய்வது போன்றிருக்கும் என்கிறாள்.

இந்த வேதனையிலும் தலைவனைத் தூற்றாத தலைவியைப் பார்த்துத் தோழி சொல்கிறாள்:-

"அம்மா நீ இப்படிப் பொறுமையாக இருப்பதால் உன்னைக் கற்புடை மகளிர் போற்றுவர்" என்கிறாள். இதைக் கேட்ட தலைவி "நான் விரும்பவும். அவர் விரும்பாத படியால் யான் தீவினையுடையேன்" என்கிறாள். மேலுங் கூறுகிறாள். ஆசையை ஊட்டும் மன்மதன் என்னை மாத்திரம் வருத்துகிறான். அவரை வருத்தவில்லையே என்கிறாள். இன்னும் சொல்கிறாள். அவர் வராவிட்டாலும் ஒரு கடிதமாதல் அனுப்பினால் அது எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்குமே. அது கூடப் பெறாத பாவியாகி விட்டேன். அவர் இப்போதைக்கு வரமாட்டார் என்ற சொல்லாவது கேட்டால் அது கூட எனக்கு மகிழ்ச்சியளிக்குமே. அப்படியுங் கேட்க முடியவில்லையே என்கிறாள். இறுதியாகத் தனது மனதுக்குப் பின்வருமாறு கூறுகிறாள்.

எனது மனமே! என்னை இப்போது விரும்பாதவருக்கு நீ உனது வருத்தத்தைச் சொல்ல ஆசைப்படுகிறாய். அதனாற் பயனில்லை. இப்போது உனது கடல் போன்ற துயரை அடக்க எண்ணுதி என்கிறாள்.

இவ்வாறு தலைவி தன் வீட்டில் இருந்து வருந்தினாள். இனி தலைவியும், போருக்குச் சென்று பாசறையில் இருந்து தலைவனும் ஒருவரை ஒருவர் நினைந்து புலம்புவதை நினைந்தவர் புலம்பல் என்ற அதிகாரத்தில் விளக்குகிறார்.

தலைவி அனுப்பிய தூதுவனைக் கண்ட தலைவன் அத்தூதுவனுக்குப் பின்வருமாறு கூறுகின்றான்:-

உண்டாற்றான் மகிழ்வு தருங் கள்ளிலும். நினைக்கவே மகிழ்வுதருங் காமம் சிறந்தது. ஏனென்றால் நான் எனது தலைவியுடன் சேர்ந்த இன்பத்தை நினைக்கவே அவளைக் கண்டது போல மகிழ்வு ஏற்படுகின்றது என்று கூறுகிறான். அப்படி நினைப்பதால் பிரிவுத் துயர் எனக்கு வருவதில்லை என்று கூறுகிறான்.

இனித் தலைவி என்ன சொல்லித் துயரப்படுகிறாள் என்பதைப் பார்ப்போம்.

இந்தத் தலைவி தனது தோழிக்குப் பின்வருமாறு கூறுகின்றாள்:-

எனக்குத் தும்மல் வருகிறது. ஆனால் அது இடையில் நின்று விடுகிறது. காரணம் அவர் நினைக்கிறார். பின் தனது போர்த்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு பெறாதபடியால் அந்த நினைப்பை மறக்கிறார் போல இருக்கிறது என்கிறாள். நான் அவர் செய்த அன்புச் செயலை மறவாதிருப்பதால் உயிர் வாழ்கிறேன். மறந்தால் உயிர் வாழேன். அவர் முன்பு பிரியேன் என்று கூறிய சொல்லை நினைக்க எனதுயிர் போவது போல இருக்கிறதென்றவள் சந்திரனைப் பார்த்துச் சந்திரனே! நீ மறைந்து விடாதே உன்னைப் பார்க்கும் எனது தலைவனின் கண்ணை யான் உன்னில் கண்டு ஆறுதல் அடைகிறேன் என்கிறாள்.

இவ்வாறு நனவில் நினைந்து புலம்பும் தலைவி சிறிது நித்திரை செய்யும் போது கனவில் நினைத்த நினைப்பு கனவில் அவளுக்கு வருகிறது. அக்கனவில் அவள் காண்பதைக்கனவு நிலை உரைத்தல் என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார்.

கனவில் தனது தலைவன் மிகவும் விரைவில் வருகிறேன் என்று அனுப்பிய தூதுவன் வந்து சொன்னதைக் கேட்டு இத்தூதுவனுக்கு என்ன விருந்தைச் செய்வேன் என்று தோழிக்குத் தலைவி கூறுகிறாள். மேலுங் கனவில் தலைவன் வரக்கண்டு இன்பம் அடைகிறாள். கனவு கண்டு விழித்தவள் இப்படி என்னை ஏமாற்றுகிறாரே எனது தலைவன் என்கிறாள் நனவு வராதிருந்தால் இக்கனவில் எனது தலைவனை எப்போதுங் கண்டு கொண்டிருப்பேன் அன்றோ என்கிறாள். "அம்மா! இப்படிப் புலம்பினால் உனது உடல் மெலிந்து விடும்" என்று கூறுகிறாள்.

அவர் வராது இப்படி உன்னை வருத்துகிறாரே என்று தலைவனைப் பழித்தலைப் பொறுக்காத தலைவி பின்வருமாறு கூறுகின்றாள்.

கனவில் அவரைக் காணாதபடியால் இப்படிக் கூறுகிறாய். இனிமேல் எனக்கு முன்னே அவரை இப்படித் தூற்றாதே என்கிறாள்.

இனி, கனவில் தலைவனைக் கண்டு மகிழ்ந்த தலைவி விழித்து முற்பகல் வரையும் ஆற்றி இருந்தாள். மாலைக் காலம் வந்ததும் ஆசை மிகுதியால் வருந்துகிறாள். மாலைப் பொழுதைப் பார்த்து மாலையே! நீ ஒரு காலமல்ல. நீ எனக்கு யமனாக வருத்துகிறாய் தலைவன் என்னுடன் இருந்தபோது எனக்குப் பெரிதும் இன்பஞ் செய்தாய். அவர் பிரிந்த இந்த நேரத்தில் எனக்கு வேதனை தருகிறாய். எனது தலைவன் என்னுடன் இருந்த போது காலை வந்ததும் நான் பயப்பட்டேன். ஏன்? விடிந்தபடியால் எனது தலைவன் தொழில் கருதிப் போய்விடுவார் என்று. ஆனால் அந்தக் காலை எனக்கு இப்போது அச்சந்தரவில்லை. மாலையே! நீ முன்பு இன்பஞ் செய்தாய். காதலரில்லாத இப்போது துன்பந் தருகிறாயே ஏன்? இப்படி மாறினாய் என்று மாலை கண்டிரங்கல் என்ற அதிகாரத்தில் விளக்கிய வள்ளுவர் மேலும் விளக்குகிறார்.

கனவில் தலைவனைக் கண்டு மகிழ்ந்த அந்நினைவுடன் அவன் பிரிந்த துயர் குறைந்திருப்பதால் காலையில் தலைவி தனது துயர் அரும்பாக இருக்கிறதெனவும், நேரஞ் செல்லச் செல்ல அக்கனவு நினைவு குறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நோய் போதாகிறதெனவும் மாலைவர அக்கனவு இன்பம் முற்றாக மறந்து இருக்கும் நிலையில் உலகிலுள்ள பறவை, விலங்கு, மற்றும் கணவரைப் பிரியாத பெண்கள் ஆகியோர் தங்கள் துணைவருடன் திரிவதைக் காண அந்தப் பிரிவுத் துயர் மலர்கிறதெனவும் தலைவி கூறி வருந்துகிறாள்.

இவ்வாறு புலம்புவதால் தலைவியது உடலுறுப்புகள் மெலிந்து அழகு கெடுதலைப் பற்றி வள்ளுவர் உறுப்பு நலனழிதல் என்ற அதிகாரத்தில் கூறத் தொடங்குகின்றார்.

தலைவனைப் பிரிந்தமையால் தலைவி வாடி இருப்பதைப் பார்த்துப் பின்வருமாறு தோழி கூறுகிறாள்:-

அம்மா! உனது கண் ஒளியிழந்து இருக்கிறது. உனது நெற்றியும் அப்படி ஒளியிழந்துள்ளது. உனது தோள் மெலிந்து நீ கையில் அணிந்த காப்புகள் கழல்கின்றன. இவைகளெல்லாம் உங்கள் கணவர் அன்பில்லாத கொடியவர் என்பதைக் காட்டுகின்றன என்று கூறக் கேட்ட தலைவி தோழியைப் பார்த்துத் தோழி! நீ எனது தலைவரைக் கொடியர் என்பது தான் எனக்கு மிகவுங் கவலை தருகிறதென்றாள்.

இத்தலைவியின் நிலை இப்படி இருக்க வினை முடிந்து புறப்பட நின்ற தலைவன் தன் தலைவியை நினைந்து பின்வருமாறு கூறுகின்றான்.

நான் அவளை அணைத்த கைகளை எடுக்க அவளது நெற்றி பசப்படைந்தது. நான் அவளைச் சேர்ந்து சிறிது அசையும் போது எனக்கும் அவளுக்கும் இடையில் காற்று வரவே அவளது கண்கள் ஒளியிழந்ததைக் கண்டேன். இப்போது அவளது உறுப்புகள் எப்படி இருக்குமோ நான் அறியேன் என்று வருந்தினான்.

முற்கூறியபடி உறுப்புகள் நலன் அழிந்த தலைவி ஆற்றாமை மிகுதியால் தன் நெஞ்சுக்குப் பின்வருமாறு கூறுவதை நெஞ்சொடு கிளத்தல் என்ற அதிகாரத்தில் விளக்குகிறார்.

எனது நெஞ்சே! நீ அவரை நினைந்து வருந்துவதிற் பயனில்லை. அவர் நம்மீது காதல் அற்றவராக இருக்கிறார். நீ அவரிடத்திற்குப் போகிறாய். எனது கண்ணையும் கூட்டி அவரிடம் செல்க. அவர் அன்பிலர் என்றாலும் அவரை விடுதற்கு உனக்கு வலிமையில்லை. அவர் வந்து நமக்கு இன்பந் தந்தால் முந்திய வெறுப்பை எல்லாம் அப்போது மறக்குந் தன்மையுடையை என்பதை நான் நன்கறிவேன். அவரிடம் போதற்கு நான் விரும்புகிறேன். ஆனால் நீ நிறையழிந்து போம் என்று அதற்கு உடன்படுகின்றாயில்லை. நாணையும், ஆசையையும் வைத்துக் கொண்டு என்னால் தாங்க முடியாது. இவ்விரண்டில் ஒன்றையாதல் விடுக. உனக்குள்ளே அவர் இருக்க அவரைத் தேடிப் போகும் நீ அறிவில்லாதிருக்கிறாய் என்று தன் நெஞ்சுக்குச் சொல்லித் தலைவி வருந்துகிறாள்.

இப்படித் தனது ஆசை வருத்தத்தைப் பிறருக்குக் கூறினால் தலைவியின் நிறை அழிந்து விடும். ஆனபடியால் அவள் தனது மனதுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். இப்படி மனதுக்குக் கூறுதலும் நிறை அழிவதாகும். ஆதலால் இந்த மன அடக்கம் நீங்குதலாகிய நிறை அழிவை வள்ளுவர் இனிக் கூறத் தொடங்குகின்றார்.

உமது தலைவன் பரத்தையிடம் சென்று வருகின்றான். அவனுடன் இணங்கி நடவாதே என்று தோழி தலைவிக்கு சொல்கின்றாள். கேட்டு அப்படிச் செய்கிறேன் என்று தலைவி சொல்லியிருந்தாள். ஆனால் அவன் வந்த பின் தோழிவரத் தலைவி பின்வருமாறு கூறுகிறாள்:-

தோழி! அவர் வந்ததும் ஒதுங்கி நின்றேன். எனது நெஞ்சு அவரை விரும்பினபடியால் நான் முன்பு உனக்குச் சொன்னபடி செய்ய முடியவில்லை! என் பெண்மை அழிந்து விட்டது. அவர் அளவு கடந்த அன்பு என்னிடம் வைத்திருந்ததாகக் கூற அதை நம்பிவிட்டேன் என்றாள்.

நிறை அழிந்த காரணத்தால் ஒருவரை ஒருவர் காண விரும்பு கின்றார்கள். இந்த விருப்பத்தைஅவர் வாயின் விதும்பல்என்ற அதிகாரத்தில் வள்ளுவர் விளக்குகின்றார். அவர் வருகிறாரோ என்று படலையில் நின்று ஓயாது பார்த்து எனது கண்ணும் மங்கிவிட்டது. அவர் சென்ற நாள் முதல் எனது படுக்கை அறையின் சுவரில் ஒன்று. இரண்டு என அவர் பிரிந்த நாட்களை எழுதிய அடையாளங்களை எனது விரலால்பல முறை தொட்டுத் தொட்டு எண்ணி எனது விரலும் தேய்ந்து விட்டது எனத் தலைவி கூறுகிறாள்.

எனது தலைவன் வந்தபோது அவருடன் மாறுபடுவேனோ, அல்லது அவருடன் மகிழ்வேனோ அல்லது இரண்டுங் கலந்து வாழ்வேனோ எனக்கு ஒன்றும் தெரியவில்லையே என்கிறாள்.

இப்படித் தலைவி நினைக்க, அரசனுக்கு உதவப் போர் புரியச் சென்ற தலைவன் போர் நீடித்துக் கொண்டிருப்பதால் பாசறையில் இருந்து பின்வருமாறு நினைக்கிறான்.

அந்த நேரம் ஒரு மாலைப்பொழுது. அப்போது நினைக்கிறான் பின்வருமாறு:-

அரசன் போரில் வெல்வானாக. நான் ஒரு நாள் எனது வீடு சென்று அன்று வரும் இது போன்ற மாலைப்பொழுதுக்கு வருந்திடுவேன். இன்னுங் கூறுகிறான். என்போன்ற தலைவரைப் பிரிந்திருக்குந் தலைவியர், தமது தலைவர் வரும் நாளை எண்ணுவர். அவர்களுக்கு ஒரு நாள் ஏழு நாட்களாகத் தெரியுந்தான். அதை நானும் உணர்கிறேன். இப்படித் துக்கப்பட்டு எனது தலைவி இறந்தால் நான் அங்கு செல்வதால் யாது பயனை எனது தலைவி அடைவாள். அவளுக்கு ஒரு பயனும் வராதே என்கிறான்.

இப்படி இருவரும் சேர்தற்கு ஆசை, கொண்டிருக்குங் காலத்தில் ஒரு நாள் தலைவன் வீட்டுக்கு வந்து மகிழ்ந்தான். அப்போது தலைவி சில எண்ணுகிறாள். ஆனால் அதை அவள் தலைவனுக்கு நாணத்தாற் சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இருந்தாலும் அவளது கண்பார்வையின் தன்மையில் இருந்து தலைவன் குறிப்பறிந்து அவளுக்குப் பின்வருமாறு சொல்கிறான்:-

பெண்ணே! உனது கண். எனக்கு ஏதோ ஒன்றைச் சொல்கிறது. நீ அதை ஒழிக்காது வாய் திறந்து சொல்க என்றான். அவள் சொல்லவில்லை. அவன் அதை விளங்கி விட்டான். அவளது தோழிக்கு அதை இப்படிச் சொல்கின்றான்.

நான் பிரிந்து விடுவேனோ என்ற அச்சத்தை எனது தலைவியது கண்ணும், தோளும். அவளுடைய மனமும் எனக்கு அறிவிக்கின்றன. 'அவள் வாய் திறந்து நாணத்தால் சொல்கிறாளில்லை. பளிங்கு மணியிற் கோர்க்கப்பட்ட நூல் வெளியிற் தெரிவது போல அவளது மன எண்ணம் எனக்குத் தெரிகிறதென்றான். நான் பிரிய நினைக்கவில்லை. அவள் நான் பிரியப் போகிறேன் என்று எண்ணி என்னுடன் வர எண்ணுகிறாள். இந்தக் கவலையைத் தீர்க்கும் மருந்தாக நீதான் அவளுக்குச் சொல்லி அவளது சந்தேகத்தை நீக்க வேண்டும் என்று தோழிக்குக் கூறினான்.

இதை அறிவிக்கச் சென்ற தோழிக்குத் தலைவி பின்வருமாறு கூறுகிறாள்:-

எனது தலைவன் மிகக் கூடின பரிவு காட்டுகிறான். இப்பரிவு நேற்றுத்தான் நிகழ்ந்தது. அன்றேயான் அவர் பிரிந்து விட்டார் என்றே நினைத்தபடியால் எனது மேனி ஏழு நாட்கள் முதிர்ந்து தோன்றும் பசலையை உடையதாயிருக்கிறது என்று வருத்தக் கண்ட தோழி தலைவனிடம் வந்து, அவள் தன் வளையலைப் பார்க்கிறாள். தனது தோளைப் பார்க்கிறாள். தனது அடியையும் பார்க்கிறாள். இப்படி அடியைப் பார்த்தது ஏன் என்றால் நீ பிரிந்தால் தான் உன்னுடன் போதற்கு நடக்க வேண்டும் என்று தனதடியை வேண்டியதாகும்.

இதைக் கேட்ட தலைவன் தோழியே! நான் பிரியமாட்டேன். எனது தலைவியது பெண்மையை வியக்கிறேன். ஏனெனில், நீ எனக்குக் கூறவந்த விஷயத்தை அவள் தன் வாயாற் கூறாமல் உனக்குக் கண்ணால் கூறியதை நினைந்து அவளை வியக்கிறேன் என்றான்.

இப்படிக் குறிப்பறிந்த தலைவியிடம் தோழி வந்து போன தலைவன் வந்து உன்னைக் கூடும் போது அவன் பிரியப் போகிறான் போலும் என்று வருந்திய நீ ஏன் தொடர்ந்து அவனுடன் தொடர்பாக இருக்கிறாய் என்று கேட்க. அவள் அவருடன் சேர்தலையே விரும்புகிறேன் என்று கூறும் பகுதியைப் புணர்ச்சி விதும்பல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறத் தொடங்குகின்றார்.

தோழி! கள்ளினை உண்பவன் அதனை நினைக்க உணர்வு அழியான். அதைக் காணும் போதும் உணர்வழிந்து மகிழ மாட்டான். அதைக் குடித் தாற்றான் மகிழ்வான். ஆனால் எனது ஆசை அப்படி அன்று. எனது கொண்கனை நினைக்கவே உணர்வழியாமல் களிப்படைகிறேன். அவரைக் காணும் போது உணர்வழிந்து மகிழ்கிறேன்.

மேலும் ஆசையுடைய பெண்கள் தமது ஆடவர் எத்தவறு செய்தாலும் சிறிது ஊடிப் பின் அது தணிய வேண்டும். அவரை எந்த நேரமும் எனது கண் காணவே துடிக்கிறது. ஊடவே அவரண்டை சென்றேன். ஆனால் அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் அதை மறந்து கூட எண்ணினேன். மேலும் கண்ணுக்கு மை தீட்டும் போது கண் எழுதுகோலைக் காணாது தன்னை மூடுவது போல எனது தலைவனை நான் அடையும் போது அவரது பிழை எனக்குத் தெரிவதில்லை.

இப்படித் தலைவி தோழிக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் போது தலைவன் வர அவனுக்குத் தோழி சொல்கிறாள்:-

தலைவா! உனது மார்பு கள்ளுக் குடித்து வெறியோடிருப்போருக்கு மேலுங் கள்ளைக் காண அதன் மீது பெருவிருப்புக் கொள்ளுதல் போல ஆசையுடையவர்க்கு மேலும் ஆசையை உண்டாக்குகிறது என்று கூறக் கேட்ட தலைவன் தோழி! மலரினும் மென்மையானது காமம். அந்த மென்மையைச் சிலர்தான் அறிந்து கூடி மகிழ்வர். உமது தலைவி இன்னும் அத்தன்மையை உணரவில்லை. நீயாதல் அவளுக்கு அதை விளக்குக என்கிறான்.

இவ்வாறு தலைவனைச் சேர எண்ணிய தலைவி தனது மனதுடன் வெறுத்துக் கூறுகிறாள். இதை வள்ளுவர் நெஞ்சொடு புயத்தல் என்ற அதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகிறார்:-

எனது மனமே! அவரது மனம் அவர் பக்கம் நிற்கிறது. நீ என் பக்கம் நிற்கிறாயில்லை. கெட்டுப்போன வறியவர்க்கு அவர்களது நட்பினர் அவர்களை விட்டுப் போதல் போல நாணமிழந்து கெட்டு நிற்கும் என்னைவிட்டு என் மனமே அவரைக் கண்டதும் அவர் வயன் செல்கிறாயே. இனிமேல் எம்மை விட்டுப் பிரிந்து இப்போது வந்து நிற்கும் எமது தலைவரது குறைநிறைகளை உன்னுடன் ஆராயமாட்டேன். தனியே இருந்த போது மனமே! நீ அவரை நினைந்து வருந்தினாய். அவர் வரவில்லை என்று குறை சொன்னாய். இதனால் என்னை வருத்தினாய் அவர் வந்ததும் எல்லாவற்றையும் மறந்து அவரை வரவேற்கிறாய்.

இப்படித் தலைவி தன் மனத்துடன் வெறுக்கத் தலைவன் தன் மனதுடன் சில சந்தர்ப்பத்தில் வெறுப்படைகிறான்.

தலைவியைத் தலைவன் அணைய முற்படும் போது தலைவி சிலபோது அதற்கு உடன்படாத போது, தலைவன் அவளை அன்பிலள் என்று எண்ணியுங் கூட அவளை அணைய முற்படுகிறான். அதாவது அவனது மனம் விரும்புகிறது. அந்த நேரம் தலைவன், மனமே! நீ என்ன அடக்க மில்லாதிருக்கிறாய் என்று தன் மனதுக்குச் சொல்கிறான்.

இப்படி இருவரும் நெஞ்சோடு புலந்து கொண்டிருக்கிறார்கள். தோழி தலைவியண்டை வந்து தலைவியைப் பார்த்து நீ சிறு பொழுது அவருடன் புலக்க வேண்டும் என்று கூறுகிறாள். அதைக் கேட்ட தலைவியும் அவள் சொன்னபடி தலைவனுடன் புலக்கிறாள். இப்படி நிகழும் போது தலைவனும் அவளைப் புலக்கிறான். இப்பகுதியை வள்ளுவர்புலவி என்ற அதிகாரத்தில் விளக்குகிறார்.

தோழி தலைவிக்குச் சொல்கிறாள்.

அம்மா! நாம் அவர் பிரிவால் பட்ட துயரத்தை அவரும் அடைய வேண்டும். அடைந்து அவரும் அதை உணர வேண்டும். ஆனபடியால் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபோது வெறுப்புக் காட்டுக என்கிறாள். அப்படிச் சொல்லும் போது, புலவியை அதிக நேரங் கொள்ளாதே. அப்படிப் புலந்தால் இன்பம் அடைய முடியாது என்று அறிவு கூறுகிறாள். உணவுக்கு உப்பு அளவாக இருந்தால் சுவையாக இருக்கும். அது போலப் புலவி அளவாக இருக்க வேண்டும் என்று கூறுகிறாள்.

தலைவி சிறிது நேரம் வெறுப்புக் காட்டிக் கொண்டிருக்கும் போது தலைவன் வர அவனைப் பார்த்துத் தலைவி சொல்கிறாள்:-

எனக்கு உன் பிள்ளை இருப்பதால் நான் உன்னுடன் ஊட முடியாது. நீங்கள் சென்று சந்தித்த பரத்தையர்க்கு உங்கள் பிள்ளைகள் இல்லை. நீங்கள் அவர்களை விட்டு வந்தமையால் அவர்கள் ஊடி இருக்கிறார்கள். அவர்களது ஊடலைச் சென்று நீக்குங்கள் என்றாள். இப்படிச் சொன்னவள் சிறிது நேரத்தின் பின் அவனை அணைத்தாள். பின்னர் அத்தலைவன் அவளது அருங்குணத்தை உணர்ந்து நல்ல ஆடவர்க்கு அவர்களது நல்ல மனைவியரது சிறு ஊடல் மிகவும் நல்லதே என்றான்.

அதிக நேரம் ஊடிக் கொண்டிருப்பதைத் 'துனி' என்றும், குறைந்த நேரம் ஊடுவதைப் புலவி என்றும் வள்ளுவர் கூறுகின்றார். தலைவன் தலைவியை அணைந்த பின் சொல்கின்றான்.

அளவாகக் கனிந்த பழத்தைத் தின்பது போல இருக்கும் துனியுடன் இருந்த தலைவியைத் தலைவன் கூடுவது. நல்ல பதமான காயைத் தின்பது போல இருக்கும் புலவியுடன் இருந்த தலைவியைக் கூடுவது என்கிறான்.

அதாவது, துனிக்கு மேலும், புலவிக்குக் குறைந்தும் தலைவி தலைவனை வெறுக்கக் கூடாது என்பதாகும்.

தலைவி ஊடிக் கொண்டிருக்கும் போது தலைவன் அவளைக் கூட விரைகிறான். கூடிய பின் இன்னும் சிறிது நேரம் அவள் ஊடிக் கொண்டிருக்கத் தான் விடவில்லையே எனத் துக்கப்படுகிறான். துனி என்ற அளவிலும் கூடுதலாக அவள் ஊடிக் கொண்டிருக்கத் தலைவன் வருந்துகிறான். அப்போது அவன் தன்னுள்ளே பின்வருமாறு நினைக்கிறான்:-

நான் வருந்துகிறேன் என்பதை உணராத அன்பில்லாதவளாக எனது தலைவி இருக்கிறாள் என்று மனம் நோகிறான். நிழலின் கண் உள்ள நீர் குடிக்கக் குளிர்ச்சியாக இருக்கும். அது போலப் புலவியும் நான் வருந்துவதை உணர்ந்து வருந்தும் அன்புள்ள மனைவி புலவி கொள்ளும் போதே எனக்கு இனியதாக இருக்கும். அவள் ஊடிக் கொண்டிருக்கத் தான் அவளைக் கூட நினைப்பது தனது பேராசையே ஒழிய அன்பன்று என்கிறான்.

இவ்வாறு பிரிந்து வந்த தலைவனுடன் புலந்த தலைவி அவனுடன் கூடி இருக்கிறாள். அவன் வீட்டில் இருந்து வெளியில் உலாவச் சென்று வந்து படுக்கையில் அமர்கிறான். அப்போது தலைவியும் அவன் பக்கத்தில் வீற்றிருக்கிறாள். அவனது அழகான மார்பைப் பார்த்து இரசிக்கிறாள். அடுத்த கணம் அவளது மனதில் ஒரு எண்ணம் உண்டாக அவனைப் பார்த்துத் தலைவா! எனக்கு உனது மார்பு ஆசையை உண்டாக்குகிறது. அதுபோலத்தானே நீ உலாச் சென்ற இடங்களில் உங்களைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்தையரும் உங்கள் மார்பைக் கண்டு ஆசை கொண்டிருப்பர். இது எனக்கு வேதனையாக இருக்கிறது. என்று அவன் மீது குறையில்லா திருக்கவும் புலக்கிறாள். இதைப் புலவி நுணுக்கம் என வள்ளுவர் கூறுகிறார். இது போல இன்னும் பலவற்றை நமது திருவள்ளுவர் புலவி நுணுக்கத்திற் கூறுகிறார்.

அவை பின்வருமாறு:- .

ஒரு சிறுநேரத்தின் பின் தோழிவந்து தலைவி ஊடியிருப்பதைப் பார்த்துத் தலைவனை நோக்கி. நீங்கள் பிரிந்து வந்து கூடியிருக்கும் போதும் எமது தலைவி இப்படி ஊடிக் கொண்டிருப்பதேன்? என வினவத் தலைவன் பின்வருமாறு கூறுகிறான்:-

தோழி! உமது தலைவியின் தன்மையை யான் எப்படிக் கூறுவது? எனக்குத் தும்மல் வருவது போல இருந்தது. பின் அது அடங்கிவிட்டது. அதைக் கண்ட எனது தலைவி "உமது ஆசை நாயகிகள் உன்னை நினைக்கத் தும்மல் வர எனக்குத் தெரியாதிப்பதற்காக அடக்கி விட்டீர்". என்கிறாள்.

மேலும் நான் அவளது கூந்தலில் மாலையைச் சூட்ட, இதுபோல உனக்குஞ் சூட்டுவேன் என்று நீ விரும்பிய ஒரு பெண்ணுக்குக் காட்டவா? சூட்டினீா என்கிறாள்.

மேலும் நான் அவளது கூந்தலில் மாலையைச் சூட்ட, இது போல உனக்குஞ் சூட்டுவேன் என்று நீ விரும்பிய ஒரு பெண்ணுக்குக் காட்டவா? சூட்டினீா என்கிறாள். இன்னும், யான் அவளைப் பார்த்து யாரினும், யாரினும் மேலான விருப்பம் உன்னிடமே வைத்துள்ளேன் என்ன, வேறு யார்? வேறு யார்? என்று கேட்கிறாள். இதன் பின், யான் கூறினேன். பெண்ணே! உன்னை இப்பிறவியில் மறவேன் என்று அதைக்கேட்ட அவள், "மறுபிறவியில் மறந்து விடுவீா தானே" என்கிறாள். மேலும் நான் உன்னைப் பிரிந்த காலத்தில் உன்னை நன்றாக நினைத்தேன் என்ன அவள் மறந்தபடியாற்றானே நினைத்தீா என்கிறாள். யான் தும்ம, அவள் நீடுழி வாழ்க என என்னை வாழ்த்தி விட்டு உடனே அழுதாள். ஏன் அழுகிறாய் என்று கேட்க, எந்தப் பெண் நினைக்க உங்கட்கு இத்தும்மல் வந்தது என்கிறாள்.

இவ்வாறு தலைவன் தோழிக்கு முறையிட்டான். பின்னர் தலைவன் அவ்விடத்தை விட்டுச் சென்ற பின், தோழி தலைவியிடம் சென்றபோது பள்ளியிடத்து நிகழ்ந்த செய்தியைப் பின்வருமாறு தலைவி கூறுகிறாள்.

தோழி! நானும் அவரும் ஊடி இருந்தோம். அப்போது அவர் நான் அவரை வாழ்த்தவேண்டுமென்று தும்மினார். உடனே நான் வாழ்க என்று வாழ்த்தினேன் என்றாள்.

இவ்வாறுள்ள ஊடலால் கூடல் இன்பம் சிறக்கும் என்பதை உணர்ந்த வள்ளுவர் இனிக் காமத்துப் பாலின் இறுதியாக ஊடலுவகை என்ற அதிகாரத்தில் தலைவனும் தலைவியும் ஊடலால் தமக்கு இன்பங் கூடியதெனக் கூறும் வகையை விளக்குகின்றார்.

தலைமகள் காரணமில்லாமல் தலைவனுடன் ஊடியிருப்பதை அறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி, தலைவியிடம் ஏன் இப்படி ஊடுகிறாய்? என வினவ அவள் கூறுகிறாள்:-

காரணம் இல்லாதிருக்கவும், நான் அவருடன் ஊடுகிறேன். அவர் என்னைக் கண்ணே! மணியே!! என்று அன்பு பாராட்டுதற்காக என்றாள். மேலும், நான் ஊடும் போது அவர் சிறிது வருந்துகிறார் தான். அப்படி இருந்தாலும், சிறிது நேரத்தின் பின் அவர் காட்டும் அன்பு சாதாரண அன்பிலுங் கூடுதலாக இருக்கிறது என்றாள்.

உவர் நிலத்தோடு சேர்ந்த மழைநீர் உவராகிறது. நன்னிலத்துடன் சேர்ந்து அது நன்னீராகிறது. இப்படி என்னோடு சேர்ந்து என் தன்மையாகும் எனது கணவருடன் அன்புச் சண்டை பிடிப்பதில் உள்ள இன்பம் தேவ உலகிலும் பெற முடியாது என்று தலைவி தனது தோழிக்குக் கூறினாள்.

மேலும் எனது சிறு வெறுப்பை, எனது தலைவன் என்னைப் பணியும் பணிவு நீக்குகிறது என்று கூறினாள்.

இதைக் கேட்ட தோழி இந்த ஊடலின் சிறப்பு எனக்கு இப்போதுதான் தெரிகிறது. இதை எப்போதும் செய்க என்று வாழ்த்திச் சென்றாள்.

பின்னர் தலைவன் மனைவியின் ஊடல் நீக்கிக் கூடி அந்த ஊடலால் தான் அடைந்த இன்பத்தை நினைந்து அந்த ஊடலைப் புகழ்கின்றான்.

தவறு செய்தவனும் தனது தலைவியின் ஊடலால் இன்பம் அடைகின்றான். தவறில்லாதவனும் தனது தலைவியின் ஊடலால் இன்பம் அடைகின்றான்.

பசித்துண்பவன்தான் அதிகம் உண்பான். அப்போது தான் உணவும் சுவையாக இருக்கும் அதுபோல ஊடியிருக்கும் தலைவியை, அது தணித்துக் கூடும் போதுதான் தலைவனுங் கூடிய இன்பம் அடைவான். ஊடற்போரிலே தோற்றவர் தான் வென்றவராவார். அஃதாவது, சேர்தலிற் கூடிய உவகையடைவர் என்பதாம். ஊடலின் பின் கூடி மகிழ்ந்த தலைவன் அதன் இன்பத்தை உணர்ந்து அவள் இன்னும் ஊட வேண்டும். நான் அவளைக் கூட வேண்டும் என்று விரும்புகிறான் அவள் ஊடட்டும். நான் அவளை இரக்க இந்த இரவு விடியாதிருக்கட்டும் என்கிறான். இந்த ஊடல் நல்லது! நல்லது!! என்ற தலைவன், அதைத் தலைவி அளவறிந்து நீக்குவதிலேயே இருவருக்கும் இன்பம் உண்டு என்று உணர்ந்து கூறுகிறான்.

ஊடலில் உள்ள வெறுப்பைத் தலைவி 'துணி' என்ற அளவிலும் கூட்டினால் இன்பம் உண்டாகாது. அந்த வெறுப்பைப் புலவி என்ற அளவிலும் குறைந்தாலும் இன்பம் உண்டாகாது. ஆதலால் ஊடலை அளவறிந்து நீக்கித் தலைவனும் தலைவியும் கூடுவதிலேயே பெரிய இன்பம் உண்டு என்று தலைவன் கூறினான்.

கற்பியல் முற்றிற்று.

**காமத்துப்பால் முற்றிற்று.**

## திருக்குறள் வசன சுருக்கம் முற்றிற்று.

*திருவள்ளுவர் திருவடிக்கு வணக்கம்*

*திருச்சிற்றம்பலம்.*

*வணக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United Merchants Printers ( Pvt) Ltd
No 71A, Old Moor Street,
Colombo - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org